பக்கங்கள் : முப்பது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 05 ஞாயிற்றுக்கிழமை (20.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 359

★ யுத்தம் எனது வழிமுறையல்ல! ★ நாடு பிளவுபடுவது தடுக்கப்படும்!
★ இந்தியா உட்பட ஆசிய நாடுகளோடு ஒத்துழைப்பு!

# பல தரப்புகள் பங்கேற்கும் பேச்சு

# புரிந்துணர்வு உடன்பாடு புதுப்பிப்பு!

## நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் புதிய ஜனாதிபதி மஹிந்த அறிவிப்பு

கொழும்பு,நவம்பர்20

★ தேர்தல் மூலம் மக்கள் உறுதியளித்தபடி நாடு துண்டாடப்படுவதைத் தடுக்கும் வகையில் சமாதான முயற்சிகள் அமையும்.

★ நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பாக சகல தரப்பினருடனும் புதிதாகப் பேச்சுகளை ஆரம்பிப்போம். இதுவரை இடம்பெற்ற இரு தரப்பு சமாதான செயற்பாடுகளுக்குப் பதிலாக பல தரப்பினரும் பங்கேற்கும் சமாதான முயற்சிகள் அறிமுகம் செய்யப்படும்.

★ போர் நிறுத்த உடன்படிக்கையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி அதனை மீளாய்வு செய்வதற்கும் புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த உடன்படிக்கையின் கீழ் சிறுவர்கள் படைக்குச் சேர்க்கப்படுதல், கொலை கலாசாரம் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடரப்படுவதை என்னால் அனுமதிக்கமுடியாது.

- நேற்று ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இந்த விடயங்களை அறிவித்திருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் ஐந்தாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ நேற்று நண்பகல் சுபநேரமான ஒரு மணி 14 நிமிடத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றார்.


ஜனாதிபதி மாளிகையில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா புதிய ஜனாதிபதிக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

பதவிப் பிரமாண வைபவம் முடிவடைந்ததும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றினார்.

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான சமாதான முயற்சிகள் தொடர்பாக தமது எதிர்காலத் திட்டங்களை அந்த விசேட உரையில் விளக் கினார் ஜனாதிபதி.

விடுதலைப் புலிகளுடன் மட்டும் இது

(20ஆம் பக்கம் பார்க்க)





பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் மஹிந்த ராஜபக்ஷ சத்தியப் பிரமாணம் எடுக்கும்போது...

## பருத்தித்துறையில் நேற்றிரவு கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,நவ.20

பருத்தித்துறை கல்லூரி வீதியில் அமைந்துள்ள படையினரின் காவலரண் மீது நேற்றிரவு 7 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-3)

## அம்பாறையில் முஸ்லிம்கள் நேற்றுக் கடையடைப்பு

அம்பாறை,நவ.20

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று ஜும் ஆ பள்ளிவாசல் மீது நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலைக் கண்டித்து நேற்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் கடை அடைப்பு இடம்பெற்றது; துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ-12)

## ஜனாதிபதியின் செயலாளராக லலித் வீரதுங்க

கொழும்பு,நவ.20

சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான லலித் வீரதுங்க ஜனாதிபதியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1997ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து கொண்ட இவர், பிரதமரின் பதில் செயலாளர், பிரதமமந்திரி அலுவலக மேலதிக செயலாளர், கல்வி உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் போன்ற பதவிகள் உட்படப் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

1995ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை பிரதமரின் மேலதிக செயலாளராக வீரதுங்க பணியாற்றியுள்ளார். (ஐ-12)

## அமைச்சரவை கலைந்தது

கொழும்பு,நவ.20

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றதையடுத்து அமைச்சரவை நேற்றுக் கலைக்கப்பட்டது.

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகியதையடுத்து அவரது ஒட்டுமொத்த அமைச்சரவையும் கலைந்தது. விரைவில் புதிய அமைச்சரவை அமைக்கப்படும் என்றும் புதிய வரவு - செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்படும் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஐ-3)

## அரசியல் பணியிலிருந்து ஒதுங்க ரணில் விருப்பம்



கொழும்பு,நவ.20

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியைத் துறந்துவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிவிட ரணில் விக்கிரமசிங்க விரும்புகிறார் என நம்பிக்கையான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைச் சந்தித்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஒதுங்கி ஓய்வு பெற விரும்புகிறார் என்று இணையத் தளங்களிலும் செய்தி வெளியாகி உள்ளது.

சமாதானம் மூலம் நாட்டில் அமைதியைக் கொண்டுவரும் கொள்கையில் இருந்து மாற தான் விரும்பவில்லை என்றும் -

தற்சமயம் நடந்த தேர்தலில் வாக்களித்த தன் பலனை மக்கள் விரைவில் எதிர் கொள்ளப்போகிறார்கள் என்றும் -

தமக்கு நெருக்கமானவர்களிடம் ரணில் தெரிவித்துள்ளார்.

தனது கொள்கையை மக்கள் ஆதரிக்காத நிலையில் தொடர்ந்தும் அரசியலில் பணி

(20ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் நாளை ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம்,நவ.20

எதிர்வரும் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்திற்கு முன்னோடியான மாவீரர் எழுச்சிவாரம் நாளை ஆரம்பமாகின்றது.

மாவீரர் தினத்தை மகத்தான முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் இந்த எழுச்சி நாள்களில் இடம்பெறவுள்ளன.

குடாநாட்டில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் எழுச்சிவாரத்தை ஒட்டி நாளை பல நிகழ்வுகள் நடைபெறும்.

பொது இடங்களும் மாவீரர் நினைவுத் தூபிகள் அமைந்துள்ள இடங்களும் அலங்கரிக்கப்படவுள்ளன. வீதிகளில் அலங்கார வளைவுகளும் நிறுவப்படவுள்ளன.

தேசியக்கொடியேற்றல், பொதுச்சுடரேற்றல், மலரஞ்சலி செலுத்தல் போன்ற நிகழ்வுகள் அங்கு இடம்பெறும்.

மாவீரர் வாரத்தில் சிரமதானம், போட்டிகள் ஆகியவற்றையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர்தின நிகழ்வுகளுக்காக மாவீரர் துயிலும் இல்லங்கள் புது மெருகூட்டப்பட்டுள்ளன. மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு உட்பட பல்வேறு நிகழ்வுகளை முன்னெடுக்க விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ-3-7)

# நாடு துண்டாடப்பட்டுவிடக் கூடாது என்ற மக்களின் அடிப்படை அபிலாசைக்கு ஏற்ப செயற்படுவேன்!


**நேற்று பதவியேற்ற புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரை முழுமையாக இங்கு பிரசுரமாகிறது.**



## புதிய ஜனாதிபதி மஹிந்த விசேட உரை

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக என்னைத் தெரிவு செய்த இந்த நாட்டின் லட்சக்கணக்கான மக்களுக்கு முதலில் என்னுடைய கௌரவமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வெற்றியை நோக்கி உழைத்த கூட்டணியின் சகல கட்சிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் அதேபோல் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் என்னுடைய நன்றிகளை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலில் எங்களுடைய பிரதான குறிக்கோளாக இருந்தது ஒரு கொள்கையை வெற்றியடையச் செய்யவேண்டும் என்பதேயாகும். இன்று அந்தக் கொள்கையை இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். மக்களுடைய இறைமையின் ஓர் அம்சமான வாக்குப் பலத்தின் மூலம் மக்கள் இந்தக் கொள்கையை வெற்றிபெறச் செய்துள்ளார்கள். இந்த நாட்டைப் பிளவுபடுத்தாமலும் துண்டாடாமலும் பாதுகாக்கவேண்டும் என்பதே அந்தக் கொள்கையாகும். வறுமையிலிருந்து விடுவித்து அபிவிருத்தியை நோக்கி இந்த நாட்டை வழிநடத்திச் செல்லவேண்டும் என்பதே அந்தக் கொள்கையாகும். மொத்தத்தில் புதிய இலங்கை ஒன்றை உருவாக்கு



வதே அந்தக் கொள்கையாகும். இன்று இந்த நிமிடம் முதல் இதை வெறும் தேர்தல் கொள்கையாக அன்றி இந்த நாட்டு மக்களின் கொள்கையாக முன்னுரிமை கொடுத்து செயற்படுத்தப்போவதாக நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது நாம் மீண்டும் மீண்டும் கூறிய விடயம் கௌரவமான சமாதானத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு செயற்படுவோம் என்பதேயாகும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாடு பிளவுபடக்கூடாது என்பதை ஏற்றுக்கொண்டு பெரும்பாலான மக்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர். இது இந்த நாட்டு மக்களின் பொதுவான அபிலாசையாக உள்ளது. மக்களின் இந்த பொதுவான அபிலாசையை அடிப்படையாகக் கொண்டே நான் மேற்கொள்ளவுள்ள சமாதான முயற்சிகளும் அமையும். இந்த அடிப்படையில் புதிய சமாதான செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். யுத்தம் நான் கையாளப்போகும் ஒரு வழிமுறையாக இருக்காது. நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பாகச் சகல தரப்பினரோடும் புதிய பேச்சுவார்த்தைகளை நாம் ஆரம்பிப்போம். அந்தப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் வடக்கு மக்களின் அபிலாசைகளைப் போன்று தெற்கு மக்களின் அபிலாசைகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இதுவரை இடம்பெற்ற இரு தரப்பு சமாதான செயற்பாடுகளுக்குப் பதிலாக பல தரப்பினரும் பங்கேற்கும் சமாதான செயற்பாடுகளை அறிமுகம் செய்வோம். இந்தச் சமாதானச் செயற்பாடுகளின்போது விடுதலைப் புலிகளுடன் நேரடியான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்று அமுலில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி அதனை மீளாய்வு செய்வதற்கும் புதுப்பிப்பதற்கும் நாம் நடவடிக்கைகளை எடுப்போம். இந்தச் செயற்பாடுகளின்போது எமது சின்னஞ்சிறிய நாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் இந்தியா உட்பட ஆசிய பிராந்தியத்தின் ஏனைய நட்பு நாடுகளுடனும் சர்வதேச சமூகத்துடனும் இணைந்து செயற்படுவதோடு எமது நாட்டுக்கு கௌரவமான சமாதானமொன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாம் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

### 'சுனாமி' அழிவு அபிவிருத்திக்கு விசேட அமைப்பு

சுமார் ஒரு வருடங்களுக்கு முன் எமது நாடு ஒரு பாரிய இயற்கை அனர்த்தத்துக்கு முகம்கொடுத்தது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு ஆகிய இரு பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக சகல பகுதிகளையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு என்னுடைய தனிப்பட்ட வழிகாட்டலின் கீழ் செயற்படும் விசேட அமைப்பொன்று உருவாக்கப்படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சமூக நீதியைப் பாதுகாக்கும் தனிப்பட்டவர்களின் மேம்பாடு கருதி முடியுமானவரை அவர்களுக்குச் சந்தர்ப்பங்களை வழங்கி இறுதியில் இந்த நாட்டை உலகப் பொருளாதார வலயமைப்பிற்குள் ஒரு சக்திமிக்க நாடாக மாற்றி புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அதற்கேற்றவாறு நாட்டின் சகல துறைகளையும் உள்ளடக்கிய பொருளாதாரக் கொள்கை ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கும் இன்று முதல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்காக பொருளாதாரத் துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதும் எனது நோக்கமாகும். வெளிநாட்டு முதலீடுகளைக் கவரக்கூடிய வகையில் ஆகக்கூடுதலான வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன் நோக்கம் நாட்டில் வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரத்தின் பிரதிபலன்களை எமது நாட்டு மக்கள் அனுபவிக்க வழியமைக்க வேண்டும் என்பதே ஆகும். சுதந்திரப் பொருளாதார முறையில் சகல நன்மைகளையும் இனங்கண்டு இலங்கையர்களுக்கு முன்னுரிமை அளித்து எமது நாட்டின் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளை உள்ளடக்கியதாக விரைவான பொருளாதார அபிவிருத்தி முறையை ஆரம்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

### நிர்வாகத்தில் சீரமைப்பு

இன்று செய்யக்கூடிய விடயங்களை நாளை வரை பிற்போடக்கூடாதென்பது எனது கொள்கையாகும். தாமதமின்றிச் செயற்படும்படி பௌத்த தர்மம் போதிக்கின்றது. இது அரச நிர்வாகத்துக்கும் பொருத்தமானதாகும். பொதுமக்கள் கொள்கைக்கும் ஏற்புடையதாகும். இதன் அடிப்படையில் செயற்றிறன்களுக்கு முன்னுரிமை அளித்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பொறுப்பான பல முடிவுகளை நாம் எடுக்கவேண்டி இருக்கும்.

இந்த விடயத்தில் சட்டத்தின் நிர்வாகத்தை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்திருப்பதே எமது குறிக்கோளாகும்.

நாட்டில் சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும். இந்த நியாயமான சட்டம் நாட்டின் ஜனாதிபதி முதல் சகல பிரஜைகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். சகலரும் இதனை மதிக்கவேண்டும். அரசியல் அதிகாரம் சலுகைகள் என்பனவற்றுக்காக நாட்டின் சட்டத்தை மீறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசாங்க சேவையின் சகல நிறுவனங்களிலும் நியாயமான நிர்வாகம் இடம்பெற வேண்டும் என்றும் அதற்கான வழிவகைகள் செய்யப்படவேண்டும் என்றும் நான் நம்புகின்றேன். நான் நியமிக்கவுள்ள பிரதம மந்திரியும் அமைச்சரவையும் முப்படை அதிகாரிகள் உட்பட பாதுகாப்புப் பிரிவும் பொலீஸாரும் உயர்மட்ட அரச அதிகாரிகள் முதல் கீழ் மட்ட ஊழியர்கள் வரை முழு அரசாங்க இயந்திரமும் இந்த நீதியான நிர்வாகத்தை நோக்கிச் செயற்படவேண்டும். அரசாங்க சேவை மிகவும் பொறுப்புவாய்ந்தாக இருக்க வேண்டும். லஞ்சம், ஊழல் மோசடி என்பனவற்றுக்கு இடமளிக்காமல் மக்கள் சேவையை நியாயத்துடன் புரியவேண்டும். அரசாங்க அதிகாரி அதிகாரம் பொருந்திய ஒரு நபராக அன்றி மக்கள் சேவகனாக அடையாளம் காணப்படும் பெறுமதிமிக்க நிர்வாகக் கட்டமைப்பை நோக்கி நாம் மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

அரசும் சந்தை முறையும் சிவில் சமூகமும் ஒன்றோடு ஒன்று இணைந்து பொறுப்புடன் செயற்படக்கூடிய அடிப்படை ஒன்று உருவாக்கப்படும். அரச பிரிவும் தனியார் பிரிவும் சிவில் சமூக அமைப்பும் அவசியம் இருக்கவேண்டியவைகளாகும். இவை மூன்றையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக அமைத்துக்கொள்ளவேண்டும் என் பது எனது அரசின் கொள்கையாகும்.

### சகல சமயங்களுக்கும் சம உரிமை

செயற்றிறனுக்கு மதிப்பளிக்கும் எமது எண்ணக்கருவின்படி கலாசாரம், பாரம்பரியம் என்பனவற்றையும் பாதுகாக்கவேண்டும். இதனால் என்னுடைய ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது இந்த நாட்டில் உள்ள சகல சமயங்களினதும் மேம்பாட்டுக்கான வழிமுறைகள் திறந்துவிடப்படும் என நான் குறிப்பிட்டிருந்தேன். பௌத்தனாகிய நான் கிறிஸ்தவ சமயத்தை எதிர்ப்பதாகக் கூறப்பட்டது. நான் அதிகாரத்துக்கு வந்தால் கிறிஸ்தவ, முஸ்லிம் சமயங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவேன் என்றும் பிரசாரங்கள் செய்யப்பட்டன. இவர்களோடு எனக்கு தனிப்பட்ட முறையில் வெறுப்புகள் கிடையாது. இருப்பினும் இந்த மோசமான அரசியல் கலாசாரத்தை நாம் கைவிடவேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கின்றேன். என்னுடைய நிர்வாகத்தின் கீழ். சகல சமயங்களை சேர்ந்தவர்களும் தத்தமது வணக்க ஸ்தலங்களிலும் பள்ளிகளிலும் கோயில்களிலும் தத்தமது சமயச் செயற்பாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்ளமுடியும் என நான் கூறிக்கொள்கின்றேன். சமய நடவடிக்கைகளில் தலையிடுவது அரச விவகாரமல்ல அரசாங்கம் செய்யவேண்டிய வேலைகள்நிறைய இருக்கின்றன. எனவே சகல சமயத்தலைவர்களிடமும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது உங்களுடைய உயரிய சமயங்களின் அடிப்படையில் எமது நாட்டுப் பிரஜைகளை வழிநடத்தி அவர்களது வருங்காலத் தலைமுறையினரையும் பண்பாடுமிக்கவர்களாக உருவாக்கி புதிய ஜனநாயக சமூகத்துக் ஏற்புடைய பிரஜைகளாக அவர்களை உருவாக்கவேண்டும் என்பதாகும்.

எமது பிள்ளைகளுக்கு சிறந்ததோர் நாட்டை நாம் கட்டியெழுப்புவோம் அறிவு, திறமை, என்பனவற்றுடன் கூடிய சக்திமிக்க ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்குவதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளில் நான் ஒருபோதும் பின்னிற்கப்போவதில்லை. குறிப்பிட்ட ஒரு காலப் பகுதிக்கே நான் பொறுப்பை ஏற்றுள்ளேன். அது ஆறு வருட காலமாகும். அரசியல் அதிகாரம் என்பது



ஒரு வரப்பிரசாதமல்ல. அது ஒரு தற்காலிக பொறுப்பாகும். நான் இந்த நாட்டின் அதிபதியல்ல. பொறுப்பாளி மட்டுமே நீங்கள் என்னிடம் ஒப்படைத்த நாட்டை ஒவ்வொரு நிமிடமும் பாதுகாப்பேன் என்று உங்கள் முன்னிலையில் உறுதியளிக்கின்றேன். அந்த உறுதிமொழியின் அடிப்படையில் நான் செயற்படுவேன். மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இன்று முதல் ஜனாதிபதி. இன்றுமுதல் நான் ஒரு கட்சிக்கோ, ஒரு குழுவுக்கோ உரிய தலைவன் அல்ல. அரசியல், கட்சி, நிறம், சமயம், இனம் போன்ற பேதங்களின் அடிப்படையில் நான் செயற்படப்போவதில்லை. இன்று முதல் நான் சட்டத்தின் நிர்வாகத்தின் அடிப்படையிலேயே செயற்படுவேன். மனித உரிமைகளையும் பாதுகாப்பேன்.

### ரணில் எனக்கு விரோதியல்ல

என்னோடு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தலைவரையும் நான் விரோதிகளாகக் கருதமாட்டேன். எனக்கு வாக்களித்த சகலரிடமும் நான் கேட்டுக்கொள்வது மாற்றுக் கருத்துள்ள எவரையும் துன்புறுத்தக்கூடாது என்பதே ஆகும். இதற்குப் பதிலாக நாட்டைக் கட்டிஎழுப்புவதற்கான புதிய வேலைத்திட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு பிரதான எதிர்க்கட்சியினரை நான் கேட்டுக்கொள்கின்றேன். நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப ஆகக்கூடிய ஒத்துழைப்பை வழங்குமாறும் ஐக்கிய தேசியக் கட்சியினரை நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த நாட்டின் ஊடகத் துறையினரிடமும் நான் கேட்டுக்கொள்வது ஜனநாயக அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்பாடுகளினதும் அடிப்படையிலும் பொதுவான பொறுப்புணர்வுடன் செயற்படுங்கள் என்பதே ஆகும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலானது மிக

(19ஆம் பக்கம் பார்க்க)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## பேரினவாதப் போக்கை விட்டு சமரசப்புரட்சிக்கு மஹிந்த தயாரா?

இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றுவிட்டார்.

தமிழ்த் தேசத்தை பொறுத்தவரை சிங்களத் தேசத்தில் ஆட்சியாளர் மாற்றம். அவ்வளவே.பௌத்த சிங்கள மேலாண்மைவாதப் பிடியில் அதிகம் சிக்குண்டுள்ள ஒருவரின் கைகளுக்கு ஆட்சி மாறியிருக்கிறது.பேரினவாதத் தீயை பொறுத்தவரை இலங்கைத் தீவு சட்டியிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்திருக்கின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்து இத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற ஐக்கிய சோசலிஷக் கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய கூறிய கருத்து இங்கு முக்கியமானது.

" வடக்கு - கிழக்கு சிறுபான்மையினரின் வாக்குகளை கிஞ்சித்தும் பெறாமல் - தென்னிலங்கைச் சிங்களவர்களின் வாக்குகளை மட்டும் பெற்று ஜனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டமை இலங்கை அரசியலுக்கு ஒரு சுப சகுனமல்ல. இதனால், ஏற்படும் விளைவுகளை அனைவருமே எதிர்கொள்ள வேண்டியேற்படும். சிறுபான்மையினரை மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்ப்புக் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது" - என்று சிறிதுங்க ஜயசூரிய குறிப்பிட்டிருக்கின்றார்.

பௌத்த , சிங்கள மேலாதிக்கப்போக்கின் வெளிப்பாடே - திணிப்பே - இத்தீர்ப்பு என்ற சாரப்பட அவர் வெளியிட்டிருக்கும் கருத்தின் அர்த்த பரிணாமத்தை - ஆழத்தை - தென்னிலங்கை இப்போது புரிந்து கொண்டிருக்குமோ தெரியவில்லை. ஆனால், இதன் விளைவுகள் - பெறுபேறுகள் - காலக்கிரமத்தில் ஒவ்வொன்றாக வெளிப்படும் போது அவற்றை எதிர்கொள்ளும் போது அவற்றின் வலியும் இழப்பும் வேதனையும் எப்படியிருக்கும் என்பதை தென்னிலங்கை புரிந்துகொள்ளும்; புரிந்துகொள்ள வேண்டியிருக்கும்.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தமது வெற்றியை சரியான ஒரு நிகழ்வோடு ஒப்பிட்டிருக்கின்றார்.

"இன்றைய நிலையை (வெற்றியை) பார்க்கும் போது 1956 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அமரர் பண்டாரநாயக்கவின் சமூகப் புரட்சி எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. எனது தந்தையார் டி.ஏ.ராஜபக்ஷ, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் அதில் பெரும் பங்கு வகித்தனர்."- என்று இலங்கையின் புதிய ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் கூறியது முற்றிலும் சரி.அப்போது இடம்பெற்றது சமூகப் புரட்சி என்று வெறுமனே வாய் வார்த்தைகளில் மஹிந்த ராஜபக்ஷ கூறிவிட்டாலும் ,1956 ஆம் ஆண்டு காலப் பகுதியை ஒட்டி பண்டாரநாயக்க மேற்கொண்டது என்ன புரட்சி என்பது ஈழத் தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

தமிழ் சமூகத்தை அடக்கி,ஒடுக்கி இந்த நாட்டில் இரண்டாம் தர இனமாக மாற்றும் பௌத்த சிங்கள பேரினவாத சமூகப்புரட்சியின் வித்து, முளைவிட்டு, கிளைவிட்டு, பரந்துபட்டு விருட்சமாக இந்தத் தேசத்தை ஆக்கிரமித்தது அப்போது தான்.

தனிச்சிங்களச் சட்டம் மூலம் மொழி உரிமை பறிக்கப்பட்டு, திட்டமிட்ட அரச சிங்களக் குடியேற்றங்கள் வாயிலாக தமிழர்களின் பாரம்பரிய தாயக மண் கபளீகரம் செய்யப்பட்டதும், அவர்களின் பூர்வீகப் புவியியல் நிலப்பரப்புகள் சதித்திட்டங்கள் மூலம் துண்டாடப்பட்டு சிங்கள மயப்படுத்தப்பட்டதும் பண்டாரநாயக்கவின் இந்த 'சமூகப் புரட்சி'யின் முக்கிய அம்சங்கள்.

நீர்ப்பாசனத் திட்டங்களின் பெயரால் - பசுமைப் புரட்சியின் நாமத்தால் - தமிழர் தாயகத்தை சிங்கள மயப்படுத்தும் 'சமூகப் புரட்சி' பேரினவாத அரசினால் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டதும் அப்போதுதான்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் மீது சிங்கள மேலாதிக்கத்தைத் திணித்த அந்தப்புரட்சியை இப்போது தமது வெற்றியின் போது நினைவுபடுத்துகிறார் மஹிந்த ராஜபக்ஷ.

அதேபேரினவாத வெறிக்குள் மூழ்கியிருக்கும் ஜே.வி.பி., ஜாதிகஹெல உறுமய போன்றவற்றின் வலைக்குள் சிக்கியிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, இந்தச் சமயத்தில் அந்தப் புரட்சியை நினைவுபடுத்துவதன் வாயிலாக எதை நாட்டுக்கு எடுத்துக் கூற வருகின்றார்?

அவர் எதைக் கருதினாலும் அவருக்கு சில விடயங்களை தமிழர் தேசம் சுட்டிக்காட்டி நினைவுபடுத்துவது, இந்தச் சந்தர்ப்பத்தில் அவசரமானதும் அவசியமானதும் என்று கருதுகிறோம்.

பிரிட்டனிடமிருந்து இலங்கைத் தீவுக்கு விடுதலையைப் பெற்றுத் தர உழைத்த தமிழ்த் தலைவர்கள், தீவின் சுதந்திரத்தை சிங்களவர்களுடன் சேர்ந்து நியாயமாகப் பகிர்ந்து கொள்ளலாம் என்று நம்பினார்கள்.அப்படி நம்பி ஏமாந்த ஏமாளித் தலைமைகளின் கீழ் இப்போது தமிழர்கள் இல்லை.

அன்றைய நிலைபோல சிறுபான்மையினரான தமிழர்கள் சொற்ப வாக்குகளை வைத்துக்கொண்டு அதனடிப்படையில் கெஞ்சிக் கேட்பவர்களாக இல்லை.,அதற்கும் மேலாகவும் தமக்கென ஒரு வலுவான ஆயுதப் பலத்தை வைத்துக் கொண்டு மிஞ்சி நின்று பேரம்பேசும் உச்சத்தில் அவர்கள் இருக்கின்றார்கள்.

பேரினவாதத்தைத் திணிக்கும் சிங்களத்தின் புரட்சியை முறியடிக்கும் எதிர்ப் புரட்சிக்கான வலுவோடும் வகையோடும் தமிழினம் காத்திருக்கின்றது.

ஆகவே, பண்டாரநாயக்கவின் சிந்தனையில் எழுந்த அந்தப் பேரினவாதப் புரட்சியை ஒதுக்கிவிட்டு இந்த இலங்கைத் தீவில் ஏனைய சிறுபான்மையினரோடு ஒத்திசைவாக - இணக்கமாக - அவர்களுக்கு உரியதை விட்டுக்கொடுக்கின்ற நியாயப் போக்குடன் கூடிய - ஒரு சமரசரப் புரட்சிக்கு மஹிந்த தயாராக வேண்டும்.

அதற்கு அவர் தயாராக இல்லாவிட்டால் இலங்கைத்தீவு இரண்டாகுவதற்கான புரட்சி தவிர்க்க முடியாததாக இருக்கும் என்பது திண்ணம்.

# சிங்கள வாக்குகளில் மட்டும் தங்கி ஜனாதிபதியானமை சுப சகுனமல்ல!

### எச்சரிக்கின்றார் தேர்தலில் தோல்வியுற்ற சிறிதுங்க ஜயசூரிய

கொழும்பு,நவ.20

வடக்கு-கிழக்கு சிறுபான்மையினரின் வாக்குகள் கிஞ்சித்தும் இன்றித் தென்னிலங்கைச் சிங்களவர்களின் வாக்குகளை மட்டும் பெற்று ஜனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டமை இலங்கை அரசியலுக்கு ஒரு சுப சகுனமல்ல. இதனால், ஏற்படும் விளைவுகளை அனைவரும் எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

- இவ்வாறு அரசியல்வாதிகளை எச்சரித்தார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரான சிறிதுங்க ஜயசூரிய.

தேர்தல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் தேர்தல் முடிவுகளை ஆணையாளர் அறிவித்த பின்னர் அங்கு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே சிறிதுங்க ஜயசூரிய இப்படிக் கூறினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. பெரும்பாலான தென்னிலங்கை சிங்கள மக்களின் வாக்குகளுடன் புதிய ஜனாதிபதியொருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது சுப சகுனமல்ல. வடக்கில் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறாமல் தென்னிலங்கையின் வாக்குகளை மட்டும் பெற்றுள்ளதால் ஏற்படப் போகும் விளைவுகளுக்கு நாம் அனைவரும் பதில் கூறியாகவேண்டும்.

தென்னிலங்கையின் அரசியல் பிரசாரம் சிறுபான்மையினரை மேலாதிக்கத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றதாகவே தெரிகின்றது. எனவே, தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்து இவர்களை கவனத்திற்கொள்ள வேண்டியது புதிய ஜனாதிபதி முன்னுள்ள சவாலும் பொறுப்புமாகும் .

- இவ்வாறு சிறிதுங்க ஜயசூரிய மேலும் கூறினார். (எ-க)

# வடக்கு - கிழக்கில் வாக்களிப்பு நடந்திருந்தால் ரணிலின் தோல்வியைத் தவிர்த்திருக்கலாம்

### சந்திரசேகரன் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, நவ.20

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் நாட்டில் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையுமே வேண்டி நிற்கின்றனர் என்பதை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் உணர்த்திவிட்டன.

அதேவேளை,தமிழ் பேசும் மக்களின் ஆதரவில்லாமல் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய உட்பட வெற்றிபெற்ற கட்சிகளும் புரிந்துகொள்ள வேண்டும் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கூறுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பாக சந்திரசேகரன் எம்.பி.கருத்துத் தெரிவிக்கையிலேயே இப்படிக் கூறினார்.

சந்திரசேகரன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

மலையக மக்கள் முன்னணி உட்பட மலையக அரசியல் கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று மலையக மக்கள் நூறு வீத வாக்கையும் ஐ.தே.கவுக்கு அளித்தமைக்காக, மலையக மக்கள் அனைவருக்கும் மலையக மக்கள் முன்னணி நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படை நிரந்தர வாக்குகள் அப்படியே இருக்கின்றன.

ஜே.வி.பியினர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குமாறும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாக்களிப்பதற்கு தடங்கல் ஏற்படாமல் இருந்திருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவின் தோல்வியைத் தவிர்த்திருக்க முடியும்.

அனைத்து இனமக்களையும் அரவணைக்கக் கூடிய அரசியல் நிலைப்பாடு மட்டுமே எதிர்கால அரசியல் செயற்பாட்டுக்கு வெற்றிகரமாக அமையும் என்பதை மலையக மக்கள் முன்னணி வலியுறுத்துகின்றது.

சகல அரசியல் கட்சிகளும் தொலைநோக்குப் பார்வையுடன் தங்களை சுயதரிசனம் செய்துகொள்ள இத்தேர்தல் வழி வகுத்துள்ளது என்பதையும் இந்த முடிவுகள் உணர்த்தி உள்ளன - என்றார் அவர்.

இன்று மலையக மக்கள் முன்னணியின் அரசியல் குழு கூட்டத்தையும், தொடர்ந்து அமைப்பாளர்களின் கூட்டத்தையும் நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தாங்கள் கலந்தாலோசிக்கவிருக்கிறோம் என்றும் சந்திரசேகரன் கூறினார். (எ-க)

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து ஊர்காவற்றுறையில் இயல்பு நிலை பாதிப்பு

ஊர்காவற்றுறை,நவ.20

ஊர்காவற்றுறையில் அடுத்தடுத்து இடம்பெற்று வரும் துப்பாக்கிசூட்டுச் சம்பவங்களையடுத்து பொதுமக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளதுடன் அங்கு இயல்பு நிலையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை பொதுநூலகத்திற்கு முன்பாக வைத்து இனந்தெரியாதவர்களால் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இலக்கு வைத்து தாக்கப்பட்டு வருவதுடன் அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு அங்கமாகவே ஊர்காவற்றுறை சந்தியில் நின்ற புலிகளின் ஆதரவாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் ஹெல்மட் அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிளில் முகத்தை துணியினால் மூடிக் கட்டியவாறு வந்தவர்களால் சுடப்பட்டார். எனினும் அந்த நபர் தெய்வாதீனமாக காயம் எதுவும் இன்றி உயிர் தப்பினார்.

இதே போன்று சில விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இனந்தெரியாத நபர்களால் துரத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சிலர் இது குறித்து ஊர்காவற்றுறைப் பொலீஸில் முறைபாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய நிலைமைகளை அடுத்து பொதுமக்கள் மாலை 6 மணிக்குப் பின்னர் வீதியால் நடமாட அச்சம் வெளியிட்டுள்ள துடன் வர்த்தக நிலையங்களும் மாலை 6 மணியுடன் இழுத்து மூடப்படுகின்றன. இதனால் ஊர்காவற்றுறை நகர் மாலை யானதும் வெறிச்சோடிக் காணப்படுகிறது. (எ-16)

# கலைஞர் விவரத் திரட்டுக்குரிய தகவல் சமர்ப்பிக்க ஏற்பாடு

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.20

ஆக்கும் கலைக்கும் ஆற்றுகைக் கலைக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்களின் விவரத்திரட்டை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் தமது விவரங்களைச் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் - யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் தலைவருமான க.கணேஸ் தெரிவித்தார்.

மேற்படி வரையறைக்குட்பட்டவர்களாகவுள்ள யாழ். மாவட்டத்தில் வாழ்ந்து இயற்கை எய்திய, வெளிநாடு சென்ற, இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் கலைஞர்கள் இந்த விவரத் திரட்டலில் இடம்பெறுவர்.

மேற்படி கலைஞர்கள் தமது விவரங்களைத் தாம் வசிக்கும் பிரதேச செயலர் பணிமனை அல்லது உதவிஅரச அதிபர் பணிமனையில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தரிடம் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். இதன்மூலம் வாழ்கின்ற, மறைந்த கலைஞர்களின் விவரங்களை எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிக்கக் கூடியதாக இருக் கும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.(எ-204)

**நாளை**

**கார்த்திகை 06**
**திங்கட்கிழமை**
**21.11.2005**
**திதி: பஞ்சமி**
**முற்பகல் 10.13 வரை**
**நட்சத்திரம்: புனர்பூசம்**
**காலை 07.24வரை**
**சோமவாரம்**
**சுபநேரம்: 12.10 -01.40**
**ராகுகாலம்: 07.40 - 09.10**
**(யாவும் பழைய நேரப்படி)**

# ஆறுமுகநாவலர் குருபூசைதின பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.20

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 126 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலை பற்றிய விவரம் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

கோபிகா சேனாதிராஜா (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), தர்சினி சச்சிதானந்தம் (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), குலதீஸ்வரன் சுஜீவன் (யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), சச்சிதானந்தசிவம் வேனிலன் (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி (இருவரும் மூன்றாம் இடம்).

**மத்திய பிரிவு**

சின்னத்துரை சோபிதன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கிருஷ்ணா கந்தசுவாமி (யா/மகாஜனக் கல்லூரி), ச.அகிலா (யா/சோமாஸ்கந்த கல்லூரி).

**மேற்பிரிவு**

தாரணி செல்வராசா (கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), சற்குணராசா நிகேஷ் (யா/ யாழ்ப்பாணக் கல்லூரி), லாவண்யா இரத்தினசிங்கம் (யா/ அருணோதயக் கல்லூரி), கலையரசி கணபதிப்பிள்ளை (யா/ புனித திரேசா மகளிர் கல்லூரி (இருவரும் மூன்றாம் இடம்).


பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசு பெறுவோருக்குமான பரிசில்கள் விரைவில் வழங்கப்படும் என்று சைவ பரிபாலனசபையின் தலைவரும் சபையின் பரீட்சைச் செயலாளருமான கலாநிதி வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

**உதயவாக்கு**

சேமிப்பை அலட்சியப்படுத்தி வளத்தை கொண்டுவர முடியாது.
ஆபிரகாம்லிங்கம்.

# மாவீரர் தின உரையில் பிரபாகரன் விடுக்கும் செய்தியை

# மஹிந்த பின்பற்றிச் செயற்படுவாரா? உதறி எறிவாரா?



## தமிழ்த் தரப்பின் தேர்தல் பகிஷ்கரிப்பு சிங்களத் தலைமைக்கு தந்த பாடம்

ஸ்ரீலங்காவின் ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவதற்கான தேர்தல் சூறாவளி தெற்கில் முடிவுக்கு வந்துள்ளது. சிங்கள மக்கள் தமது தலைவராக - ஜனாதிபதியாக - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தெரிவு செய்துவிட்டனர். அவர் ஜனாதிபதியாகப் பதவியும் ஏற்றுவிட்டார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாஸா, டி.பி.விஜயதுங்கா, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் வரிசையில் புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவி ஏற்றிருக்கின்றார்.

'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்', 'சமாதானத்துக்கான போர்' என்ற கோஷங்களுடன் பதவிக்கு வந்த அந்தத் தலைவர்களை விட மஹிந்த ராஜபக்ஷ, வித்தியாசமான போக்கில், "விடுதலைப் புலிகளுடன் பேசுவேன். விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேரில் சந்திப்பேன்' என்ற கோஷத்தை வார்த்தைகளில் கூறினாலும், யுத்தப் பிரகடனத்துடன் வருகின்றார் எனத் தமிழ் மக்கள் கருதினர். அது நிஜமாகிவிடும் என்றேதமிழ்மக்கள்சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

ஜனாதிபதியாகத் தெரிவான கையோடு அவர் தெரிவித்த கருத்துத்தான் தமிழ் மக்களை அந்தச் சிந்தனையோட்டத்தில் விட்டுள்ளது.

"இன்றைய நிலையைப் பார்க்கும் போது 1956 ஆம் ஆண்டில் அமரர் பண்டாரநாயக்காவின் சமூகப்புரட்சி எனது ஞாபகத்துக்கு வருகிறது. எனது தந்தையாரான டி.ஏ.ராஜபக்ஷ, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் அதில் பெரும் பங்கு வகித்திருந்தனர்'' என்று கூறியுள்ளார் மஹிந்த.

**வாராந்த அரசியல் அலசல்**

**துகா**

பண்டார நாயக்கா விதைத்த விதைதான் இன்று தமிழீழப் போராட்டம் மூகிழ்ந்து, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமாகவும் ஆயுதப் போராட்டமாகவும் விரிவடைந்துள்ள உண்மை அவருக்கு தெரிந்திருக்க நியாயம் இருக்கின்றது.

நேற்று இன்று அரசியலுக்கு வந்தவர் அல்லர் அவர். தனது 18ஆவது வயதில் அரசியலுக்கு வந்து களம் பல கண்டு சவால்களையும் எதிர்ப்புக்களையும் கண்டு முதிர்ச்சி பெற்ற தலைவர் அவர். நாட்டின் தலைவராக வந்த உடனேயே அவர் தெரிவித்திருக்கும் கருத்து, தமிழர் விவகாரத்தை அவர் அகர வரிசையில் இருந்து ஆரம்பிக்கப் போகின்றாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

### யார் இந்த மஹிந்த

1945ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி, மூத்த அரசியல்வாதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்ஆரம்பகால உறுப்பினருமான டி.ஏ.ராஜபக்ஷவின் வாரிசாகப் பிறந்த இவர், 18ஆவது வயதில் தந்தையின் மறைவுக்குப் பின்னர் பெலியத்தத் தொகுதியின் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரானார். பின்னர் தனது 24ஆவது வயதில் 1970ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். முதிந்தவர்கள்தான் நாடாளுமன்றத்தைக் கட்டிப்பிடித்திருந்த சம்பிரதாயத்தை உடைத்து இளைஞர்களும் நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்ற நிலையை உருவாக்கிய பெருமைக்குரியவரும் இவரே.

பின்னர், சட்டத்துறையில் ஆர்வம் காட்டி சட்டவாதியான அவர் 1994ஆம் ஆண்டு அமைச்சராக உயர்ந்தார். தொழில் அமைச்சராகப் பதவியேற்ற அவர், தொழிலாளர்களின் நலன்களை உறுதிசெய் யும் வகையில் தொழிற் சட்டங்களை எல்லாம் மறுசீரமைத்து தொழிலாளர் ஸ்தாபனக் கோவை ஒன்றை அறிமுகம் செய்தார். தொழிலாளர் வாழ்வில் விடிவை ஏற்படுத்தினார். அவரது அந்தக் கோவை ஊடாகவே தொழிலாளர்கள் இன்னும் பல்வேறு நன்மைகளைப் பெறக் கூடியதாக இருக்கின்றது என்பதை மறந்துவிட முடியாது.

### பல்துறைசார் அரசியல்வாதி

அதன் பின்னர் 1997ஆம் ஆண்டு மீன்பிடித்துறை அமைச்சரான இவர்,மீனவர்களின் வாழ்வில் புரட்சி ஒன்றைச் செய்தார். மாலைதீவு மீன்பிடித் தொழில்மூலம் முன்னேறி, ஆயிரக் கணக்கான கப்பல்களைக் கொண்டு உயர்ந்த நாடாகத் திகழ்வதை உதாரணம் காட்டிய இவர் இலங்கையையும் அந்த நிலைக்குக் கொண்டுவரப் பல திட்டங்களை அறிமுகப் படுத்தினார்.

அத்துடன், இவர் மீனவ சமூகம் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பு என்பதை நிலைநாட்டும் வகையில் புரட்சிகர. திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களின் வாழ்வை மேம்படுத்தினார். அவரின் புரட்சியால் வடக்கு - கிழக்கு மக்களும் ஓரளவு நன்மைகளைப் பெற்றனரேனும் முழுமையான பலன்கள் அவர்களுக்குக் கிட்டவில்லை.

தொடர்ந்து நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் பல்வேறு பதவிகளை அலங்கரித்த இவர், இன்று நாட்டின் ஜனாதிபதியாக தமது 60ஆவது வயதில் உயர்ந்துள்ளார்

"மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் சட்டங்கள் ஆகியவற்றைப் பேணும் வகையில் நாடாளுமன்றக் குழு மற்றும் பல்வேறு அமைப்புக்களிலும் அங்கம் வகித்து அந்தச் சட்டங்களின் உண்மைத் தன்மையைப் பல மட்டங்களிலும் உணர்த்தி வந்தவர்.

, இத்தகைய பல்துறை சார்ந்த, முதிர்ந்த அரசியல்வாதியான மஹிந்தவின் அடுத்த இலக்கு என்ன? அவர் சாதிக்கப்போவது என்ன? நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பாக அவரது நிலைப்பாடு என்ன? நாட்டின் பொருளாதாரத் தைக் கட்டி எழுப்ப அவரது திட்டம் என்ன? சர்வதேச உறவுகளைப் பேண அவரது யோசனை என்ன?

இவை தான் அவர் முன் இன்று எழுந்துள்ள கேள்விகள். இவற்றை ஒரு சவாலாக எடுத்து தீர்வுகளைக் காண்பாரா? அல்லது கடந்த காலத் தலைவர்கள் காட்டிய வழியில் அவரும் செல்லப் போகின்றாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப கால ஸ்தாபகர்களில் ஒருவரான தமது தந்தையின் கொள்கைகளை - கட்சியின் கொள்கைகளை ஓரங்கட்டிவிட்டு, எப்படியாவது ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்ற அவாவில் பேரினவாத சக்திகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவுடன் உடன்பாடு கண்டு தேர்தலைச் சந்தித்தவர் மஹிந்த.

அந்தப் பேரினவாதச் சக்திகளுடன் அவர் கண்ட உடன்பாடுகள் தமிழ் மக்களின் இருப்பை - அவர்களது அபிலாஷைகளைத் தகர்த்தெறியக் கூடியவையாகும்.

### மஹிந்தவின் சிந்தனை

அந்த உடன்பாடுகளுக்கு ஏற்ப அமைந்த 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்துக்கே சிங்கள மக்கள் வாக்களித்துள்ளனர். 'மஹிந்தவின் சிந்தனை' என்ற அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு எதிராக தமிழ்மக்கள் தேர்தலைப் புறக்கணித்த - பகிஷ்கரித்த நிலையில்-சிங்கள மக்கள் அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு ஆணை வழங்கியுள்ளனர் - அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் -

* இனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் ஒற்றையாட்சிக்குள் தான் இருக்கும். எந்தத் தரப்புக்கும் இலங்கைக்குள் தனியான தாயகமோ - சுயநிர்ணய உரிமையோ எதுவும் கிடையாது.
* ஐ.தே.கட்சியால் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அரச படைகள் பலவீனமாகியுள்ளன. ஜனநாயக வழியில் இருப்போரும் ஆயுதம் தூக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த உடன்பாடு உரிய முறையில் மீளாய்வு செய்யப்பட்டு சீரமைக்கப்படும். கண்காணிப்பு முறையும் மீள ஒழுங்குபடுத்தப்படும்.
* ஜனநாயக கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள், மதத் தலைவர்கள், வடக்கு-கிழக்கில் உள்ள மூவின மக்களின் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி மூன்று மாதத்தில் தேசியக் கொள்கை தயாரிக்கப்படும்.
* அதற்கு மக்களின் அனுமதி பெற சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.
* தேசியக்கொள்கையைத் தயாரிக்கும் பணி ஒரு புறம் நடக்க மறுபுறம் புலிகளுடன் நேரடியாகப் பேசுவேன். சர்வஜன வாக்கெடுப்பு அங்கீகாரத்துடன் தேசியக் கொள்கையைப் புலிகள் முன்வைப்பேன்.
* புலிகளுக்கு காலவரையறை, கால அட்டவணை ஒன்றை வழங்குவேன்.
* பிரிவினை வாதத்தைக் கைவிடுதல், ஆயுதக் களைவு, ஜனநாயகத்துக்குள் பிரவேசித்தல், இறுதித்தீர்வு அவற்றை நடைமுறைப் படுத்தல் ஆகியன தொடர்பில் திட்டவட்டமான வரையறை செய்யப்படும்.
* இந்தியாவுடனும் பேசப்படும். சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனும் ஆசிய நாடுகளுடனும் ஒத்துழைப்புக் கட்டியெழுப்பப்படும்.
* அமைதி முயற்சிகளுக்கு இணைத் தலைமை வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா, நோர்வே ஆகிய நாடுகளுடன் ஆசிய நாடுகளின் பிரவேசம் குறித்துப் பேசப்படும்.
* ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியும் விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்ட பொதுக்கட்டமைப்பு நிராகரிக்கப்படும்.



## ஒற்றையாட்சிக்குள் தீர்வு: தேர்தல் மூலம் சிங்கள மக்கள் ஆணை

ஒற்றையாட்சிக்குள் தீர்வு, எந்தத் தரப்புக்கும் தனியான தாயகமோ, சுயநிர்ணய உரிமையோ எதுவும் கிடையாது என அடித்துக் கூறும் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுச் சிங்கள மக்கள் தமது தலைவரைத் தெரிவு செய்துள்ளனர்.

இந்த விஞ்ஞாபனத்தை ஏற்று வாக்களித்ததன் மூலம் "இலங்கை, சிங்கள மக்களுக்குச் சொந்தமானது. தமிழ்மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள்தான். அவர்களுக்கு இந்த நாட்டில் இடம் இல்லை'' என்ற செய்தியை சிங்கள மக்கள் சர்வதேசத்துக்கு விடுத்துள்ளனர். சர்வதேசம் இதனைப் பகுத்து ஆராய்ந்து செயற்பட வேண்டியநிலை தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

மறுபுறத்தில் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரித்ததன் மூலம் தமிழ்மக்கள் சர்வதேசத்துக்கு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளனர்.

"சிங்களத் தலைமைகளை நம்பி ஏமாந்துவிட்டோம். ஆகவே, தனியான அரசு ஒன்றை நிறுவி சுயநிர்ணய உரிமையுடன் எமது தாயகத்தில் வாழ விரும்புகின்றோம். அதற்கு சர்வதேசம் எமக்கு உதவவேண்டும். அதற்கு அங்கீகாரம் வழங்கவேண்டும்'' இப்படித் தமிழ் மக்கள் தமது நியாயப்பாட்டை விளக்கி சர்வதேசத்துக்கு செய்தி விடுத்துள்ளனர்.

சிங்கள மக்கள் தேர்தல் மூலம் விடுத்துள்ள செய்தியை ஆய்வு செய்து தமிழர் தரப்பின் கோரிக்கையின் நியாயத் தன்மையை உணர்ந்து சர்வதேசம் தமிழ் மக்களை அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் அவர்கள்.

மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மற்றுமொரு விடயமும் முக்கியத்துவம் பெறுகின்றது. தற்சமயம் சமாதான சூழல் நிலை பெறுவதற்கு வழிவகுத்துள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கை மறு ஆய்வு செய்யப் படவேண்டும். இதையும் சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது தேர்தல் முடிவின் மூலம் உணரக் கூடிய விடயமாக உள்ளது.

யுத்த நிறுத்த உடன்பாடே நெருக்கடிக்குள்ளாகி தடம்புரண்டு செல்லும் நிலையில், அதில் திருத்தம்செய்ய முயன்றால் நிலைமை மேலும் மோசமாகி விடலாம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

### தமிழ்ச்செல்வனின் அறிவிப்பு

தேர்தல் முடிந்த கையோடு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ள கருத்து இன்றுள்ள நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

" கடந்த மூன்று வருடமாக உள்ள போர் நிறுத்தை முறித்து எமது தாயகப் பகுதியை இராணுவ ரீதியில் ஆக்கிரமிக்க முயற்சிப்பதையோ அல்லது வேறு எதாவது பாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுவதாகவோ இருந்தால் அது ஆபத்தில் சென்று முடிந்துவிடும். இந்த உண்மையான நிலைப்பாட்டை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் தொடர்பாக ராஜபக்ஷ கொண்டுள்ள கடுமையான நிலைப்பாடு, அவரது தவறான மூலோபாயமாகும்.

- இப்படி எச்சரிக்கைத் தொனியில் தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டுள்ளார். மஹிந்தவின் சிந்தனைகள் என்ற அவரது தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த மாதம் 18ஆம் திகதி

(17ஆம் பக்கம் பார்க்க)

# தமிழிசை தலைதூக்க வித்திட்ட அறிஞர் — முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார்

விபுலானந்த அடிகளின் எப்பணியை உலகம் மறந்தாலும் அவருக்கு வரலாற்றில் அழியாத இடம் கொடுத்திருப்பது அவர் யாத்த யாழ் நூலாகும். இதனை அவர் படைத்த தலையாய படைப்பு 'MaSter Piece ' என்றும் இலத்தீனில் 'Magnum OpUS' என்றும் அறிஞர் கூறுவர். அடிகளாரின் யாழ். நூல் ஆக்கத்திற்கு அருந் தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும், ஆங் கில நூல்களும் துணை நின்றது உண்மை. அவர் ஒரு இளங்கலை அறிவியல் (B.Sc.) பட்டதாரி. பெற்ற அறிவியல் அறிவு யாழின் நுணுக்கங்களை நுகர்ந்து உலகத்திற்கு உணர்த்த துணை நின்றது .

தேனூறும் மூவர் தேவாரமும், தித்திக்கும் திருவாசகமும், பக்திச் சுவை நனி சொட்டும் பரிபாடல் போன்றவையும் யாழ். நூல் பற்றிய அவரின் ஆய்வுக்குத் துணை நின்றன என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. எனினும், அவருடைய யாழ். நூலை நாம் தோய்ந்து படிப்போமாயின் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' அவரின் உள்ளத்தை முற்றாக ஆட்கொண்டதற்குச் சான்றுகள் நிறைய உண்டு.

சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுக் காதை, கானல்வரி மற்றும் ஏனைய பகுதிகளுக்கும் தமிழரின் ஆடற்கலையின் அருந்திற னையும் வியத்தகு யாழின் நுட்பத்தையும் பறைசாற்றி நிற்கின்றன. இத்தகைய செம்மை மிகு சிலப்பதிகாரம் அவர் பிறந்த 1892 ஆம் ஆண்டிலே அச்சேறி நூல் வடிவம் பெற்றிருப்பதை எண்ணிப் பார்க்கும் போது இவ்விரு நிகழ்ச்சி களுக்கும் இடையில் பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளது என்பதை அறியமுடிகின்றது.

அவ்வாறே தமிழகத்தில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் இவரது தலையாய படைப்பாகிய யாழ். நூல் அரங்கேறிய ஓரிருமாத இடைவெளியில் அவரது வாழ்வு முற்றுப்பெற்றது.

யாழ்.நூலை எமக்குத் தருவதற்காகத் தான் அவர் தோன்றி மறைந்தாரோ என்று எண்ண இந் நிகழ்ச்சி இடமளிக்கின்றது.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் கூட தனது யாழ். நூலில் 'பேரியாழ்' என்ற பகுதியில் திரு.ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் தமிழிசை மரபைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தைப் பின்வருமாறு கூறிகின்றார்.

'அமராவதி நகரில் உள்ள சிலப்பதிகார காலத்துக் கல்லோவியம் எழில்மிக்க நரம்புகள் உள்ள யாழின் உருவத்தை நமக்குக் காட்டுகின்றது. இவ் ஓவியத்தின் நிழற்படத்தினைக் கண்ணுற்ற திரு.ஆனந்தக்குமாரசுவாமி என்னும் ஈழநாட்டுப் பேரறிஞர் பழமையான  இக்கருவி சிலப்பதிகாரத்தின் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழ் நாட்டிலே வழங்கி வந்தது என்பதையும் மிகப் பழமையான இசைமரபு ஒன்று தமிழகத்தில் இருந்து இறந்தது என்பதையும் உலகிலுள்ள பேரறிஞர்களுக்கு வெளியிட்டார்.

### தமிழ்த் தொண்டே உருவமாகி ஈழத்துக்கும் புகழ் ஈட்டியவர்

ஈழம் 19 ஆம் நூற்றாண்டில் இருபெரும் தமிழ் அறிஞர்களை ஈன்றுள்ளது. இவர்கள் இருவரும் ஈழத்திலும் தமிழகத் திலும் ஏன் உலகத்திலுமே சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தயுள் ளனர். 1822 இல் தோன்றி 1879 இல் தனது 57 ஆவது வயதில் மறைகிறார் யாழ்ப்பாணம் தந்த நல்லை நகர் ஆறுமுகநாவலர். ''நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே'' என்று தமிழ் காத்த தாமோதரனார் விடுக்கின்ற வினாவும் அதில் பொதிந்துள்ள விடையும் நாவலர் யார் என்பதை உலகுக்கு ஏற்றமுற எடுத்துக் காட்டுகின்றது. எனினும் அதன் விரிவு இங்கு வேண்டாம்.

### முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்

இங்கு நாம் ஆய்வுக்கும், சிந்தனைக்கும் எடுத்துள்ள பொருள் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரைப் பற்றியதே. இவர் 'மீன் பாடும் தேன் நாடாம்' மட்டக்களப்பில் காரைதீவில் 1892 இல் தோன்றி 1947 இல் தனது 55 ஆவது வயதில் இவுலக வாழ்வை நீத்தார்.

27.03.1892 இல் பிறந்த இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மயில்வாகனன். இவர் பண்டிதர் பட்டம் பெற்றபோது '' பண்டிதர் மயில்வாகனம்'' என இவரை உலகம் அழைத்தது. இவர் யாழ்ப்பாணக் கல்லூரிகள் பலவற்றில் பயின்றதோடு, அங்கு ஆசிரியராகவும் விளங்கியுள்ளார். அதுபோல் மட்டக்களப்பிலும் பல பகுதிகளில் இவர் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இளமையிலே துறவுள்ளம் பூண்டிருந்த பண்டிதர் மயில்வாகனனார் இராமகிருஷ்ண பரமகம்சரினாலும், வீரத்துறவி விவேகானந்தராலும் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் இராமகிருஷ்ண தொண்டர் அவையுடன் (மிஷன்) தன் இதயத்தை இணைத்துக் கொண்டார். இவ் இராமகிருஷ்ண சங்கத்தினூடாக இவர் கல்வித்துறைக்கு ஆற்றிய பணி மட்டக்களப்புக் கல்வித் துறையில் ஒரு தனி இடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

ஒரு காலத்தில் மட்டக்களப்பு கல்வித் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் விளங்கியது. பின்பு கிறிஸ்தவ தொண்டர்களின் வருகையால் முன்னேற்றம் கண்டதை நாம் மறப்பதற்கில்லை. ஆனால், மதமாற்ற அடிப்படையில் தான் கல்வி வாய்ப்பினைப் பெற்றனர். இது கல்விக்காக மனமாற்றம் ஏற்படாத நிலையில் ஏற்பட்ட மதமாற்றம். இது விபுலானந்த அடிகளும் அவரைச் சார்ந்த அறிஞர்களுக்கும் விரும்பிய செயலாக அமையவில்லை. எனவேதான் விபுலானந்த அடிகள் மட்டக்களப்பு கல்லடி உப்போட்டையிலும் ''குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலையிலும்'' கல்லூரிகளைத் தோற்றுவித்துத் தமிழ் மக்களுக்குக் கல்வியைக் கொடுத்து தமிழ் மக்களின் கண்ணைத் திறந்தார்.

நாம் உலகில் எத்தகைய அறங்களைச் செய்தாலும் அவ் அறங்களின் தன்மைக்கு ஒரு எல்லையுண்டு. ஆனால் கல்வித் துறையில் நாம் ஆற்றுகின்ற பணி தான் மக்களுக்கு குறிப்பாக ஏழை மக்களுக்கு ஏற்றமிக்க வாழ்வினைக் கொடுக்கும் என்பதை நண்குணர்ந்த விபுலானந்த அடிகள் ''பாட்டிற்கு ஒரு புலவன் பாரதி'' கண்ட பின்வரும் கனவை நனவாக்குகம் முறையில் செயற்பட்டார். தமிழ் ஈழப்பகுதிகள் அனைத்திலும் கல்வி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் வகையில் விபுலானந்த அடிகளின் பணி அமைந்திருந்தது.

*'இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கியொளிர நிறுத்தல்*
*அன்னயாவினும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'*

என்ற பாரதி தன் பாடலில் தந்த வடிவத்துக்கு உணர்ச்சி செயல் வடிவம் கொடுத்தவர் நம் விபுலானந்த அடிகள்.

அவர்களின் அறிவுக் கண்ணைத் திறக்கின்ற முறையில் தம் விடுதலை வேட்கையை வெளிக்காட்டுகின்ற முறையில் பாரதியின் பாடல்களைப் பாடி இந்தியத் தேசியக்கொடியை உயர்த்தி வைத்த பெருமை இவரையே சாரும். பாரதக்கொடி பட்டொளி வீசிப்பறக்க வெள்ளையர் ஆட்சி வீழ்ச்சியுற இவர் ஆற்றிய பெருமையை எளிதில் எவரும் மறக்க முடியாது. பொதுவாக அறிஞர் உலகம் ஒதுங்கி வாழும் குற்றத்திற்கு ஆளாகுவது வழக்கம். ஆனால் நம் விபுலானந்த அடிகளோ ''அறிவுடைமைக்கு அழகு துணிவுடைமை'' என்ற வள்ளுவர் கூற்றை நினைவுகொண்டு துணிவோடு துடித்தெழுந்து ஆற்றிய பணிகள் வரலாற்றில் இடம்பெறும் நிகழ்ச்சிகளாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சுற்றாடலில் ஏழை, எளிய மக்கள் சேரியில் வாழ்ந்தனர். சேரியில் வாழ்ந்த மக்களிடம் நேரிற்சென்று அவர்களின் வறுமையைப் போக்கி அவர்கள் கல்வி வளம் பெறும் வகையில் வாழ்வில் முன்னேற இவர் ஆற்றிய பணியை இன்றும் அங்கு வாழ்கின்ற மக்கள் நன்றி உணர்வோடு நவில் கின்றனர். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர் நம் விபு லானந்த அடிகள் என்பதற்கு வேறு என்ன எடுத்துக்காட்டு தேவை?

### அடிகளாரின் கவித்துவ ஆற்றல்

அவரது தலையாய படைப்பாகிய யாழ். நூல் அவருக்கு அழியாப் புகழைத் தந்தது. எனினும், அவரது ஏனைய படைப்புகளை நாம் மறப்பதற்கில்லை. 'மதங்க சூளாமணி' அவருக்கு நாடகத் துறையில் இருந்த ஆர்வத்தையும், ஆற்றலையும் எடுத்துக் காட்டுகின்றது. அவரின் கவித்துறை ஆற்றலும் தனித்தன்மை வாய்ந்தது. அவர் நண்பர் தமிழ் அறிஞர் திரு. கந்தசு வாமி அவர்கள் மறைந்தபோது அவர் எழுதிய 'கங்கையில் விடுத்த ஓலை' என்ற கவிதை எம் நெஞ்சை கசிந்துருகச் செய்யும் இரக்க உணர்வுப் பாடலாகவும் தமிழின் உருக்கும் தன்மைக்கு எடுத் துக்காட்டாகவும் விளங்குகின்றது.

### மஹாகவி வாழ்த்தும் விபுலானந்தர்

விபுலானந்த அடிகளாரின் ஆங்கிலப் புலமை அவருடைய தமிழ்ப் புலமைக்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்ற முறையில் ஆங்கிலத்தில் இருந்து பாடல்கள் பலவற்றைக் குறிப்பாக செகப்பிரியன் பாடல்கள் பலவற்றை அவர் தமிழில் தந்ததை நாம் படிக்கின்றபோது அவற்றை

## பெரியார் நினைவு

மொழிபெயர்ப்புக் கவிதை என்று கொள்ளாது மூலக் கவிதை என்றே கொள்ளுமளவுக்கு அமைந்துள்ளன. அவரின் பாடல்களில் மூழ்கிய கவிஞர் மஹாகவி அவர்கள் அவரின் கவித்துவ ஆற்றலைப் பின்வருமாறு பாடி மகிழ்கின்றார்.

*'ஆங்கிலத்துக் கவிதை பலப்பல*
*அருமையாகத் தமிழ் செய்து தந்தனன்*
*நாங்கள் மொண்டு பருகி மகிழவும்*
*நன்று நன்றென உண்டு புகழவும்*
*திங்கனிச்சுவை கொண்டவை*
*தானுமே தீட்டினான்'*

விழுமிய நடையில் தமிழில் பல்துறைகளில் கட்டுரை வரைந்துள்ள விபுலானந்த அடிகள் அதே சொல்லாட்சித் திறத்தோடு ஆங்கிலத்திலும் ஆய்வுக்கட்டுரைகள் வரைந்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, பிரபுத்தர பாரத, இந்தியன் ரிவியூ (Indian Review) ஆகிய இதழ்களிலும் அவர் வரைந்துள்ள கட்டுரைகள் எம் சிந்தனைக்கு விருந்தாகும். எடுத்துக்காட்டாக அண்ணாமலைப் பல்கலைக்கழக இதழில் முதலில் வெளிவந்த பின்பு 'தமிழ்ச்சால்பு' (Tamil Culture) இதழில் வெளிவந்த The Deve -lopment Of Tamilian Religious Thought (தமிழர் சமய சிந்த னையின் வளர்ச்சி) என்ற கட்டுரை அவரது ஆழ்ந்த தமிழ்ப் பற்றுக்கும் ஆய்வுள்ளத்துக்கும் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இக் கட்டுரையில் நச்சினார்க்கினியாரை மேற்கோள்காட்டி வியாசருக்கு முன்பு தொல்காப்பியர் இருந்தார் என்பதை எடுத்துக்காட்டுகின்றார். அவரின் கட்டுரையில் முருக வழிபாட்டின் சிறப்பு பேசப்படுகின்றது. அத்தோடு சுருக்கம், விளக்கம், தெளிவு தருகின்ற சங்க நூல்களின் சிறப்பு செப் பப்படுகின்றது. இக்கட்டுரையில் சித்தாந்தம் விளக்கப்படுகிறது. வேதாந்தத்தின் இயல்பு கூறப்படுகின்றது. தமிழுக்கு வருகை தந்த புத்தமும் , சமணமும் ஏற்படுத்திய தாக்கத்தையும் விளக்கியுள்ளார், மெய்மறந்த நிலையில் இக்கட்டுரையில் திருவள்ளுவரின் அளவிடற்கரிய பெருமையை விவரித்துள்ளார்.


"பிறநாட்டார் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' அத்தோடு இறவாத புகழுடைய தமிழ் இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும் என்பது கவிஞர் பாரதியின் விடுதல் அறியாவிருப்பம். இவற்றை நினைவு கொண்டு 1936 இல் தமிழில் கலைச்சொல் ஆக்கமாநாடு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் தலைமையில் நடைபெற்றது. காலத்தின் கருத்தோட்ட வளர்ச்சிக்கு ஏற்ப தமிழை எப்படி வளம்படுத்தவேண்டும் என்பது பற்றி அன்று அவர் ஆற்றிய உரை இன்றும் எம் தேவையை நிறைவேற்றும். அது மீண்டும் படிக்க வேண்டியதனாக சார்ந்த உரை யாக விளங்குகின்றது.

அவர் படைத்த நூல் அவருக்கு அழியாப் புகழைத்தந்துள்ளதை நாடும், நானிலம் ஏற்கும். ஆனால், அது கொண்டு அவரின் புகழை அவ்எல்லைக்குள் வைத்திருப்பது தவறு. அவர் தொடாத துறையும் இல்லை. தொட்டுத் துலங்காத துறையும் இல்லை எனக் கூறவதற்கமைய அனைத்துத் துறைகளிலும் அவர் பணி துலங்கியது. துறவறம் பூணுவது யார்க்கும் எளிது. ஆனால் உண்மத்த துறவியாக வாழ்தல் என்பது எல்லேரும் கடைப்பிடிக்கத் தக்க நெறியல்ல. ஆனால் குறிப்பிடத்தக்க அளவு உள்ளும், புறமும் தூய்மையாகத் துலங்கும் துறவியாக விளங்கியது இவர் தூயோன் அருளை நாடிநின்றார்.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே. தன் கடன் அடியேனைத் தாங்குதல்'' என்ற அப்பர் கூற்றுக்கு இலக்காக வாழ்ந்த விபுலானந்த அடிகள் இறைவனைப் பற்றி எண்ணுகின்றபோதெல்லாம் தான் இயற்றிய பின்வரும் பாடலையே அவர் அடிக்கடி உச்சரித்து இறையருளில் தோய்வதுண்டு. மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள அவர் நினைவிடத்தில் (சமாதி) இப்பாடல் பொறிக்கப் பட்டுள்ளது.

*'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ளல் பிரானார்க்கு வாய்த்த மலர் எதுவோ*
*வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலரும் அல்ல*
*உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'*

இப்பாடலில் கூறியதற்கமைய வேறு எதனையும் வேண்



டாது நின்ற நம் விபுலானந்த அடிகள் தம் உள்ளக் கமலத்தை இறைவனிடம் ஒப்படைக்கும் நோக்குடன் 19.07.1947 இல் இறைவன் திருவடியில் அமைதி கண்டார்.

### கவிஞன் தமிழோவியன் காணும் விபுலானந்த அடிகள்

கிழக்கெழுங் கதிராய் நாட்டில் கிளம்பிய விபுலானந்த அடிகள் முழங்கிய தமிழின் மேன்மையை முழு உலகமும் அறிந்த நிலையிலும் இங்குள்ளோர் அறிய வேண்டியளவிற்கு அறியாதது வருந்தத்தக்கதே. அறிவியற் பட்டம் பெற்ற ஆய்ந்திடும் புலமை கொண்டவர். திறம்மிகு யாழ்.நூல் தந்தே முத்தமிழ் இசையை வளர்த்தவர். அறமிகு அறிவின் பாலது இதுவென எமக்கு எடுத்துக்காட்டியவர்.

*'' தோற்றத்தில் துறவியாகி, தமிழ்த்*
*தொண்டுக்கே உருவமானோன்*
*ஏற்றத்தை இலங்கை மக்கள்*
*இன்னுமோ அறியவில்லை*
*சாற்றுவோம் அடிகளார் மாண்பைச்*
*சரித்திரம் தீட்டிக்காட்டி*
*ஏற்றுவோம் புகழ்க் கொடிதான்*
*எங்கள் விபுலானந்தருக்கே''*

என்று தகைசான்ற கவிஞன் ''தமிழோவியன்'' சாற்றும் கருத்தை ஏற்ற ' தமிழ்த் தொண்டின் உருவமான விபுலானந்தர்' புகழை வியந்து ஏற்றி வீறு கொண்டு எழுந்து தமிழ் ஈழத்தி அவர் புகழ் நிலமிசை நீடுவாழ நிலைக்க பணியாற்றுவோமாக.

**-மா.க.ஈழவேந்தன்**

---

**எகிப்து - காஸா.....**

(07பக்கத் தொடர்ச்சி)

வருட காலத்தில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் எதுவும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

பார்க்கப்போனால் ஆழிப்பேரலை அனர்த்தம், பூமி அதிர்ச்சி, வெள்ளப்பெருக்கு போன்ற காரணிகளால் இந்த நாடுகளில் வறுமை மேலும் அதிகரித்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

வறுமையை ஒழிப்பது என்பது ஒரு புறமிருக்க, இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பேரழிவு ஆயத்த நிலைக்கான மையம் ஒன்றை அமைப்பதென்று 'சார்க்' தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர். கடந்த டிசெம்பரில் ஏற்பட்ட ஆழிப்பேரலை, கடந்த மாதம் காஷ்மீரில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சிபோன்ற இயற்கை அனர்த்தங்களை உத்தேசித்து இந்த மையம் ஏற்படுத்தப்படவிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இம்மையம் எந்த முறையில் செயற்படும், அதன் பணிகள் எவ்வாறு இருக்கும் என்பது தெரியவில்லை.

'சார்க்' சங்கத்தில் நேபாளம் புதிய உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இந்த நாடுகளில் காணப்ப டும் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்வதற் கான பல்வேறு கூட்டுமுயற்சிகள் பற்றியும் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பொருளாதாரமட்டத்தில், தடைபட்டுள்ள தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அமுல்படுத்துவது பற்றியும் தலை வர்கள் ஆராய்ந்துள்ளனர். 2006ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வகையில் காரியம் ஆற்றவும் அவர்கள் உடன்பட்டுள்ளனர்.

மாநாட்டின் இறுதி அமர்வில் தீர்மான அறிக்கையை வாசித்த மாநாட்டின் தலைவர் பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலீதா ஷியா, அடுத்த பத்து ஆண்டுகளை ''வறுமை ஒழிப்புக்கான சார்க் சகாப்தம்'' எனப் பிரகடனப்படுத்துவதாகக் கூறினார்.

'சார்க்' நாடுகளின் வான் பிராந்தியத்தை அரச மற்றும் தனியார் விமானங்களின் பயணத்துக்குத் திறந்துவிடுவது தொடர்பான இந்தியாவின் யோசனை அதிகாரிகளின் ஆய்வுக்குட்பட்டது.

அடுத்த உச்சி மநாடு இந்தியாவில் நடைபெறவிருக்கின்றது.

* * *

### ஆமையின் 175ஆவது பிறந்த நாள்

உலகில் உயிர்வாழும் வயது கூடிய மிரு கம் என்று கருதப்படும் 175 வயதான ஆமை தனது பிறந்தநாளை கடந்த செவ்வாய்க் கிழமை 'கேக்' சாப்பிட்டுக் கொண்டாடியது.

ஹரியட் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆமை பிரிட்டிஷ் விஞ்ஞானி சார்ள்ஸ் டார்வினால் 1835ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், சில விஞ்ஞானிகள் இதை மறுக்கிறார்கள். என்றா லும், அதன் வயது பற்றி சந்தேகமே இல்லை யென்று கூறும் ஆஸ்திரேலிய மிருகக் காட்சிச்சாலை அதிகாரிகள் சுமார் 100 ஆண்டு காலம் அந்த ஆமையை ஆண் என்று கருதி 'ஹரி' என்று அழைக்கப்பட்டு வந்ததாகவும் பெண் என்று கண்டதன் பின் 'ஹரியட்' என்று பெயர்மாற்றப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

வடஆஸ்திரேலியாவில் மிருகக் காட்சிச் சாலையொன்றை நடத்திவரும் ஸ்டீவ் இர்வின் என்ற டெலிவிஷன் பிரமுகரும் அவர் மனைவியும் இந்த ஆமையை வளர்க்கிறார் கள். பிறந்த நாளுக்குக் 'கேக்' கொடுத்து மகிழ்ந்த அவர்கள் 'ஹரியட்' 200 வருடங் களுக்கு அதிகமாகவும் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறார்கள்.

*

ASIAN மற்றும் CSC இந்திய உயர்கல்வி நிறுவனம் இணைந்து இலங்கையில் முதன்முறையாக G.C.E. O/L மற்றும் A/L பரீட்சையில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் Computer கல்விக்கான ஸ்கொலர்ஷிப் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

MERIT 2005
Bring your Result Sheet

Student can now use their best result sheet



கீழ்குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழ் ஒன்றின் பிரதியுடன் எமது பயிற்சிமையங்களை நாடுங்கள்.
- பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டது
- பரீட்சை திணைக்களத்தால் வழங்கப்பட்டது.
- இணையம் மூலமாக பெறப்பட்டது.

Merit Scholarship
திட்டத்தில் சேர்வதற்கு பரீட்சை ஆண்டு மற்றும் வயதெல்லை கிடையாது.
சாதாரண தர அல்லது உயர்தர பெறுபேறுகள் எதுவானாலும் பயன்படுத்த முடியும்.
Eligibility : G. C. E. O/L

Registered with Tertiary and Vocational Education Ministry

O/L or A/L சான்றிதழுடன் வாருங்கள் !
ஸ்கொலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள் !

ASIAN COMPUTERS
13 ஆண்டுகள் கணினிச் கல்விச் சேவையில்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2 G, Stanley Rd,Jaffna. | Kodikamam Rd Nelliyadi, | Kandy Rd, Chavakachcheri, |
| Tel : 021 - 222 5677 | Tel : 077-3122198 | Tel : 077-3039587 |

U.S. DEPARTMENT of STATE
TRAVEL.STATE.GOV
ELECTRONIC DIVERSITY VISA ENTRY FORM
Part One - Applicant Information

அமெரிக்கன் விசா 25% கழிவு

காசுக் கட்டளை தேவையில்லை!
கொழும்பு செல்லத் தேவையில்லை!!



வருடந்தோறும் அமெரிக்க அரசினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு 55000 பேருக்கு வழங்கப்படும் வதிவிட விசாவுக்காக பலர் விண்ணப்பிக்கின்றனர்.

தாங்களும் தங்கள் அதிர்ஷ்டத்தை பரிசீலிக்க கார்த்திகை 30ஆம் திகதிக்கு முன் உங்கள் விண்ணப்பங்களை அனுப்ப

2"x2" கலர் படம் ஒன்றுடன்
எமது நிறுவனங்களுக்கு உடன் சமூகம் தரவும்.

தொடர்புகளுக்கு:
திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 2027 Fax - 021 222 2993

## கால்நடைகளைக் கட்டிவளர்க்க அறிவுறுத்து

ஊர்காவற்றுறை,நவ.20

ஊர்காவற்றுறையில் காலபோக பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதையடுத்து கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள விவசாய சம்மேளனங்களால் விடுக்கப்பட்டு வருகிறது.

கால்நடைகளை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 31ஆம் திகதி வரை கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனங்கள் அறிவுறுத்தியுள்ளன.

இதனை மீறி விளை நிலங்களில் நுழையும் கால்நடைகள் கிராம சேவகர்களால் உத்தரவு வழங்கப்பட்ட பிடிகாரர்களால் பிடிக்கப்படும். பின்னர் கால்நடைகளினை உரிமையாளர்கள் பிடிகூலி, பராமரிப்பு செலவு பயிரழிவு ஆகியவற்றினை செலுத்தி மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஏழு நாள்களுக்குள் உரியவர்களால் மீட்கப்படாத கால்நடைகள் கிராம உத்தியோகத்தர் மற்றும் கமநல உத்தியோகத்தர் முன்னிலையில் ஏலத்தில் விற்கப்படும் என்று விவசாய சம்மேளனங்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-16)

## நாவலர் மண்டபத்தில் நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம்,நவ.20

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குரு பூசை எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரையை இந்து கலாசார அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் க.நாகராசா நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் 'நாவலரின் தமிழ் சமூகப் பணிகள்' என்னும் தலைப்பிலும் - அபிவிருத்தி உதவியாளர் சீ.மகிந்தினி நாவலரின் சமய கல்விப் பணிகள்' என்னும் தலைப்பிலும் நிகழ்த்துவர்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவி ஜே.வைஷ்ணவியின் பண்ணிசைக் கச்சேரியும், வேரற்கேணி கந்தசாமி கோயில் அறநெறிப்பாடசாலை மாணவி நடனம், பாடல்கள் என்பனவும் இடம்பெறும்.

உடுப்பிட்டி கலியாண சுந்தரேசன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் வில்லுப்பாட்டு, குழுநடனம் என்பனவும் நடைபெறும்.

(எ-204)

### தேவை

சேல்ஸ் விற்பனையாளர்கள் மற்றும் பொதி செய்வதற்கு ஆள் தேவை. 22-11-2005 அன்று நேரில் வரவும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:
றொலெக்ஸ் பேக்மாட்
118, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

(42962)(26-17-46)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 21 | | 21 |
| 01 | | 10 |
| 1932 | | 2005 |



### திருமதி நல்லம்மா வேலாயுதம்

21.10.2005 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தும் இறுதிச்சடங்கில் நேரில் கலந்து அஞ்சலி செலுத்தியும் ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

உங்கள் நினைவுகளோடுவரும்...
மகன் - நகுலேந்திரன்
மருமகள் - சசீந்திரா
பேர்த்தி - சஜீனா
மற்றும் உற்றார், உறவினர்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(42945)

### றோட் எஞ்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட், கணேசபுரம், கிளிநொச்சி.

#### பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இவர்கள் RBNE, CAARP, STAART, NECORD ஆகியவற்றின் நிதிகளுடாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் பால வேலைகள், வீதி வேலைகள் மற்றும் நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

1. சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
2. தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்
3. வேலை மேற்பார்வையாளர்கள்

ஆளுமை, திறமை, அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும், தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படுவதுடன், உணவு, தங்குமிட வசதிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை (சுயவிவரங்கள்) 30-11-2005 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், றோட் எஞ்ஜினியரிங் (பிறைவேற்) லிமிட்டட், கணேசபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைத்த பின்னர், 05-12-2005 அன்று உரிய சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்,
றோட் எஞ்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட்,
கணேசபுரம், கிளிநொச்சி.

(42954)(26-17-46)

IDM IDM Computer Studies (Pvt) Ltd (Jaffna Branch)
The Nation's ICT Academy

2005 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான
விசேட கணனிக் கற்கைநெறியும் புலமைப் பரிசில் திட்டமும்

உங்கள் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்

2005 ஆம் ஆண்டு O/L மாணவர்களுக்கானசர்வதேச தரம் வாய்ந்த கணனிக் கற்கைநெறியான
International Computer Driving Licence
(ICDL)
எனும் கணனிக் கற்கை நெறியை முதன் முதலில் யாழ். குடாநாட்டில் அறிமுகப்படுத்துகின்றோம்.

ஆரம்பம் : 02.01.2006, 05.01.2006

No.216, Navalar Road,
Jaffna.
Tel : 021 4591398

(C-46274)(11-13)

# எகிப்து - காஸா எல்லைக் கடவையைத் திறந்துவிட இஸ்ரேல் இணக்கம்; ஒப்பந்தமும் கைச்சாத்து

## உலக வலம்

மேனா

எகிப்துடனான காஸா எல்லையைத் திறப்பதற்கு இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் பலஸ்தீனர்களுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

காஸாப் பகுதியுடனான வெளியுலகத் தொடர்புக்கு ஒரே வாயிலாக இருந்த ராபாஹ் கடவையை இஸ்ரேலியர் மூடியிருந்தனர். காஸாவிலிருந்து இஸ்ரேலியர் கடந்த செப்ரெம்பரில் வாபஸான கையோடு இந்தக் கடவை இஸ்ரேலியர் மூடிவிட்டிருந்தார்கள். இதனால், காஸாவுடனான வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்டு அப்பகுதி மக்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

இந்த எல்லையைத் திறக்கச் செய்வதற்காக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் பெரு முயற்சி மேற்கொண்டிருந்தார். இந்த முயற்சியின் பயனாக இஸ்ரேல் எல்லையைத் திறந்துவிட சம்மதித்துள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியைக் கடந்த புதனன்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜெருசலேமில் வெளியிட்டார். இதன்படி ராபாஹ் கடவை நவம்பர் 25ஆம் திகதி திறக்கப்படும். ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இதனைக் கண்காணிப்பார்கள். இஸ்ரேல் தெரிவித்த பாதுகாப்பு அம்சங்கள் காரணமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நபில் அபுருடினா அமைப்பின் தலைவர் ஒருவர் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில், "பலஸ்தீன அதிகாரிகள் இந்த ஏற்பாட்டை வரவேற்றார்கள். பலஸ்தீன மக்கள் வாழ்வை இது இலகுவாக்கும். அவர்களின் அதன் திடமான நடமாட்டத்துக்கும் வழிசெய்யும்" என்று கூறினார்.

எல்லையின் ஊடாகச் சரக்குப் போக்குவரத்துக்கும் பயணங்களை மேற்கொள்வதற்கும் இந்த ஒப்பந்தம் வழி செய்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக இதில் முக்கியமானது என்னவென்றால், இந்த ஒப்பந்தம் செயற்படுவதற்குச் சர்வதேச உத்தரவாதம் இருக்கிறது - என்றார் அவர்.

இதில் இன்னோர் அம்சம் என்னவென்றால் எல்லையைக் கடந்து செல்லும் எவரையும் இஸ்ரேலியர் தடுக்கமுடியாது.

ராபாஹ் கடவை கடந்த செவ்வாயன்று பிரத்தியேகமான முறையில் திறக்கப்பட்டு இரு பக்கங்களிலும் தடைப்பட்டு இருந்த மக்கள் தம் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எபெக் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்வதைப் பின்தள்ளி வைத்த கொண்டலீஸா ரைஸ் ஜெருசலத்தில் மேலும் ஒரு தினம் தங்கி ஒப்பந்தம் கைச்சாத்தாக்க உதவினார்.

இந்த உடன்படிக்கைகளை அடுத்து காஸாவில் இருந்து மேற்குக் கரைக்குப் பஸ் மூலம் பலஸ்தீனர்கள் செல்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

காஸாவுக்கான துறைமுகத்தை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிப்பது மற்றும் விமான நிலையம் அமைப்பது தொடர்பான பேச்சுகளை மேற்கொள்வது தொடர்பான ஏற்பாடுகளும் உடன்படிக்கையில் உள்ளன.

காஸாவில் இவ்வருடம் அறுவடையாகும் விவசாய உற்பத்திகளை விரைவாக ஏற்றுமதி செய்யவும் மேற்குக்கரையில் நடமாடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்கவும் இஸ்ரேல் இணங்கியுள்ளது.

எல்லைகளைத் திறப்பதால் பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள காஸாவுக்கு விடிவு ஏற்படும். அத்துடன், சமாதான முயற்சிகளுக்கும் உந்துதலைத் தரும்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான இந்த உடன்படிக்கையைக் கொண்டலீஸா ரைஸ் வரவேற்றார். இது முன்னோக்கி எடுத்துவைக்கப்பட்டுள்ள அடியென அவர் வர்ணித்தார். இந்த உடன்படிக்கையானது பலஸ்தீன மக்கள் நடமாடுவதற்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும் சுதந்திரமளிப்பதாக ரைஸ் கூறினார்.

காஸாவுக்கும் எகிப்துக்கும் இடையிலான ராபாஹ் கடவையானது வெளி உலகத்துடனான காஸாவின் நுழைவாயிலாகும். ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களின் முன்னிலையில் எதிர்வரும் 25ஆம் திகதி இந்த எல்லைக் கடவை திறக்கப்படும் என்றார் ரைஸ்.

எல்லை வழியாக ஆயுதங்கள் கடத்தப்படும் சாத்தியம் இருப்பதால் ஆள்களையும் பொதிகளையும் பரிசோதிக்கவேண்டும் எனப் பேச்சின்போது இஸ்ரேல் கூறியது.

ராபாஹ்யில் இஸ்ரேலின் பிரசன்னம் தமது இறைமைக்கு எதிரானது எனப் பலஸ்தீனம் பதிலளித்தது.

இந்தச் சிக்கலைத் தீர்க்க ராபாஹ்யில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கட்டுப்பாட்டு நிலையம் நிறுவப்படும். இதிலிருந்து கமெராக்கள் மூலம்எல்லை வழியான நடமாட்டங்கள் கண்காணிக்கப்படும். எவரையாவது தடுக்க இஸ்ரேல் விரும்பினால் இந்த நிலையத்தில் உள்ள இஸ்ரேல் அதிகாரிகள் பலஸ்தீன அதிகாரிகளிடம் அதனைத் தெரிவிப்பர். பலஸ்தீன அதிகாரிகள் புறக்கணித்தால் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் செயலில் இறங்குவர் என்ற சமரசம் எட்டப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை ஜனவரியில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் ஜனாதிபதி அப்பாஸின் கரத்தைப் பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இந்த உடன்படிக்கையை ஹமாஸ் எதிர்த்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான், இந்த உடன்படிக்கையை வரவேற்றுள்ளார்.



175 வயதான தமது செல்லப்பிராணி ஆமையைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சுகிறார்கள் டெலிவிஷன் பிரமுகர் இர்வினும் மனைவியும்.

* * *

## பிரான்ஸிய குடியேற்றவாசிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க அதிபர் ஏற்பாடு

### பிரான்ஸில் அமைதிக்கு அதிபர் ஏற்பாடு

பிரான்ஸில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவந்துள்ள கலவரங்களுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பது அதிகாரிகளுக்கும் அரசுத் தலைவர்களுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்துவரும் வேளையில், பிரான்ஸ் அதிபர் ஜெக்ஸ்சிராக் தன் தரப்பில் ஒரு கருத்தை முன்வைத்து அதன்படி நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவித்திருக்கிறார்.

ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி கலவரம் ஆரம்பமானதிலிருந்து பேசால் - அலட்டிக்கொள்ளாமலே இருந்துவந்துள்ள அதிபர் ஜெக்ஸ்சிராக் இப்பொழுது வாய்திறந்து பேசியுள்ளார்.

மக்கள் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதிலுள்ள சிக்கலே இன்றைய நெருக்கடிக்குக் காரணம் என்று அவர் கருதுகிறார்.

பிரான்ஸிலுள்ள குடியேற்றவாசிகளான மக்கள் எதிர்நோக்கும் பாரபட்சமான "நச்சுத் தன்மைக்கு" ஒரு முடிவுகட்டப் போவதாகவும் அதிபர் சிராக் சூளுரைத்துள்ளார். இந்த அமைதியின்மைக்கு "கருத்து நெருக்கடி, அடையாளம் காணும் நெருக்கடி" என்று விளக்கமளித்த பிரெஞ்சு அதிபர் "இது பிரான்ஸிய சமூகத்தில் ஓர் ஆழமான அடையாளம் காணப்படாத நோய்" என்றார். தொலைக்காட்சியில் பேசிய அதிபர் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக வலியுறுத்தியதுடன், கலவரங்களுக்கு அடிப்படையாக அமைந்த காரணங்களைக் கண்டறிந்து நிவர்த்தி செய்யப்போவதாகவும் சொன்னார்.

குடியேற்றவாசிகள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளைச் சேர்ந்த ஏழை இளைஞர்களை நேரடியாகக் குறிப்பிட்டு பேசிய அதிபர், பிரெஞ்சு சமூகத்தில் அவர்களுக்கு முழுமையான இடம் உண்டு என்று உறுதி கூறினார். குடியேற்றவாசிகளைப் பெருமளவில் கொண்ட புறநகர்ப் பகுதிகளிலேயே கலவரங்கள் முதலில் ஆரம்பித்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

"கஷ்ரப்பட்ட குடும்பங்கள் வாழும் பகுதியைச் சேர்ந்த மக்களின் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன், அவர்களின் பூர்வீகம் எதுவானாலும் அவர்கள் அனைவரும் இந்தக் குடியரசின் புதல்வர்களும் புதல்விகளும் ஆவார்கள்" என்று சிராக் தெரிவித்தார்.

சிராக்கின் இந்தப் பேச்சையடுத்து கலவரங்களில் ஈடுபட்டிருந்தவர்களின் உணர்ச்சி வேகம் தணிந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பின்தங்கிய அவ்வாறான பகுதிகளைச் சேர்ந்த 50 ஆயிரம் இளைஞர்களுக்கு வருமானத்துடன் கூடிய பயிற்சிகள் அளிப்பதற்கான திட்டமொன்றைக் கொண்டுவர விருப்பதாகவும், வேலைத்தளங்களில் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் கூறிய அதிபர், பாகுபாடுகாட்டப்படுவதை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் உறுதியளித்தார்.

'பாகுபாட்டை ஒழித்துக்கட்டாமல் நாட்டில் எதையுமே நிரந்தரமாக செய்து முடிக்க முடியாது. பாகுபாடு என்பது சமுதாயத்தில் ஒரு நோய்' என்று அறிவித்தார். அதோடு அவர் நிற்கவில்லை கலவரங்களில் இறங்கியவர்களுக்கு இரக்கம் காட்டப்போவதில்லையென்றும் அறிவித்தார். தமது பிள்ளைகளைக்கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளாமல் பொறுப்பற்றவர்களாய் இருக்கும் பெற்றோர்களையும் சிராக் எச்சரித்தார். அவர்களும் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்றார்.

சட்டவிரோதமாகக் குடியேறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது பற்றி அறிவித்த அதிபர் சிராக், குடும்பங்களை ஒன்றிணைப்பதற்கான சட்டவாதிகளைக் கடுமையாக அமுல்படுத்தும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

### அவசரகால நீடிப்பு

பிரான்ஸில் ஏற்பட்ட கலவரங்களையடுத்து நவம்பர் 8ஆம் திகதி அமுலுக்கு வந்த அவசரகாலச் சட்டம் அடுத்தவருடம் பெப்ரவரி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு, வீட்டுக்கு வீடு தேடுதல், பொதுக் கூட்டங்களுக்குத் தடை போன்ற செயற்பாடுகள் 1955ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. பாரிஸிலும் சுற்றுவட்டாரத்திலும் 30 குடியிருப்புகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இவை அவசியமான இடங்களில் மட்டுமே அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலவரங்களில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ஏராளமான வெளிநாட்டவர்களை நாடு கடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

* * *

### போர்க் குற்றவாளிகளை ஜப்பானியர் வணங்குகிறார்கள்

ஜப்பானியத் தலைவர்கள் போர்க் குற்றவாளிகளை வணங்குகிறார்கள் என்று சீனா குற்றஞ்சாட்டியுள்ளது. அடோல்ப் ஹிட்லரை ஜேர்மனியர்கள் நிராகரித்ததிலிருந்து அவர்களிடம் ஜப்பானியர் பாடம் படிக்கவேண்டும் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சர் லீஷா ஒக்ஸிங், ஓபெக் மாநாட்டில் கலந்துகொண்டதன் பின்னர் தென்கொரிய வெளியுறவு அமைச்சர் பான் கி-மூன் உடன் பேசும்போது இக்கருத்தை வெளியிட்டார்.

சில வாரங்களுக்கு முன்னர் ஜப்பானிய பிரதமமந்திரி கொய்சுமி பதவி ஏற்றதன் பின்னர் ஜப்பானிய போர்வீரர்களுக்கான யசுக்குனி சமாதிக்கு விஜயம் செய்திருந்தார்.

இந்தச் சமாதியில் இரண்டாம் உலகயுத்தத்தின் போர்க் குற்றவாளிகளின் சமாதிகளும் இருப்பதாகக் கருதப்படுகின்றது. ஜப்பானியத் தலைவர்கள் இவ்விதம் போர்க்குற்றவாளிகளின் சமாதிகளுக்குச் சென்று வணக்கம் செலுத்துவதைத் தென்கொரியாவும் ஜப்பானும் கடுமையாக விமர்சித்துவருகின்றன.

ஜேர்மன் தலைவர் ஒருவர் ஹிட்லரின் சமாதிக்குச்சென்று அவரை வணங்கினால், நாஸிகளைக் கும்பிட்டால் அதை ஐரோப்பிய மக்கள் எவ்வாறு பார்ப்பார்கள்? அவர்களின் உணர்ச்சிகளை அது பாதிக்கமாட்டாதா? இதைப்பற்றி இவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஜப்பானியத் தலைவர்கள் போர்க் குற்றவாளிகளை வணங்குகிறார்கள். இது சீன மக்களின் மனங்களைப் புண்படுத்துகின்றது என்று கூறியுள்ளார் சீன அமைச்சர்.

ஜப்பானியர் தமது முந்தைய ஆக்கிரமிப்பு மனப்பான்மையிலிருந்து இன்னமும் விடுபடவில்லையென்று ஆஸியநாடுகள் பலவற்றில் கருத்து நிலவுகின்றது.

## வறுமையை ஒழித்துக்கட்ட 'சார்க்' தலைவர்கள் சங்கற்பம்



'சார்க்' மகாநாட்டில் தலைமை வகித்து உரையாற்றுகிறார் பங்களாதேஷ் பிரதமர் பேகம் கலீதாஷியா. பின்னால் இருப்பவர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.

### 'சார்க்' தலைவர்கள் எடுத்துள்ள முடிவு

அண்மையில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் முடிவடைந்த தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான சங்கத்தின் ('சார்க்') 20ஆவது மாநாடு இப்பிராந்தியத்தில் வறுமையை அடுத்துவரும் பத்து ஆண்டுகளில் ஒழித்துக்கட்டுவது என்ற அறிவிப்போடு முடிவடைந்துள்ளது. 1985 ஆம் ஆண்டு இந்த அமைப்பு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டபோது 'சார்க்' நாடுகளின் ஏழ்மையைக் குறைப்பது, பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பதென்றும் குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டது. அந்த வகையில எந்த அளவுக்கு இந்த இருபது

(15ஆம் பக்கம் பார்க்க)

# மெல்லிய உடம்பிற்கு

உங்கள் அல்லது உங்கள் குழந்தையின் உடல் மெலிவானதும் பலவீனமானதா?
சந்தேகமின்றி உபயோகியுங்கள்!

எப்பட்டன் வெயிட் கெயின் அதிபோஷாக்கு பாலுணவு




யாழ் குடா நாட்டில் ஏக விற்பனையாளர்:
சிட்டி மெடிக்கல்ஸ்,
தொ.பேசி 2222198, தொ.நகல் - 2223880
மற்றும் எல்லா மருந்தகங்களிலும்

ஏக பிரதிநிதிகள்
**Suri Trading Company (Pvt) Ltd**
No.85/5, Sanjaya Mawatha, Rilaulla, Kandana.
Tel: 011 4-810251 Fax: 011 4-813110



# சூழற் புவியியல்

பகுதி I
(வினா- விடைத்தொகுப்பு)
(க.பொ.த. சாதாரணதர எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியது)
ஆசிரியர்
ந.பாபு(B.A.Geo-Sp)
வெளியீடு
வதனா புத்தகசாலை
பிரதி ஒன்றின் விலை 60/-
கிடைக்கும் இடங்கள்
வதனா புத்தகசாலை
இல.1/1 நல்லூர் செங்குந்த மார்க்கட்
பருத்துத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(42297)
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
இல.235, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.


# உடனடி வேலைக்கு ஆள்கள் தேவை

கிளிநொச்சியிலுள்ள நிர்மாணப் பணிகளில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பதவிகளுக்கு உடனடியாக ஆள்கள் தேவைப்படுகின்றனர். கிளிநொச்சியில் பணியாற்ற விரும்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் 24-11-2005 இற்கு முன் விண்ணப்பிக்கவும். தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

**1) குடிசார் பொறியியலாளர்**
பி.எஸ்.ரி. முடித்த குறைந்தது ஐந்துவருட அனுபவமும் மும்மொழிகளிலும் பேசக்கூடியவராக வும் இருக்கவேண்டும்.

**2) வேலைத் தள முகாமையாளர் சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர்**
என்.டி.ரி. அல்லது அதற்குச் சமமான பயிற்சி முடித்தவராகவும் கட்டடத்துறையில் குறைந்தது 10 வருட அனுபவம் உள்ளவராகவும் தமிழ், சிங்களம் இருமொழிகளிலும் பேச்சு ஆற்றல் உள்ளவராகவும் இருத்தல் அவசியம்.

**3) தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
என்.டி.ரி. பயிற்சி நெறியை பூர்த்திசெய்தவராகவும் குறைந்தது 5வருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல்வேண்டும்.

**4)கணக்கு எழுதுநர்**
க.பொ.த.உயர்தரம் முடித்து கணக்கியல் சம்பந்தமான பயிற்சிநெறி, கணனிப்பயிற்சி என்பனவற்றைப் பூர்த்தி செய்தவராகவும் குறைந்தது 2 வருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல்வேண்டும்.

**5) கனரக வாகனம் இயக்குநர்**
பக்கோ, டோசர், மோட்டகிறேடர் இயக்குவதில் பயிற்சிபெற்றவரும் குறைந்தது மேற்படி கனரக வாகன இயக்குநராக ஐந்துவருட அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

**6) லொறிச் சாரதி**
கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உடையவராகவும் தமிழ், சிங்களம் பேச்சாற்றல் உள்ளவராகவும் தென்பகுதியின் எப்பகுதிக்கும் சென்றுவரக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
**பணிப்பாளர், யதுர் என்ரபிறைஷ்,**
**இல.20** (கட்டடத் திணைக்களம் முன்பாக)
**கிருஷ்ணர் கோயில் வீதி,**
**கிளிநொச்சி.**
E-mail:Jathurenterprise@yahoo.com
(அ-46258)(50)


**Panasonic**
**ideas for life**

# நீர் இறைக்கும் இயந்திரம்

**விசேஷ அம்சங்கள்**
- சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
- சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
- வேகம் கூடியது
- பாவனைக்கு இலகுவானது
- வெப்பத்தை தாங்கக்கூடியது



***Model GP-200JA**

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 45 liter/min (Max) |
| உயர வலு | 35 meters (Max) |

***Model GP-125JB**

| | |
|---|---|
| இயந்திரவலு | 125W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 30 liter/min (Max) |
| உயர வலு | 30 meters (Max) |

***Model A-200JAE**
*(Auto pressure pump)*

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| அதிகபட்ச வெளிப்பாய்ச்சல் வலு | Max 45 L/min |
| உயர வலு | Ht12m 29 L/min |
| அழுத்த ஆளியுடன் | Max 19 meter |
| அழுத்த ஆளிஇன்றி | Max 35 meters |
| | ON 1.1kgf/cm2 |
| | OFF 1.8 kgf/cm2 |

ஏகவிநியோகஸ்தர்கள்
CAPRICORN®

* ஒரு வருட உத்தரவாதம்
(தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
* உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்

**கப்ரீகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்**
காட்சி அறை அலுவலகம்:
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11 தொலைபேசி: 4737443
காலி காட்சி அறை : 04 வாட் வீதி காலி தொலைபேசி: 091-2234104
தலைமை அலுவலகம் 47, டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: 2735584, 2714631
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : caprico1@sltnet.lk
- நாடளாவிய ரீதியிலான விநியோகம் -






இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ்தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
: 021 222 2567
(3109)


# 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்


## அ. கஜானிகா



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான ஆத்ம நண்பர் திரு.பூ.அன்பழகன் - திருமதி கலைச்செல்வி தம்பதியரின் அருந்தவப்புதல்வி செல்வி அ.கஜானிகா தனது 2 ஆவது பிறந்தநாளை இன்று (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுவதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியுடன் அவரை வாழ்த்தி இன்புறுகின்றோம்.

**பல்லாண்டு வாழியவே**

நாதமிகு வீணையுள்ள நாமகளின் கருணையாலே
நானிலம் போற்றிட நல்லவர் மதித்திட
மோதகம் விரும்புமந்த நல்ல மூஷிகவாகனன் அருளுடன்
மோகனப் புன்னகை தரும் செல்வி கஜானிகா
மாதகல் நுணசை வாழும் முருகனின் பாதக்கமலம் பணிந்து
மாண்புடன் இவ்வுலகில் மகிழ்வுடன் வாழ்ந்து
தீதகலப் பல நன்மைகள் பெருகி திருமகள் கடாட்சத்துடனே
பல்லாண்டு வாழ உளமார வாழ்த்துகின்றோம்.



செல்வி கஜானிகா கல்வியில் சிறப்புற்று எல்லா நலன்களும் பெற்று சகல செளபாக்கியங்களும் அடைந்து பார்போற்ற வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல முருகப்பெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்.



மாதகல். (42734) **தந்தையின் நண்பர்கள்.**


# புதிய கல்வி ஆண்டுக்கான புதிய அனுமதிகள்

**நவ.20 - டிசெ.10 வரை மட்டுமே வழங்கப்படும்**

**தரம் 03 முதல் O/L வரை**

புதிய வகுப்புகள் எதிர்வரும் டிசெம்பரில் ஆரம்பமாகின்றன

-அதிபர்

**The Express Institute**
Irupalai, Kopay.
(46233)

# வானில் இருந்து வருகிறது ஆபத்து!



**ஆசிய நாடுகளை தற்போது பெரியளவில் அச்சுறுத்திவரும் ஆபத்து பறவைக் காய்ச்சல் நோயாகும். தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் இந்த நோயின் தாக்கம் இதுவரை அதிகமாகக் கண்டறியப்பட்டுள்ளது. முதற் தடவையாக சீனாவிலும் இந்த நோய்த் தாக்கத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. கோழிப் பண்ணை ஒன்றில் பணிபுரிந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரைத் தவிர சிறுவன் ஒருவனுக்கும் இந் நோய் இருப்பது ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. இதனையடுத்து சீனாவில் பறவைக்காய்ச்சல் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மீண்டும் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனிதர்களிடமும் பறவைகளிடமும் இந்நோய்த் தொற்றுக்கான கிருமிகள் இருக்கின்றனவா என்ற ஆய்வுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.**

**இந்தப் பறவைக் காய்ச்சல் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் இருந்து பறவைகளையும் அவற்றின் இறைச்சிகளையும் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும், தற்போது அதில் சில தளர்வுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் பறவைக் காய்ச்சல் பற்றி இக்கட்டுரையில் ஆராய்கிறார் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்**

பறவைக் காய்ச்சல் கடந்த ஒரு நூற்றாண்டுக்கு முன் இத்தாலி நாட்டில் அவதானிக்கப்பட்டது. இது ஒரு வைரஸ் (Virus) நோயாகும். இதன் ஆசிய பிரிவு நோயை உருவாக்கும் வைரஸ் ('ஏ' வைரஸின் பிரிவு $H_5$, $H_7$ ஆகியன) H5, N1 ஆகும். இவ்வைரஸ் காட்டுப் பறவைகளில் வாழும் தன்மையுள்ளது. பறவைகளின் சிறுகுடலில் இது தங்கி வாழும். எனினும், இதனால் அவற்றுக்கு ஆபத்து ஒன்றும் இல்லை. காட்டுப் பறவைகளுக்கு இதனால் நோயும் ஏற்படாது. சிலவேளைகளில் நாட்டுப் பறவைகளிலும் இவ் வைரஸ் தொற்றக்கூடியது.

### மனிதனைத் தாக்கும்

முக்கியமாக வீட்டில் வளர்க்கும் கோழிகள், வாத்துகள், பெரு பறவை (Turkey) போன்றவற்றினை இந்த வைரஸ் தாக்குமானால் அதன்பாதிப்பு மிகக் கடுமையாகவே இருக்கும். வளர்ப்புப் பறவைகள் மூலம் இந்த வைரஸ் மனிதனைப் பீடித்தால் அவனை இறக்கவைக்கும் தன்மையையும் கொண்டுள்ளது.

மனிதனை இந்நோய் தாக்கியதை முதல் முதலாக 1997இல் கொங்கொங் (Hong kong) நாட்டில் கண்டறிந்தனர். இதிலிருந்தே இந்நோய் பற்றிய ஆராய்ச்சிகள் முடுக்கிவிடப்பட்டன. பறவையில் இந்நோய் (Flu -நோய் Influenza) வைரஸ் 'ஏ'யினால் தோன்றுகிறது. கம்போடியா, சீனா, கொங்கொங், இந்தோனேஷியா, ஜப்பான், லாவோஸ், தென்கொரியா, தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளில் பலகாலமாக இந்த வைரஸ் இருந்து வந்துள்ளது. தற்போதுதான் இந்நோய் மனிதனையும் தாக்குகிறது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

பறவைக்குப் பறவை இந்நோய் பரவுவது பல்வேறு முறைகளில் நடைபெறுகிறது. நோய் தொற்றியுள்ள பறவை தனது எச்சங்களை(Faeces), உமிழ்நீர், மூக்கு நீர் ஆகியன மூலமாக, நிலம் காற்று, மண் போன்றவற்றடன் சேர்ந்து ஏனைய பறவைகளுக்கு நோய் பரப்பப்படுகின்றது. இதை விட தமது உணவு, மூலமாகவும் வேறுபட்ட மிருகங்கள், எலி போன்றவை மூலமாகவும் (தமது வெளி உடம்பில் ஒட்டுதல் மூலமாக), பறவைகளிடையே இந்த நோய் பரப்பப்படுகிறது. இலையான், நுளம்பு போன்றவற்றால் இந்நோயைப் பரப்பமுடியாது. பெரும்பாலும், பாரிய அளவில் அல்லது சிறிய அளவில் பறவைகள், கோழி, வாத்து என்பவற்றை வளர்க்கும் போது இந்நோய் பரவும் சாத்தியக் கூறுகள் அதிகம். குறிப்பாக உணவினையும், தண்ணீரையும் பொதுவான முறையில் பங்குகொண்டு வளர்க்கப்படும் பறவைகளில் இந்நோய் பரவுவதை மிக அதிக அளவில் கண்டுகொள்ளலாம்.

இறந்துபோன பறவை அல்லது கோழியை எரிக்காமல் அப்படியே விட்டு விட்டால், அதிலிருந்து வைரஸ் வெளியேறி பல பறவைகளுக்கும் கோழிகளுக்கும் பரவும் அபாயம் உண்டு. வெளிநாட்டுப் பறவைகள் பருவகாலத்தையொட்டி வேறு இடங்களுக்குப் போகும்போது, நோய்க் கிருமிகள் புதிய இடத்தில் உள்ள பறவைகளையும் சேருகின்றன. இதனால் இந்நோய் மேலும் பரவுவதுடன் மட்டும் நின்று விடுவதில்லை. காவிச் செல்லும் பறவைகளில் இருந்து பரவும் வைரஸும், அவை சென்று சேரும் இடத்திலுள்ள வைரஸும் சேர்ந்து புதிய கட்டமைப்புடைய நோய்க் கிருமிகளை உண்டாக்கும் தன்மை யேற்படுகிறது. இந் நோய்க் கிருமிகள் மிக வலுவான, நோய்த் தொற்றில் மிக வீரியமுடையவையாக தோற்றமடையும். இதைக் கட்டுப்படுத்துவது மிகவும் கஷ்டமான காரியமாகும்.

### மனிதனில் பறவைக் காய்ச்சல்

மனிதனுக்கு இந்நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது பெருகிவருகின்றன. நோய் தொற்றியுள்ள பறவைகள் இறக்கும்போது, அதன் வாயிலாக நோய் மனிதனை அடையும் வாய்ப்புண்டு. தொற்றியுள்ள பறவைகளைச் சீராகச் சமைக்காது உண்ணும்போதும், பறவை உணவுகளைச் சரியான முறையில் தயாரிக்காது உண்ணும் போதும் நோய் பரவ வாய்ப்புண்டு. எனினும், இந் நோய் மனிதனிலிருந்து மனிதனுக்குப் பரவும் சாத்தியக்கூறு இல்லை எனலாம். எனினும், தாய்லாந்திலிருந்து அறியப்பட்டதன் பிரகாரம், மனிதனிலிருந்து மனிதனுக்கு ஒரு தடவை நோய்த் தொற்கு ஏற்பட்டுள்ளது என்பதான ஒரே ஒரு தகவல் தற்போது உண்டு. இது எதிர்காலத்தில் அதிகரிக்கவும் வாய்புண்டு எனலாம்.

மனிதனுக்குப் பறவைக்காய்ச்சல் வருவதை சிறந்த முறையில் தடுத்துகொள்ளமுடியும். கோழி இறைச்சி, முட்டை போன்றவற்றை மிக வலுவாக நெருப்பினால் அல்லது மின்சாரத்தினால் சூடாக்கி சமைத்து உண்பதினால் இந்நோயை பெரும்பாலும் தவிர்த்துக்கொள்ளலாம். எனினும், அந்தநோய்க் கிருமிகளில் உள்ள ஜீன்கள் (Genes) விகாரமடைவதினால் (Mutation) எதிர்காலத்தில் இவ்வாறு சமைத்து உண்பதால் மட்டும் நோயைத் தடுத்து விடலாம் என்பது சந்தேகமே. ஏனெனில் விகாரமடையும் வைரஸ்கள் எச்சூழலிலும் வாழும் தன்மையைப் பெறுகின்றன.

பறவைகளில் தோன்றும் காய்ச்சலுக்கு பல்வேறு வழமையான அறிகுறிகள் உண்டு. அவ்வறிகுறிகள், நோயை வருவிக்கும் வைரஸ்களில் தங்கியுள்ளன. பறவை இனங்களிலும் அது தங்கியுள்ளது. குறிப்பாக H5, H7 வைரஸ்களால் இந்நோய் ஏற்பட்டால் அது பறவைகளை இறக்கச் செய்யும் தன்மையுடையதாக இருக்கும். மனிதனுக்கு இந் நோய் வரும்போது, வைரஸ் காய்ச்சலுக்கு (Flue புளு) வரும் அறிகுறிகளான காய்ச்சல், தொண்டை நோ, தொண்டைத் தடிப்பு, கண் தொற்றுநோய், சளிச்சுரம், சுவாசப்பை அமுக்கம் என்பன ஏற்படும். இவை உயிருக்குப் பாதகமான பயங்கரமான நிலையையும் உருவாக்கக் கூடியன. நோயுற்றவரின் உறுப்பின் பாகங்களை பரிசோதனைக் குட்படுத்தும்போது இவ் வைரஸ்களைக் கண்டு கொள்ளலாம். இதேபோன்று உடலில் எதிர்ப்பு சக்தி (Antibody) பெருகுவதையும் கண்டு கொள்ளலாம். இது போன்ற வைரஸுகளை குறிப்பாக H5, N1 வைரஸினை அறிவதற்கு பலவாறான விஞ்ஞான வசதிகள் தேவையாகின்றன.

### மாற்றுவழி

பறவைக் காய்ச்சல் வந்தால் அதனைத் தற்போதைக்குக் மாற்றுவது கடினம். இது ஒரு புதிய வைரஸ் இதனைப்பற்றிச் சரியாக அறிய முடிவதில்லை. எனினும், அதன் வீரியத்தைத் தடுப்பதற்காக வைரஸ் எதிர்ப்பு சக்திதரும் (Anti Viral Agent) $M_2$ தடுப்பு மருந்துகளும் இருக்கின்றன. இத்துடன் Oseltamivur என்னும் மருந்து 5 முதல் 7 நாள்கள் பாவிக்கப்படல் வேண்டும். இந்நோயைத் தடுப்பதற்கான தடுப்பூசி (Vaccine) இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. பலவகை யான தடுப்பூசிகளுக்கான பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

**பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்**
தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை.



### தற்கால பறவைக் காய்ச்சல்

தற்கால பறவைக் காய்ச்சல் ஒரு முக்கியமான, பயங்கரமான வைரஸ் காய்ச்சலாகும். இதனை H5, N1 எனக் குறிப்பிடுவர் இது முதன்முதலாக கொரியா நாட்டில் 2003 ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இது தனது வாழ்க்கையைச் சிறப்பிக்க வேண்டி பல மிருகங்களை தாக்கி வாழ முயற்சிக்கும் ஒரு வைரஸாக இருக்கிறது. இது தற்போது வீட்டு வளர்ப்பு விலங்குகளான பறவைகள், இனம், கோழி, பல்வேறு நடமாடும் பறவை பன்றி, பூனை, புலி ஆகியவற்றைத் தாக்கும் தன்மையையும் கொண்டுள்ளது. அத்துடன் இது நிலத் தொடர்புடைய நாடுகளிடையே விரைவாகப் பரவி வருகிறது. 12 நாடுகளில் இந்நோய் இப்போது காணப்படுகிறது.

கொரியா, ஜப்பான், கம்போடியா, சீனா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, ரஷ்யா, கஸகஸ்தான், மொங்கோலியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இந் நோய்த் தாக்கத்துக்குரிய H5, N1 வைரஸ் அடிக்கடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2005 ஓகஸ்ட் மாத இறுதிப்பகுதியிலேயேதான் 112 மனிதர்களில் இந்நோய் இருப்பது கண்டறியப்பட்டது. இந்நோய் கம்போடியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளில் காணப்பட்டது. இதனால் 57 மனிதர்கள் இறந்து விட்டார்கள். இதனால் 15 கோடி கோழிக் குஞ்சுகள் தாமாகவே இறந்துள்ளன; அல்லது கொல்லப்பட்டன.

### எதிர்கால அபாயம்

பறவைக்காய்ச்சல் வைரஸும் சாதாரணமாக மனிதனுக்கு ஏற்படும் (Flu)புளு வைரஸும் ஒன்று சேர்ந்து, தமது ஜீன்களை (Genes) மாற்றி அமைக்கும்போது புதிதாகத் தோன்றும் வைரஸ் மிக வீரிய முடையதாகிறது. மனித இனத்துக்கு மிகப்பாரிய இறப்புகள் இதனால் ஏற்படும் நிலை உருவாகக் கூடும். மேலும் இவ்வைரஸுகள் மனிதனிலிருந்து மனிதனுக்குத் தொற்றும் நிலை ஏற்படுமானால், அது மிகப்பாரிய தொற்று வியாதியாக மாறி பல மனித உயிர்களைப் பலிகொள்ளும்.

இந்நோய் எதிர்காலத்தில் மனித இனத்திற்குப் பாரிய சவாலாக அமையக்கூடும் என்பதுதான் விஞ்ஞானிகளின் கருத்தாகும். அண்மைக்காலத்தில் பல புதிய நோய்களை மனிதன் கண்டுள்ளான். அவையாவும், தாமாகவோ அல்லது சூழ்நிலை காரணமாகவோ தமது ஜீன்களை மாற்றி அமைத்துக்கொண்டதனால் வீரியமடைந்தவை. இந்த வகையில்தான் நுண்ணங்கிகள் மனிதனுக்கு சவாலாக இருக்கின்றன. பறவைக்காய்ச்சல் வைரஸும் இதேமாதிரித்தான் தோன்றியதென்பதும் மனிதனில் அவை அளவுக்கதிகமாகப் பெருகிவாழ்வதால் மனிதன் இறக்கின்றான் என்பதும் புலனாகிறது.



### தடுக்க சில வழிவகைகள்

பறவைக் காய்ச்சல் அறிகுறி வீட்டு வளர்ப்பு பறவைகளுக்கு, குறிப்பாகக் கோழி, வாத்து போன்றவற்றில் காணப்பட்டால் வைத்திய முறை இன்றியே அவை எல்லாவற்றையும் அழித்து எரித்தல் வேண்டும். நிலத்தில் புதைப்பதாலோ அவற்றை வீசி எறிவதாலோ வைரஸை அழிக்க முடியாது. நோய்த் தொற்றுள்ள பறவைகளை அழிப்பவர் பணியின் போதுதான் அணிந்திருக்கும் உடைகள் யாவற்றையும் எரித்து விடவேண்டும். காலணிகளிலும், அவர் அணிந்திருக்கும் ஒவ்வொரு பொருளிலும் இவ்வைரஸ் ஒட்டி இருக்குமாதலால் மிக அவதானமாக எல்லாவற்றையும் அழித்தல் அவசியம்.

தற்போது மனிதனுக்குப் பாவிக்கப்படும் புளு தடுப்பூசியே (Influenza vaccines) பறவைக் காய்ச்சலைத் தடுப்பதற்காகவும் பாவிக்கப்பட்டாலும் அது அவ்வளவு உபயோகமாக இருப்பதில்லை. இதனிலும் பார்க்க வீரியம் கூடிய தடுப்பூசிகளையோ இரசாயனப் பதார்த்தங்களையோ (Chemo prophylaxis) பயன்படுத்தினால் அவை சிலவேளைகளில் நோயைச் சாந்தப்படுத்தும் தன்மையைக் கொண்டிருக்கும்.

வீடுகள், தோட்டங்கள், பண்ணைகள் என்பவற்றில் தனிக் கோழிகளை அவதானித்து, அவற்றில் இந்த நோய்க்கான அறிகுறிகள் தோன்றினால், அவற்றை ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பிப் பரிசோதனை செய்வது அவசியம். அப்படிச் செய்தால் நோயைத் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்தலாம். மிக வலுவுள்ள வைரஸை அழிக்கவல்ல (Anti Virals) தடுப்பூசிகளை மனிதனுக்கும் பறவைகளுக்கும் ஏற்றுதலும் சிறப்பாக அமையும்.

மனிதனுக்கும் நோய்க் கிருமிகளுக்கும் இடையே நடக்கும் போர் மனிதன் தோன்றிய நாள் தொட்டே நடந்தேறி வருகிறது. தற்காலத்தில் பல்வேறு விதமான புதிய நோய்கள் தோன்றுகின்றன. எதிர்காலத்தில் இவை இன்னும் அதிகமாகத் தோன்றவும் கூடும். இவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் கிருமிகளில் உள்ள ஜீன்கள்(Genes) மாற்றடைவதால், அல்லது மாற்றமடை யச்செய்யப் படுவதால் இப்புதிய நோய்கள் தோன்றுகின்றன.


நோய்களைத் தவிர்ப்பதற்கும் அவற்றைத் தடுத்து நிறுத்தவும், மாற்றியமைப்பதற்கும் சர்வதேச விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். விஞ்ஞானிகளோ, நுண்ணங்கிகளோ எத்தரப்பு வெற்றிபெறும் என்பதற்கு எதிர்காலம்தான் பதில் சொல்லவேண்டும். ✱

**பூமி** தன் உடலை ஒரு தடவை சிலிர்த்துக்கொள்ளும் போதெல்லாம் மனிதன் மரண வலி உணர்கின்றான். அத்தருணங்களில் அவலக் குரல்களும் ஓலங்களும் உலகம் முழுமையையும் அதிர வைக்கும். அப்போதுதான் இயற்கையை ஆராதிக்க வேண்டியது பற்றி ஒவ்வொரு மனிதனுக்கும் சிந்தனை வருகிறது. 30 ஆயிரம் உயிர்களைக் காவுகொடுத்துத்தான் 'சுனாமி' என்ற ஜப்பானிய வார்த்தைக்கு ஒவ்வொரு இலங்கையரும் அர்த்தம் தெரிந்தோம். அதன் பின்தான் கடலடி நிலநடுக்கங்கள் பற்றியும் ஆழிப்பேரலைகள் பற்றியும் ஆர்வம் கொண்டோம். இனியாவது வருமுன் காப்பதில் கவனமெடுப்போமா?

மனிதனை அப்படியே கிடுகிடுக்கவைத்துப் புரட்டிப்போடும் இயற்கை அனர்த்தங்கள் பற்றி விளக்குகின்ற தொடர் இது. இதன் முதல் பாகம் கடந்த வாரம் வெளியானது அதில் இயற்கை அனர்த்தங்களின் வகைகள் பற்றியும் புவியின் உட்கட்டமைப்புப் பற்றியும் விளக்கப்பட்டிருந்தது. அதன் இரண்டாம் பாகம் இது.

**க**டந்த வாரம் புவிநடுக்கம் காரணமாக புவிநடுக்க அலைகள் உருவாகின்றன எனவும் அவை மேற்பரப்பலைகள் **(Surface Waves)**, உடல் அலைகள் **(Body Waves)** என இருவகைபடும் எனவும் கூறினோம்.

இவ்விரு அலை வகைகளைப் பற்றி அறிய முற்படுமுன் அலைகள் பற்றி பொதுவான சில விடயங்களை அறிந்து கொள்வது பயன் தரும்.



படம் 10

### அலைகளின் வடிவம்:

அலையொன்றின் வடிவைப் பத்தாவது படம் காட்டுகிறது. அலைகள், அலைமுடி அல்லது அலையின் அதியுயர் புள்ளி **(Crest)**, அலைத்தாழி அல்லது அலையின் அதிகீழ்ப் புள்ளி **(Trough)** ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது. அலைகளை அளவிட இரு கணியங்கள் உபயோகப்படுத்தப்படுகிறது:

1. அலை உயரம் **(Wave Height)** - முடிக்கும் தாழிக்கும் இடைப்பட்ட தூரம்
2. அலை நீளம் **(Wave length)** - இரு அடுத்தடுத்த முடிகள் அல்லது தாழிகளுக்கிடையேயான தூரம்

அலை மீடிறன் **(Wave Frequency)** என்பது ஒரு செக்கனில் ஒரு புள்ளியைக் கடந்து செல்லும் அலைகளின் எண்ணிக்கையாகும். அலைவு காலம் **(Period)** என்பது ஒரு முழு அலைவிற்கு எடுக்கும் காலமாகும்.




பேராசிரியர் இ.குமாரவடிவேல்
விஞ்ஞான பீடாதிபதி
(யாழ்.பல்கலைக்கழகம்)

### சமுத்திர அலைகள்:

முதலில் சாதாரண சமுத்திர அலைகள் எவ்வாறு ஏற்படுகிறதென்பதைப் பார்ப்போம். கடலில் அலைகள் உருவாகுவதற்கு ஈர்ப்பு விசை, ஆழ்கடற் செயற்பாடு, வளிமண்டல அமுக்கம் போன்றன துணைபோகின்றன. எனினும் மிகவும் அடிப்படைக் காரணியாக விளங்குவது - காற்று.

சலனமற்ற நீர்மேற்பரப்பின் மீதாகக் காற்று வீசும்போது, வளி மூலக்கூறுகட்கும் நீர்மூலக்கூறுகட்கும் இடையே ஏற்படும் கவர்ச்சி விசையால், காற்று செல்லும் திசையில் நீர்மூலக்கூறுகளும் இழுத்துச்செல்லப்டுகின்றன. வளி,



படம் 11


நீர் மூலக்கூறுகளுக்கிடையே ஏற்படும் உராய்வின் காரணமாக அலைகள் உருவாக்கப்படுகின்றன. இவை மயிர்த்துளை அலைகள் **(Capillary Waves)** என அழைக்கப்படும். இம்மயிர்த்துளை அலைகள் வட்டப்பாதையில் இயங்கும்.

நீரின் இவ்வட்ட இயக்கம் நிலைக்குத்தாக நீரின் கீழேயும் தொடருமாயினும் ஆழம் அதிகரிக்க இவ்வியக்கத்தின் வலு குறையும். மேற்பரப்பில் வட்டப் பாதையின் ஆரையானது அலை உயரத்திற்குச் சமனாகவிருக்கும். இது பதினொராவது படத்தில் காட்டப்பட்டுள்ளது. அலை நகர நகர மேலும் மேலும் நீர் மூலக்கூறுகள் சேகரிக்கப்பட்டு அலையின் பருமனும் திணிவு வேகமும் அதிகரிக்கிறது. நீர் அலைகள் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டிய முக்கிய தகவல் என்னவெனில் அவை நீரின் நகர்வைக் குறித்து நிற்கவில்லை. பதிலாக அவை நீர் மூலக்கூறுகளை வட்டப் பாதையில் இயங்கச் செய்வதன் மூலம் சக்தியை நீரினூடு நகர்த்துகின்றன என்பதாகும். அலைகளிலுள்ள நீரின் வட்டப் பாதை இயக்கத்தை சமுத்திரத்தில் நெஞ்சளவு நீரில் நிற்கும்போது நீங்கள் உணரலாம். சமுத்திரத்திலிருந்து வரும் அலை உங்களைத் தாண்டிச் செல்லும் போது அது உங்களைத் தூக்கிக் கொண்டு சிறிது தூரம் கரையை நோக்கிக் காவிச் சென்று பின் கீழ் நோக்கி விழுத்தி விட்டுச் செல்லும்.

நாம் சாதாரணமாக பருத்தித்துறைக் கடலில் காணும் இந்துமகா சமுத்திரத்திலிருந்து வரும் ஓசையுடன் கூடிய அலைகள் பத்து செக்கன் அலைவுகாலமும் 150m அலைநீளமும் உடையவை. இச் சாதாரண அலைகளின் சக்தியின் முதல் **(Source)** காற்றாகும். இச்சமுத்திர அலைகளின் வேகமும் பருமனும் காற்றின் வலிமையில் தங்கியிருக்கும்.

ஆழ்கடலிலிருந்து அலை கரையை அண்மிக்கும்போது அது கடல் அடித்தளத்தை 'உணரும்'. அதனால் அதன் வேகம் தணியும். வட்டப் பாதை தட்டையாக மாற்றமுற அலையின் உயரம் அதிகரித்துச் சிதறும். மோதிச் சிதறி நுரையாகும் பகுதியில் நீரானது வட்டப்பாதையிலன்றி முன்பின்னாக நகரும். இவை படம் 12 இல் காட்டப்பட்டுள்ளது.

அலைகள், நீரலைகள் பற்றிய மேற்கண்ட சுருக்கக் குறிப்புகளுடன், புவி நடுக்க அலைகள் பற்றிச் சிந்திப்போம். புவி அதிர்வின் போது வெளிவிடப்படும் பெருமளவு சக்தி புவிநடுக்க அலைகளை **(Seismic Waves)** உருவாக்குகிறது. இவ்வலைகள் புவியின் உட்பகுதி (உடல் - **Body**) ஊடாகவும் செல்லலாம் ஏனையவை புவி மேற்பரப்புக்கு **(Earth Surface)** சமீபமாகவும் நகரலாம். உடலினூடு செல்லும் அலை உடல் அலை **(Body Waves)** எனவும் மேற்பரப்பிற்குச் சமீபமாக நகரும் அலை மேற்பரப்பலை **(Surface Waves)** எனவும் அழைக்கப்படும்.




படம் 12

### புவியதிர்வு அலைகள்: உடல் அலைகள்

உடல் அலைகள் வேகம் கூடியவை. அவை முதலலைகள் **(Primary Waves or P-Waves)**, துணையலைகள் **(Secondary Waves or S-Waves)** என இருவகைப்படும்.

### புவியதிர்வு அலைகள்: முதலலைகள் (P-waves)

**P**-அலைகள் ஒலி அலைகள் போன்றவை. **P**-அலைகள், நெருக்கல் **(Compression)**, ஐதாகல் **(Extension)** ஆகிய இரண்டு வகைத் துடிப்புகள் **(Pulses)** மாறி மாறி அமைந்த தள்ளு-இழு **(Push-Pull)** பாணியில் நகரும் அலைகளாகும். அதாவது **P**-அலைகளில் அலைச் செலுத்துகைத் திசைக்கு சமாந்தரமாக துணிக்கைகள் அதிரும். அதனால் இவை நீள்பக்க அலைகள் **(Longitudinal Waves)** எனப்படும். **P**-அலைகளின் செலுத்துகையை இழுவையிலுள்ள விற்சுருள் **(Spring)** ஒன்றின் ஒரு முனையை திடீரென தள்ளினால் ஏற்படும் இயக்கத்தை மனக்கண் கொண்டுவருவதன் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். இது படம் 13 இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.



படம் 13


**P**-அலைகள் அவை உருவாகக் காரணமான முதலில் இருந்து (வேகமாக ஊதப்படும் பலூன் போல) எப்பொழுதும் வெளி நோக்கிப் பரவும். **P**-அலைகள் திண்மம், திரவம், வாயு போன்ற எப்பதார்த்தினூடும் செல்லக்கூடியது. அவற்றின் வேகம் அவை செல்லும் பதார்த்தங்களின் அடர்த்தி **(Density)**, அமுக்கப்படு தன்மை **(Compressibility)** ஆகியவற்றில் தங்கியிருக்கும். அடர்த்தி கூடிய அல்லது அமுக்கத்தை தடைசெய்யுமியல்பு கூடிய பதார்த்தங்களில் **P**-அலைகள் வேகமாகச் செல்லும். உதாரணமாக கருங்கற் பாறைகளில் **P**-அலைகளின் வேகம் செக்கனுக்கு 5.5 **km.** நீரில் அவற்றின் வேகம் செக்கனுக்கு 1.5 **km. P**-அலைகள் ஒலி அலைகள் போன்றவையாதலால், அவை வளியினூடும் செல்லும்.

**P**-அலைகள் **S**-அலைகளைவிட வேகம் கூடியன. எனவே அவை புவியதிர்வைப் பதியும் கருவி அமைந்துள்ள நிலையத்தை முதலில் சென்றடையும்.

### புவியதிர்வு அலைகள் : துணையலைகள் (S-Waves)

துணையலைகள் அல்லது **S**-அலைகள் புவியதிர்வுப் பதி கருவி உள்ள நிலையத்தை இரண்டாவதாகச் சென்றடைவன. அலை முன்னேறிச் செல்லும் திசைக்குச் செங்குத்தான திசையில் துணிக்கைகள் (குவிக்கப்பட்டும் நீக்கப்பட்டும்) உலுக்கப்படும். அதாவது இவை குறுக்கலைகள் **(Transverse Waves)**.

பாய்தலுக்கு உபயோகிக்கும் கயிறொன்றின் முனையொன்றை மேலும் கீழுமாக உதறும் போது கயிற்றின் நகர்வை மனக்கண்முன் தோற்றுவிப்பதன் மூலம் இவ்வலைகளை இலகுவில் விளங்கிக்கொள்ளலாம். (படம் 14).




படம் 14

**S**-அலைகள் திண்மங்களினூடு மட்டுமே நகரும். திரவம் அல்லது வாயுவை **S**-அலையொன்று சென்றடைந்தால், அதன் சக்தி பின் நோக்கி திண்மத்துள் தெறிப்படையும் அல்லது வேறுவகையாக மாறும். **S**-அலையின் வேகம் பதார்த்தத்தின் அடர்த்தியிலும் செலுத்துகைத் திசைக்குச் செங்குத்தான **(Orthogonal)** திசையில் உலுக்கப்படுவதைத் தடுக்கும் திறனிலும் **(Resistance to Shearing)** தங்கியிருக்கும். திரவங்களுக்கும் வாயுக்களுக்கும் வெட்டுத்தொடு விசைத்திறன் **(shear strength)** இன்மையால், அவை **S**-அலைகளைச் செலுத்தமுடியாது.


கருங்கற் பாறைகளில் **S**-அலைகளின் வேகம் செக்கனுக்கு 4 முதல் 4.5 **km** ஆகவிருக்கும். திரவ ஊடகத்தை (உதாரணமாக நீரை) அடைந்தவுடன் **S**-அலைகள் நின்றுவிடும். மேலும் கீழுமான **(up and down)** இயக்கத்தின் மூலம் குறுக்கலைகளான இவ் **S**-அலைகள், நில மேற்பரப்பைக் குலுக்கி கட்டடங்களுக்கு பெரும் சேதத்தை விளைவிக்கமுடியும்.

பெரிய பூகம்பங்கள் உலகெங்குமுள்ள புவியதிர்வுப் பதிகருவிகளால் பதியப்படக்கூடிய அளவிற்கு சக்திவாய்ந்த உடல் அலைகளை உருவாக்கும். இப் **P, S**-அலைகள் புவியூடாகச் செல்லும் போது எளிய பாதைகளினூடு செல்வதில்லை. அவை தமது வேகத்தை அதிகரிக்கலாம் குறைக்கலாம் திசையை மாற்றலாம் இல்லாதொழிந்து போகலாம். இவ்வலைகளின் நடத்தை அவை செல்லும் பாதையிலுள்ள புவிப் பதார்த்தத்தின் அடர்த்தி, அமுக்கப்படும் தன்மை, புவிப் பதார்த்தம் திரவநிலையிலா திண்ம நிலையிலா உள்ளது போன்ற புவியின் ஒருபடித்தானமற்ற **(inhomogeneous)** தன்மைகளில் தங்கியிருக்கும். ஆகவே புவியதிர்வலைகளின் நடத்தைகளைப் பகுப்பாய்வு செய்வது மூலம் புவியின் உட்கட்டமைப்பு பற்றிய மாதிரியை நாம் அறிந்து கொள்ளலாம்.

புவி மேற்பரப்பிலிருந்து **P, S** அலைகளின் பாதைகளை நோக்கின், தொடக்கத்தில் அவற்றின் வேகம் அதிகரிக்கக் காணப்பட்டு, பின் 100 **km** க்கும் 350 **km** க்குமிடைப்பட்ட ஆழத்தில் வேகத் தேய்வு காணப்படும். இது 100 **km** க்கும் 300 **km** க்கும் இடைப்பட்ட ஆழத்தில் இளகிய பாகுக்கோளம் **(Asthenosphere)** அமைந்துள்ளதை உறுதிப்படுத்துகிறது. பின்னர் 2,900 **km** ஆழம் வரை வேகம் மாற்றமடைகின்ற போதிலும் பொதுவாக அதிகரிக்கக் காணப்படும். 2900 **km** ஆழத்தில் **P**-அலைகளின வேகம் சுமாராகக் குறைய, **S**-அலைகள் இல்லாதொழியும். இது 2,900 **km** வரை நடுவுறை **(Mantle)** என்பதையும் நடுவுறை எல்லையில் **S**-அலைகள் இல்லாதொழிவதானது வெளியகம் **(Outer Core)** அநேகமாக திரவ நிலையிலுள்ளதென்பதையும் காட்டுகிறது. வெளியகத்துட்செல்லும் **P**-அலைகளின் வேகம் சிறிது சிறிதாக அதிகரித்து 5150 **km** ஆழத்தில் திடீர் அதிகரிப்புக் காணப்படும். இது உள்ளகம் திண்மம் என்பதைக் காட்டுகிறது.




படம் 15 ஆனது புவியதிர்வுத் தானத்திலிருந்து உற்பத்தியாகும் **P,S** அலைகள் உள்ளக, வெளியக மேற்பரப்புகளில் முறிவடைந்து செல்வதையும் **P,S** அலைகள் இரண்டுமே சென்றடையக் கூடிய வலயங்களையும் **P** அலைகள் மட்டுமே சென்றடையக்கூடிய வலயங்களையும் இருவகையலைகளுமே சென்றடைய முடியாத வலயங்களையும் காட்டுகின்றது.



படம் 16

பு
புவிமே
திர்வலைக
ரேலி அலை
பிரதான வ
விஞ்ஞானிக
குளமொன்
விழுந்த பு
வில் குறுக்
றனவோ அ
திலிருந்து (
உருவாகும்
கள் **(Lon**
**(L-Waves)**
அலைநீளம்
டன் ஒப்பி
புவியதிர்வு
யாகையால
யுள்ள நிலை
யும்.


லோவ்
களின் இய
குறுக்கலை
லோவ் அ
இயக்கமும்
செங்குத்தா
வெளில் **S**-
**and Down)**
கள் புவிமே
மான கிடை
**(Side to Side**

# ின் ... அதிர்வு




### புவியதிர்வு அலைகள்: மேற்பரப்பலைகள

புவிமேற்பரப்பிற்கு சமீபமாக நகரும் புவியதிர்வலைகள் லோவ் அலைகள் **(Love Waves)**, றேலி அலைகள் **(Rayleigh Waves)** என இரண்டு பிரதான வகைப்படும். லோவ், றேலி என்பது விஞ்ஞானிகள் இருவரின் பெயர்கள். சலனமற்ற குளமொன்றில் கல்லொன்றை வீசினால் கல் விழுந்த புள்ளியிலிருந்து எவ்வாறு வட்டவடிவில் குறுக்கலைகள் வெளி நோக்கிச் செல்கின்றனவோ அது போலவே புவியதிர்வு மேல் மையத்திலிருந்து **(Epicentre)** லோவ், றேலி அலைகள உருவாகும். இவ்விரு அலைகளும் நீள அலைகள் **(Long Waves)** அல்லது **L**-அலைகள் **(L-Waves)** எனப்படும். ஏனெனில் இவற்றின் அலைநீளம் **(Wavelength) P, S** அலைகளுடன் ஒப்பிடும் போது அதிகம். **L**-அலைகளே புவியதிர்வு அலைகளில் வேகம் குறைந்தவையாகையால் அவையே புவியதிர்வு பதிகருவியுள்ள நிலையத்தைக் கடைசியாகச் சென்றடையும்.



படம் 15.

### மேற்பரப்பலைகள்: லோவ் அலைகள்


லோவ் அலைகளின் இயக்கம் **S**-அலைகளின் இயக்கம் போன்றது. இவையிரண்டுமே குறுக்கலைகள். **S**-அலைகளைப் போலவே லோவ் அலைகளினுடைய வெட்டுத்தொடு திசை இயக்கமும் அலை முன்னேறும் திசைக்கு செங்குத்தாகவேயிருக்கும். வித்தியாசமென்னவெனில் **S**-அலைகள் மேலும் கீழுமான **(Up and Down)** இயக்கமுடையன. லோவ் அலைகள் புவிமேற்பரப்பிற்கு அண்ணளவு சமாந்தரமான கிடைத்தளத்தில் பக்கமிருந்து பக்கலிற்கு **(Side to Side)** இயங்குவன. படம் 16 ஐப் பார்க்க.




இதனை படம் 14 இல் பாய்தல் கயிறானது நிலத்தில் கிடப்பதாக மனக்கண் முன்னே தோற்றுவித்துக் கொள்வது மூலமும் இலகுவில் விளங்கிக்கொள்ளலாம். **S**-அலைகளைப் போலவே, **L**-அலைகளும் நீர், வளியினூடு செல்ல மாட்டாது.

### மேற்பரப்பலைகள்: றேலி அலைகள்

காற்று வீசுவதால் கடல் நீரில் உருவாகும் சாதாரண நீரலைகள் போலவே (படம் 11,12), றேலி அலைகளும் செலுத்தப்படும். காற்று வீசுவதானால் உருவாகும் நீர் மூலக்கூறுகளின் வட்ட ஒழுக்கு (பாதை) இயக்கம் போலவே றேலி அலைகளும் செலுத்தப்படும். நீரலைகளுக்கும் றேலி அலைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் நீரலைகள் முன்னேறும் திசையிலேயே மூலக்கூறுகளும் முன்னோக்கிச் சுழலும். ஆனால் றேலி அலைகளோ முன்னேறும் திசைக்கு





எதிர்திசையிலே பின்னோக்கிச் சுழலும் (படம் 17,18).

றேலி அலைகளால் உருவாகும் குலுக்கல் நிலைக்குத்தான அசைவையும் கிடையான அசைவையும் ஏற்படுத்தும். இவ்வாறு உருளும் அலைகள் நிலத்தினூடும் நீரினூடும் செல்ல வல்லன. புவியதிர்வின் போது மக்களது உணர்வு கடலில தோணியிலிருக்கும் ஓருவரது அசைவு அல்லது தொட்டிலில் உள்ள குழந்தையொன்று உணரும் உணர்வு போலமைவது றேலி அலைகளின் இயக்கத்தினாலாகும். பொதுவாக றேலி அலைகள் லோவ் அலைகளை விட வேகம் குறைந்தவை.

றேலி அலைகள்தான் கட்டடங்களுக்கு நினைத்துப் பார்க்க முடியாத பெருஞ்சேதத்தை விளைவிப்பன. ஏனெனில் அவையே அதிக நில நகர்வை ஏற்படுத்துவதடன் கடந்து செல்ல அதிகளவு நேரத்தையும் எடுப்பவை.

### புவி நடுக்கத்தை அளவிடும் கருவிகள்:

சென்ற வாரம் புவிநடுக்க அலைகளை உணரவும் அவற்றைத் தொடர்ச்சியாக பதிவு செய்யவும் அளவிடவும் உபயோகப்படும் புவிநடுக்கப் பதிகருவி **(Seismograph)** பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். புவியதிர்வுலைகள் பற்றி மேலேதரப்பட்ட தகவல்களும் விளக்கங்களும் இக் கருவியின் செயற்பாட்டை விளங்கிக் கொள்ள உதவும்.





படம் 19

புவிநடுக்கமானியானது பாரமுள்ள திணிவொன்று ஊசல் போன்று வில்லொன்றினால் கருவியின் புவிக்குக் கெட்டியாக இணைக்கப்பட்ட சட்டத்தில் படம் 19 இல் காட்டியவாறு தொங்கவிடப்பட்டிருக்கும். சாதாரண நிலையில் திணிவு எதுவித அசைவும் அற்றதாகவிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். நிலம் அசையும் போது புவிநடுக்கமானியின் சட்டமும் புவியுடன் சேர்ந்து நகரும். புவிநடுக்கப் பதிகருவி **(Seismogram)** என்பது ஒரு பதியும் உபகரணம். புவிநடுக்கமானியின் திணிவுக்கு இணைக்கப்பட்ட சுட்டும் பேனா **(Pointer Pen)** நிலவதிர்வின் போது அசைந்து பதிகருவியின் நகர்ந்து கொண்டிருக்கும் கடதாசியில் மேலும் கீழுமாக வரைந்து ஒரு நிரந்தர பதிவை ஏற்படுத்தும் (படம் 20,21) புவியதிர்வின் இந்நிரந்தர வரைபு புவிநடுக்கப்பதிவு **(Seismograph)** எனப்படும்.


படம் 19 இல் காட்டப்பட்டிருப்பது புவியின் நிலைக்குத்து அதிர்வுகளை அளவிடும் கருவியாகும். படம் 22 புவியின் கிடை அதிர்வுகளைப பதியும் கருவியொன்றைக் காட்டுகிறது. இங்கு திணிவானது ஒரு கெட்டியான தூணிலிருந்து தொங்கவிடப்பட்டு புவி கிடையாக நகரும் போது திணிவும் ஊசல் போல் கிடையாக அசையுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. திணிவுக்கு இணைக்கப்பட்ட சுட்டும் பேனா கிடையதிர்வின் நிரந்தர பதிவைத் தருகிறது.

புவிநடுக்கங்களைப் பதியவும் கற்கவும் உலகெங்கிலும் நிலநடுக்கப் பதிகருவி நிலை




யங்களின் வலைப்பின்னல் பராமரிக்கப்படுகிறது. புவிநடுக்கமேற்பட்ட ஒரு சில நிமிடங்களுள் உலகின் பல பகுதிகளிலுமுள்ள பதிகருவி நிலையங்கள் அவற்றை உணரும். **P,S,L**




என்ற பலவகை புவிநடுக்க அலைகள் வெவ்வேறு வேகங்களில் செலுத்தப்படுவதால் அவை ஒரு குறித்த வரிசையிலேயே பதிகருவி நிலையத்தை வந்தடையும்: முதலில் **P**-அலைகள். பின்னர் **S**-அலைகள். இறுதியில் மேற்பரப்பலைகள். ஆகவே இம்மூன்று வகை அலைகளையும் பதிவில் வேறுபடுத்திக் காணலாம். பதிவுகளை ஆராய்ந்து நிலநடுக்கம் நடந்தவிடம், அதன் அளவு ஆகியவற்றைக் கூறலாம்.

படம் 23 உம் 25 உம் புவிநடுக்கம் நடந்தவொருவிடத்தையும் அது பதியப்படும் **A,B** என்ற இரு நிலையங்களையும் அவற்றையடையும் அலைகளையும் காட்டுகிறது. இவ்விரு நிலையங்களிலும் உள்ள பதிகருவிகளில் பதியப்படும் பதிவுகள் முறையே படம் 24,26 இல் காட்டப்பட்டுள்ளன. புவிநடுக்க மையத்திலிருந்து பதிகருவி நிலையமமைந்த இடத்தின் தூரத்திற்குத் தக **P,S** மற்றும் மேற்பரப்பலைகளுக்கிடையேயான வேறாக்கம் கூடிக்குறையும். இந்நேர இடைவேளையைக் கொண்டு புவி நடுக்கம் எவ்வளவு தூரத்தில் இடம்பெற்றது என்பதைத் துல்லியமாகக் கணிக்கலாம்.

ஒரு குறித்த பதிகருவி நிலையத்தால் நிலவதிர்வு எவ்வளவு தூரத்தில் இடம்பெற்றுள்ளது என்பதைக் கூற முடியுமே தவிர எவ்விடத்தில் இடம்பெற்றது என்பதைக் கூற முடியாது. பதிகருவி நிலைய அதிகாரி உலக படத்தில் தமது நிலையமிருக்கும் இடத்தைச் சுற்றி ஒரு வட்டத்தை வரைந்து அவ்வட்டத்தில் உள்ள ஏதோவொருவிடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்று மட்டுமே கூற முடியும். மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதிகருவி நிலையங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து மட்டுமே புவிநடுக்கமேற்பட்ட இடத்தை வரையறை செய்ய முடியும். மூன்று நிலையத்தாரால் வரையப்பட்ட வட்டங்கள் மூன்றும் ஒன்றையொன்று வெட்டும் பொதுப் புள்ளியே நிலநடுக்கமேற்பட்ட இடமாகும்.

### வருடந்தோறும் இலட்சக்கணக்கான நிலநடுக்கங்கள்

கடந்த வாரம் றிச்சர் அளவு பற்றிக் கூறினோம். இந்த அளவு ஒரு குறிப்பிட்ட பின்னத்தின் மடக்கை **(logarithm)**யாகத் தரப்படுகிறது. 10 இன் மடக்கை 1. 100 இன் மடக்கை 2. 1000 இன் மடக்கை 3 என்பது அறிந்ததே. ஆகவே றிச்சர் அளவு ஒன்றினால் அதிகரித்தால் புவியதிர்வலைகளின் வீச்சம் பத்து மடங்கு அதிகமெனப் பொருள்படும். ஆனால் நிலவதிர்வால் வெளிவிடப்படும் சத்தியோ பத்து மடங்கல்ல அதைவிடப் பலப்பல மடங்கு அதிகம். றிச்சர் அளவு 4 இனால் வெளிவிடப்படும் சக்தி ஒரு அலகு எனில், அதற்கு மேற்பட்ட றிச்சர் அளவு கொண்ட நடுக்கங்களால் வெளிவிடப்படம் சக்தி

| றிச்சர் அளவு | றிச்சர் அளவு 4 க்குரிய சக்தியோடு ஒப்பிடும்போது சக்தி |
|---|---|
| 4 | 1 |
| 5 | 48 |
| 6 | 2,050 |
| 7 | 80,500 |
| 8 | 2,800,000 |

அட்டவணை 1

எவ்வளவாயிருக்கும் என்பதைப் பின்வரும் அட்டவணை 1 காட்டுகிறது:

ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ பத்து இலட்சம் புவியதிர்வுகள் உலகெங்கும் ஏற்படுகிறது. இவற்றை உலகெங்குமுள்ள நில நடுக்க பதிகருவிகள் பதிவு செய்கின்றன. ஆனால், இவற்றில் பெரும்பாலானவை மனிதரால் உணரப்படுவதில்லை. கீழே தரப்பட்ட அட்டவணை 2 ஒவ்வொரு வருடமும் உலகில் ஏற்படும் நிலவதிர்வுகளை றிச்சர் அளவீட்டில் வகைப்படுத்திக் காட்டுகிறது.

வருடந்தோறும் ஏறத்தாழ இருபது பெரிய அல்லது மிகப்பெரிய நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஆனால் வருடமொன்றில் ஏற்படும் பத்து இலட்சம் நடுக்கங்களினால் வெளிவிடப்படும் சக்தியின் தொண்ணூறு வீதமானது இருபது பெரிய, மிகப் பெரிய அதிர்வுகளாலேயே ஏற்படுகிறது.

(வளரும்)

| றிச்சர் அளவு | வருட சராசரி அதிர்வுகள் | வகை |
|---|---|---|
| 8.5 க்கு மேல் | 0.3 | மிகப்பெரிய |
| 8 - 8.4 | 1 | பெரிய |
| 7.5 - 7.9 | 3 | |
| 7 - 7.4 | 15 | |
| 6.6 - 6.9 | 56 | இழப்புகளை |
| | ஏற்படுத்தவல்லவை | |
| 6 - 6.5 | 210 | |
| 5 - 5.9 | 800 | சேதமேற்படுத்த வல்லவை |
| 4 - 4.9 | 6,200 | சிறியது |
| 3 - 3.9 | 49,000 | |
| 2 - 2.9 | 300,000 | |
| 0 - 1.9 | 700,000 | |

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 – 02 – 1930



மறைவு 01 – 12 – 2004

அமரர் **சபாபதி நல்லையா** புங்குடுதீவு -1

திங்கள் பன்னிரண்டு சென்றாலும் அகலாது உங்கள் நினைவு ஐயா!
தீங்கேதும் நினையாத உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மனைவி:* ந.பாய்க்கியம்
பிள்ளையம்மா, குடும்பத்தினர்.

*புங்குடுதீவு 01.*

(42941)(50)(14-19)

## DANISH REFUGEE COUNCIL (DRC)

DRC works at promoting lasting solutions to the problems of refugees and internally displaced persons throughout the world. In Sri Lanka, DRC supports reintegration of returned persons in the North and East and capacity building of local partner organizations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee and Kilinochchi.

### Vacancies

**Administrative Assistant – Kilinochchi**

The Administrative Assistant will assist the Head of Office in all matters relating to office administration, including reception work, secretarial tasks, book keeping , accounting, filing, vehicle movement etc.

**Qualifications:**

* Minimum GCE Advanced Level.
* Formal training in accounting. Preferably graduates in accountancy or management.
* Experience in office administration.
* Good secretarial and inter personal skills.
* Computer skills in MS Office, particularly spreadsheets.
* Good written and spoken English. Ability to communicate in Tamil required.

**Driver – Kilinochchi**

The driver will be responsible for the transport of personnel and goods safely and for the maintenance of the vehicles in good condition.

**Qualifications:**

* Valid driving license for Private cars, vans and light trucks.
* Fair knowledge of motor mechanism.
* Over 05 years driving experience.
* Pleasant personality.
* Ability to converse in English and Tamil.
* Willingness to travel out of station as and when required.

**Finance Assistant – Vavuniya**

The Finance Assistant will be responsible for day to day grant accounting, initiating payments, verifying partner accounts, preparation of monthly financial statements, cash disbursements Etc, under the supervision of the Finance Officer.

* Minimum GCE Advanced Level.
* Part Professional qualifications in accounting, preferably graduates.
* Minimum 03 years experience in bookkeeping and finalization of accounts.
* Good communication and inter personal skills.
* Computer skills in MS Office, particularly spreadsheets.
* Good written and spoken English. Ability to converse in and read Tamil required.

Please forward your curriculum vitae along with contact telephone No and names of two non-related referees to the following address within 07 days of this advertisement.

**Head-Finance & Administration**

Danish Refugee Council
No.77, 1st Floor, 1st Cross Street, Vavuniya.
Fax No.0242224009, E.mail:drc-hfa@s.tnet.lk

(C46243)(50)

## வேகப்பந்து வீச்சாளருக்குப் பயிற்சிமுகாம்

கிளிநொச்சி,நவ.19

இலங்கைக்கான ஆசிய கிரிக்கெட் அக்கடமி 'கீறோ கோண்டா' நிறுவனத்துடன் இணைந்து வேகப்பந்து வீச்சாளருக்கான பயிற்சிமுகாமை நடத்தவுள்ளது.

இப்பயிற்சிமுகாம் எதிர்வரும் 26 ஆம் திகதி தம்புள்ளையில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்பும் 15-20 வயதிற்குட்பட்ட மாணவர்கள் தமது கிரிக்கெட் பயிற்றுநர்கள் ஊடாக இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் வீரர்கள் ஒரு வருடம் வேகப்பந்துவீச்சுப் பயிற்சிக்கான புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொள்வர் என ஒழுங்கமைப்பாளர் சிறீஸ் கந்தகுமார் தெரிவித்தார்.

(ஓ-190-202)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

31 ★ 05 ★ 1926



20 ★ 11 ★ 2004

**திருமதி அன்னலட்சுமி மாணிக்கம்**

*(செல்வநாயகம்)*

**திதி:11.12.2005**

முந்நூற்றி அறுபத்தைந்து தினங்கள் - உன்
மூச்சு நின்று ஆனதுவோ - அம்மா
எந் நெஞ்சில் என்றுமே நிலைக்கும்
எந்தாயின் உயிர் மூச்சு
உங்கள் பிரிவால் துயருறும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப் பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்
தகவல் மகன்: மா.குலேந்திரன்

ஆண்டுத் திவசம்: 11.12.2005
சாவகச்சேரியில் நடைபெறும்
தொடர்புகட்கு : அமுது 0777852077

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 – 12 – 1976



உதிர்வு 20 – 11 – 2000

அமரர்
**அருள்பிரதாசன் முரளிதரன்**

**திதி:26.11.2005**

ஆண்டுகள் ஐந்து உருண்டோடினும்
ஆறவில்லை எம்துயர் மகனே
ஆற்றொணாத் துயருடன் கழிக்கின்றோம் காலமதை
வஞ்சகமில்லா உள்ளம் கொண்ட உன் உயிரை
வஞ்சகர்தான் பறித்தெடுத்து விட்டார்
இனி எம் உயிரும் உன்னுடன் சேரும்வரை
குடும்பத்தவர், நண்பர்கள் எல்லோரும்.
உனது ஆத்மாசாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: பெ.அருள்பிரதாசன்
தும்பளை, பருத்தித்துறை.

(46234)

குடும்பத்தவர், நண்பர்கள்,
உறவினர்கள்.



# விழிப்பின் பதிவுகள்



உதயன்

YA TV

## ஊடகங்களும் சமாதானமும்



உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாக உணரப்பட்டுள்ளது. பல நாடுகளில் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுவதற்கு ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது.

வியட்னாம் யுத்த காலத்தில் வியட்னாமில் அமெரிக்க படையினரின் செயற்பாட்டை அமெரிக்க ஊடகங்கள் அம்பலப்படுத்திய காரணத்தால் அமெரிக்க மக்கள் கொதித்தெழுந்தார்கள். பல எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றன. இதன் விளைவாக அமெரிக்கப்படை வியட்னாமிலிருந்து வாபஸ் பெற நேர்ந்தது. இதுபோல பல சம்பவங்களை கூற முடியும்.

அண்மையில் கூட ஈராக்கில் அமெரிக்க படையினர் சிறைக்கைதிகள் மீது நிகழ்த்திய கொடூரத்தை பிரிட்டன் அமெரிக்க ஊடகங்கள் வெளிப்படுத்திய காரணத்தால் அமெரிக்க நிர்வாகம், சம்பந்தப்பட்ட படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது.

இவ்வாறு ஊடகங்கள் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த விடயங்களை, அடக்கு முறைகளை பாரபட்சமில்லாமல் வெளிப்படுத்த வேண்டியது கடமையாகும். ஆனால் எமது நாட்டில் பாதிக்கப்படுகின்ற தமிழ் பேசும் மக்கள் குறித்த விடயங்களை தமிழ் ஊடகங்கள் மட்டுமே வெளிக்கொண்டு வருகின்றன. ஆனால் இது குறித்து சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முற்றாக தடைப்போக்கை கடைப்பிடிப்பதையே காணக்கூடியதாக உள்ளது.

தமிழ் ஊடகங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு சார்பான செய்திகளையும், சிங்கள ஆங்கில ஊடகங்கள் பெரும்பான்மை இனத்தவரின் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. இதன்மூலம் இலங்கை ஊடகத்துறை தமிழ், சிங்களம் என இரு தரப்பாக பிளவுபட்டுள்ளதை வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது.

இதன் பலனாக கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடிய போரின் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் சமூகங்கள் குறித்து சிங்கள ஆங்கிலப்பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொண்டன. படையி-னரின் வெறியாட்டத்தினால் பலியான மக்கள் பற்றியும், யுத்தத்தினால் அழிக்கப்பட்ட சொத்துக்கள் பற்றியும், பறிக்கப்பட்ட உரிமைகள் பற்றியும் இவை கண்டும் காணாமலிருந்தன.

அதேபோல வடகிழக்கிலும், வெளியிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் வக்காளத்து வாங்கிய இந்த ஊடகங்கள் அவற்றை நியாயப்படுத்தின. தமிழர்களை பயங்கரவாதிகளாக சித்தரித்தன. தமிழ் மக்கள் குண்டுதாரிகள் அவர்களுக்கு புகலிடமளிக்கக்கூடாது என்ற வகையில் செய்திகளை வெளியிட்டன. தமிழ் மக்களுக்கு வாடகைக்கு வீடுகளை வழங்குவதைக்கூட ஆபத்தான செயலாக வர்ணித்து விளம்பரங்களை வெளியிட்டன. அதேபோல தெற்கின் பல பாதிப்புக்களுக்கு தமிழ் பேசும் சமூகத்தினரே காரணமென சுட்டிக்காட்டின.

இதன் விளைவாக சிங்கள மக்களிடையே தமிழ் பேசும் சமூகத்தினருக்கு எதிரான உணர்வலைகள் ஏற்பட்டன. அவர்களின் மனங்களில் தமிழருக்கு எதிரான விம்பத்தை கட்டியெழுப்பின. இதன் மூலம் நாட்டின் ஒரு சமூகத்தினர் இன்னுமொரு சமூகத்தினரை வெறுப்புடன் பார்க்கின்ற நிலையை ஏற்படுத்தினர்.

இதற்கு மேலாக வடகிழக்கில் இடம்பெற்ற போர் குறித்த செய்திகளை திரித்து வெளியிட்டனர். புலிகளின் தாக்குதல்களை பயங்கரவாத தாக்குதல்களாகவும், படையினரின் செயற்பாடுகளை வீரம் செறிந்த செயற்பாடுகளாகவும் வர்ணித்து செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டன. கைது செய்யப்படுகின்ற அப்பாவி மக்களையும், கொல்லப்படுகின்ற அப்பாவி மக்களையும் புலிகளாக சித்தரித்தன. புலிகள் முழு நாட்டையும் கைப்பற்றுவதை தடுப்பதற்கு, அவர்கள் சிங்கள மக்களை அழிப்பதை தடுப்பதற்கு யுத்தம் அவசியமானதென நியாயப்படுத்தின.

ஆனால் இத்தகைய செயற்பாடுகளால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை, இழப்புக்களை முழு உலகமும் நன்கு உணர்ந்துள்ளது. இந்த நாட்டின் வறுமைக்கும், பின்னடைவுக்கும் யுத்தமே காரணம் என்பதை சகலரும் உணர்ந்துள்ளனர். ஆனால் இந்த ஊடகங்கள் அதனை இன்றுவரை உணர்ந்து கொண்டதாக காட்டிக்கொள்ளவில்லை.

மாறாக இன்றும்கூட இனவாத செயற்பாட்டுடன் செய்திகளை திரித்து வெளியிடுகின்றன. குறிப்பாக வடகிழக்கு சம்பவங்களை தமக்கேற்றால் போல இட்டுக்கட்டி வெளியிடுகின்றன. இதன் காரண-மாக சமாதானம் ஒன்றை நாட்டில் ஏற்படுத்துவதற்கு சில ஊடகங்கள் தடையாக இருக்கின்றதாகவே பலரும் எண்ணத்தலைப்பட்டுள்ளனர்.

இதன் பின்னணியில் சில இனவாத அரசியல் கட்சிகளும், முதலாளிகளும் இருக்கின்றனர். அதேபோல ஊடகத்துறை குறித்தும் ஊடக தர்மங்கள் குறித்தும் அறிவற்ற ஊடகவியலாளர்களின் குறைந்த அறிவு மட்டமும் இந்த பிரச்சனைக்கு காரணமாக அமைகின்றது. மேலும் சிங்கள ஊடகங்கள் அளவில் இல்லாவிட்டாலும் தமிழ் ஊடகங்களிலும் பக்கச்சார்பான விடயங்கள் உள்ளதை மறுக்க முடியாது.

எனவே இனியாவது இந்த ஊடகங்கள் நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, அதற்கு பிரதான தேவையான சமாதானத்திற்கு ஆதரவாக செயற்பட முன்வருவதே இன்றைய தேவையாக உள்ளது.

- என். ஜீவேந்திரன்

மக்கள் சமாதான முன்னனி இலங்கையில் இனங்களுக்கிடையில் சகோதாரத்துவத்தை வளர்ப்பதை பிரதான நோக்கமாக கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்திவரும் அமைப்பாகும். இலங்கையின் பல பிரதேசங்களை உள்ளடக்கி சிங்கள தமிழ் முஸ்லிம் இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர சமாதானம் தொடர்பான பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை இது நடத்துகின்றது. நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் பங்குகொண்ட அத்தகைய ஒரு நிகழ்ச்சி சில தினங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் விழிப்பின் பதிவுகள் குறித்தும் அது சமாதான நடைமுறைகளுக்கும், இனப் புரிந்துணர்விற்கும் வழங்கிவரும் முக்கிய இடம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. யங் ஏசியா டெலிவிஷனின் ஊடகவியலாளர்களால் உருவாக்கப்படும் விழிப்பின் பதிவுகள், சதி சடஹன் போன்றசமாதான பக்கங்கள் நவமணி, வலம்புரி, உதயன் போன்ற தமிழ் பத்திரிகைகளிலும், ராவய எனும் சிங்கள வார இதழிலும் வாரந்தோறும்



வெளி வருக்கின்றன. மேலுள்ள படத்தில் மக்கள் சமாதான முன்னனியின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் மில்டன் ஏ. பெரேரா சதி சடஹன் பக்கமொன்றை காட்டி உரையாடுவதை காணலாம்.

## சிதைந்து வரும் தமிழர் கலாசாரம்

கலாசாரம் ஒரு சமூகத்தின் அடையாளம். சில வேளைகளில் வரலாற்று பதிவாகவும் அமைகிறது. வரலாறுகளை அடையாளப்படுத்துவதும் கலாசாரம். கலாசார அழிவு ஒரு சமூகத்தின் அழிவுக்கு நிகரானது.

தமிழர்களுக்கென்று பரம்பரை பரம்பரையாக வழி வந்த தனித்துவமான கலாசாரம் காணப்படுகின்றது. இந்த கலாசாரத்தை பின்பற்றி சிறந்த முறையில் வாழ்ந்து வந்த இலங்கைத்தமிழ் மக்களின் சமூக வாழ்வை நாட்டில் ஏற்பட்ட யுத்தமானது சின்னாபின்னமாக்கிவிட்டது. யுத்தமென்பது வெறுமே உயிர்களை மட்டுமல்ல குறித்த ஒரு சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணிவிடுகிறது.

அந்த வகையில் தாம் பிறந்த மண்ணை விட்டு, உறவுகளை விட்டு, உடமைகளை இழந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பிற தேசங்களில்




அகதி வாழ்க்கையை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்கள் அதே வேளை புலம்பெயர்ந்த நாட்டின் கலாசார பண்பாடுகளை பேண வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றனர். பிற நாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் அவ்வாறு என்றால் கொழும்பிற்கு இடம்பெயர்ந்த தமிழர்களின் நிலையோ அதைவிட மோசம். அன்னிய கலாசார மோகத்தில் திளைக்கும் இவர்களில் சிலர் தமிழ் கலாசாரங்களை சிறிது சிறிதாக மறந்து வருகின்றனர். இதற்கு அவர்களை மட்டும் குறை கூறிப்பயனில்லை. ஏனெனில் இடம்பெயர்ந்து அன்னிய பிரதேசங்களில் வாழும்போது அங்கு தமது கலாசாரங்களை விருத்தி செய்வதென்பது கடினமான காரியமாகும்.

இந்நிலையிலேயே அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலே யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் தமிழர்கள் ஓரளவு இயல்பு நிலைக்கு வந்தனர். அதனூடாக ஏனைய மக்களுடன் பழகி அவர்களின் கலை, கலாசாரங்களை அறிந்ததுடன், தமது கலாசாரங்களை மீள கடைப்பிடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது என்றே கூறலாம். அதாவது இந்த சூழலை ஒரு சில தமிழ் கலாசார நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டன. தமிழர் கலாசாரத்தை விருத்தி செய்வதில் ஆர்வம் இருந்தாலும் கலாசார வளர்ச்சிக்கு உதவுவதில் பலர் பின் நின்றனர். அத்தோடு போர்ச்சூழலை விடவும் யுத்த நிறுத்த காலத்தில் கொழும்பில் தமிழர் கலாசாரம் பாதிக்கப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. சினிமா கலாசாரம், மேற்கத்தேய நாகரிகம் போன்றன கொழும்பிற்கு இடம்பெயர்ந்த தமிழர்களை ஆட்டிப்படைக்கின்றன. அதிலும் குறிப்பாக எதிர்கால சந்ததியான இளைஞர் சமுதாயம் இவற்றுக்கு பலியாவதே வேதனைக்குரிய விடயமாகும். இவற்றுக்கு சிறுவர்களும் விதிவிலக்கல்ல.

அதுமட்டுமல்ல அகதி முகாம்களில் வாழும் தமிழ் மக்கள் அந்த துயரமான வாழ்க்கைக்கு மத்தியில் எவ்வாறு தமது கலாசாரத்தை பற்றி சிந்திக்க முடியும் என்ற கேள்வி எழாமலில்லை.

மேலும் தமிழர்களுக்கு தமது கலாசாரத்தை பின்பற்ற வேண்டும் என்ற ஆர்வம் இருப்பினும் ஆங்காங்கே இடம்பெற்று வரும் சந்தேகத்தின் பேரிலான கைதுகள், ஆட்கடத்தல்கள் என்பன அவற்றுக்கு தடைகளாக உள்ளன.

இது ஒருபுறமிருக்க ஒரு சமூகத்தை யுத்தத்தின் மூலம் வெற்றி கொள்ள முடியாவிட்டால் அந்த சமூகத்தின் கலாசாரங்களை அழிக்கும் பட்சத்தில் அந்த சமூகம் அழிந்து விடும் என்ற வியூகத்தில் இன்றைய அரசியல் காய் நகர்த்தல்களும் நடைபெறுவதாக தமிழ் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். எனவே இவற்றுக்கெல்லாம் இடம் கொடுக்காது தத்தமது கலாசாரங்களை பாதுகாக்க வேண்டியது அச்சமூகத்தை சேர்ந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அதன் கலாசாரத்தில் பெருமளவில் தங்கியுள்ளதால் அதனை பேணிப்பாதுகாத்து வருவது முக்கியமானதாகும். எவ்வாறு ஏனைய அரசியல் விடயங்களில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோமோ அதேபோல எமது கலாசாரத்திலும், பண்பாடுகளிலும் நாம் கவனம் செலுத்தி, அதன் இயல்புகளுக்கு பங்கம் ஏற்படாதவாறு அதனை வளர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

- எஸ். கிருபாலினி

## இவ்வார விழிப்பில்...

- யுத்த நிறுத்தமும் சமூக மேம்பாடும்
- அனல்மின் நிலையத்தை எதிர்க்கும் மூவினத்தினர்
- வரலாற்றில் சமாதான நடைமுறைகள்
- மீளிணக்கமும் அயர்லாந்து அனுபவங்களும்

## இன்னும் நான் தேடுகிறேன் எங்கள் கிராமம் எங்கே?

என் வீட்டுக்கு செல்ல
பிரதான வீதியிலிருந்து
பிரிந்து செல்லும்
அந்த மணல் வீதி எங்கே?

புழுதி கிளப்பும் வண்டில்களையும்
பின்னலர் ஓடும் சிறுவர்களையும்
சுமந்து நீண்டு வளைந்த
அந்த மணல் வீதி எங்கே?

வேலிகளுக்குள் எட்டிப்பார்க்கும்
தென்னைகளையும்
கிளிகள் கூடு கட்டியிருந்த
பனைகளாயும்
பரத்தியிருந்த ஊரின்
குறுக்காய் நீண்ட
அந்த வீதி எங்கே?

வீதி
வீதிகளாய் பெருகி
வீதிகளிடையே வீடுகள் விரிந்து
பிள்ளையார் கோயில் மணியுடன்
துயில் எழும்
எங்கள் கிராமம் எங்கே?

மேய்ச்சலுக்கு செல்லும்
மாடுகளின் குழம்பொலியும்
பள்ளிக்கு செல்லும்
பிள்ளைகளின் சிரிப்பொலியும்
கோயிலில் இருந்து வரும்
குமரிகளின் சிணுங்கல் ஒலியும்
எல்லாம் நிறைந்து
இன்பமாய் இருந்த
எங்கள் கிராமம் எங்கே?

நினைவுகளால் படர்ந்து
நிகழ்வுகளால் நிறைந்து
உறவுகளுடன் மகிழ்ந்திருந்த
என் வாழ்வுக்கு சாட்சியான
என் வீட்டை
ஏந்திக்கொண்டிருந்த
எங்கள் கிராமம் எங்கே?

முள்ளுக்கம்பிகளுக்குள்
காவல் அரண்களுக்குள்
மறைந்து போனதாம்
எங்கள் கிராமம்

முரட்டு சப்பாத்துகளால்
முன் நீட்டிய துப்பாக்கிகளால்
இராட்சத வாகனங்களால்
இருண்டு போனதாம்
எங்கள் கிராமம்

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்
ஒளித்து வைத்தனராம்
எங்கள் கிராமத்தை

அவர்களின் பாதுகாப்புக்காக
எவரும் வரக்கூடாதாம்

எங்கள் கிராமத்து மண்ணை மிதிக்க
எங்கள் வீதியயில் நடக்க
என் வீட்டு திண்ணையில் அமர
என் வீட்டில் படுத்துறங்க
எனக்கு அனுமதி இல்லை

அவர்கள் பறித்து கொண்டபோதும்
நாங்கள் இழந்து விட்டபோதும்
இன்னும் நான் தேடுகிறேன்
எங்கள் கிராமம் எங்கே?

என். ஜீவேந்திரன்

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# மாவை பாரதிமன்ற கல்விப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.20

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் பொன் விழாவையொட்டி அண்மையில் கல்விப்போட்டிகள் நடத்தப்பட்டன.

ஆங்கிலம், தமிழ் பேச்சுப்போட்டி, கவிதை போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**பேச்சு**

**ஆங்கிலம் - பிரிவு -1**

ஜெயமலர் கொண்சன்ரைன் லூட்ஸ் (திருக்குடும்பக் கன்னியர் மடம்), மரின் டிவ்வா மரியதாஸ் (திருக்குடும்ப கன்னியர் மடம்), பிரான்ஸிஸ் சேவியர் அஸ்ரோனிஷ் (நாவலி சென்.பீற்றர் றோ.க.த.க.பாடசாலை), மேரி தெபோரா டொனால்ட் (திருக்குடும்ப கன்னியர் மடம்), ஜீனா கிறிஸ்ரினா போல் (திருக்குடும்ப கன்னியர் மடம்)

**பிரிவு - 2**

சுஜீபா தவேந்திரன் (மாதகல் சென். ஜோசப் மகா வித்தி.), அபிராமி தெய்வநாதன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), சிவகுமார் நிவேத் (மானிப்பாய் மெமோறியல் நவோதயக் கல்லூரி), நடராசா ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி), விஜயரத்தினம் நிரூபன் (யாழ்.இந்துக் கல்லூரி)

**பிரிவு - 3**

அனுசியா மகாதேவன் (உடுவில் மகளிர் கல்லூரி), சுமங்கலி சிவகுமாரன் (வேம்படி மகளிர் கல்லூரி), துஷ்யந்தா அருந்தவராசா (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தி.)

**பிரிவு -4**

சாகினி நடராசா (இளவாலை கன்னியர் மடம் மகா.வித்தி.), ராஜினி முருகையா (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.), சோபனா இராசரத்தினம் (பண்டத்தரிப்பு மகளிர் உயர் தர பாடசாலை)

**தமிழ்**

**பிரிவு -1**

சியாமிளா சற்குணராசா (கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை), பாலசிங்கம் கஜானன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), காமலின் அருள்தாசன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), சிவகுமார் சிவதர்சன் (யாழ். மத்திய கல்லூரி), சுக்ன்யா சகாயநாதன் (திருக்குடும்ப கன்னியர் மடம்).

**பிரிவு - 2**

ஆன் பிரவீனா தியடோர் (திருக்குடும்ப கன்னியர் மடம் ), தஸ்மினி வரதராஜா (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), சிவகுமார் நிவேத் (மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரி), நடராசா ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி), கேமதட்சனி சௌந்தர ராஜன் (கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி).

**பிரிவு - 3**

ஆன்மரீனா தியடோர் (வேம்படி மகளிர் கல்லூரி), சுமங்கலி சிவகுமாரன் (வேம்படி மகளிர் கல்லூரி), தர்சா வரதராஜா (கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்).

**பிரிவு - 4**

சாகினி நடராசா (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தி.), தர்மராஜா நிர்மல்ராஜ் (யாழ்.மத்திய கல்லூரி), நிரோஜா சக்திவேல் (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி).

**பிரிவு - 5**

சற்குணராசா நிகேஸ் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), நடராசா கண்ணதாஸ் (யாழ்.மத்திய கல்லூரி), ரவீந்திரன் சதீஸ் (யாழ்.மத்திய கல்லூரி)

**கவிதை**

**பிரிவு - 4**

விஜிந்தினி மோகனராசா (பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை), சாகினி நடராசா இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), றோஷ்னி ஜெயராஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**பிரிவு 5**

கதிரவேலு யோகேஸ்வரன் (மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரி), நடராசா கண்ணதாஸ் (யாழ்.மத்திய கல்லூரி), சிவகுமார் சிவரூபன் (சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம்) (3-204)


**மணப்பெண் அலங்கார வகுப்பு**

வெள்ளவத்தை Nature way இல் மணப்பெண் அலங்கார Facials Wedding Structures, Rich Cakes, B'day Cakes, தையல், Flower Decoradions என்பவற்றுக்கான Orders ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புகள் சான்றிதழ்களுடன் நடைபெறுகின்றன. T.Luxmy, 18/B, Station Road, Wellawatte .Tel.2505325. (42651)(21.11.13)

பரீட்சைவினாத்தாள்!விற்பனையாகிறது.

**O/L- 2005.** முற்றிலும் எதிர்பார்க்கப்படும் அனைத்துப்பாட வினாத்தாள்களும். இலவச கையேடுகளும்.

**தரம்:5-2006.** திரு.உ.மனோ சுலிங்கம் அவர்களின் "வேலவு உறுதி" மாதிரி வினாத்தாள். 01 விடையுடன்.

தரம்–9 மாகாணப் பரீட்சைக்கான சகல வினாத்தாள்களும்.

**தரம்: 4,5,6,7,8,10 வகுப்புகளுக்கான சகலபாட** ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் இன்றே பெற்றுக்கொள்ளலாம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்நகர் பஸ்நிலையம் அருகில்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் கோப்பாய்வீதி, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா புஸ்பலதா தம்பதியரின் செல்வப்புதல்வன் **செல்வன் லஜந்தன்** யாழ்.வயாவிளான் மத்திய வித்தியாலயம் 2005ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதலாம் இடத்தையும், மாவட்டத்தில் 45ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். இவரை வழி நடத்திய அதிபர்.ஆசிரியர்களுக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் இவர் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய், (மன்னா ஹவுஸ்)

**வாழ்த்துவோர்:**
அப்பம்மாகுடும்பம், அம்மம்மா குடும்பம்,
சித்தி குடும்பம், மாமா குடும்பம், சித்தி – சித்தப்பாமார்.

(42935)(11.17)

## வீடுகள் கட்டுவதற்கான விலைமனுக்கோரல்

**இரட்சணிய சேனை** நிறுவனத்தால் அல்வாய் வடக்கு, பருத்தித்துறைப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டுவரும் சுனாமி மீள் நிர்மாணப் பணியில் எதிர்கால வீடுகளை அமைப்பதற்கு பொருத்தமான ஒப்பந்தகாரரிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர் தேவையான விவரங்களை இரட்சணிய சேனை இல.77, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திங்கட்கிழமை (21.11.2005) பிற்பகல் 4மணி தொடக்கம் 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**இரட்சணிய சேனை,**
**யாழ்ப்பாணம்.** (42926)(21.11.17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 - 07 - 1938



மறைவு 21 - 10 - 2005

**அமரர் கந்தையா வேந்திரமூர்த்தி**

(ஓய்வுபெற்ற ரெலிகொம் உத்தியோகத்தர்)

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12 மணிக்கு மதியபோசனமும் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

24, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(42959)(21.11.13)


## தேவை

கலர் லாப் (Colour Lab) ஒன்றிற்கு காசாளர், பில்கிளார்க் தேவை. இத்துடன் பிரிண்டிங் தொடர்பான வேலைபழக விரும்புபவர்களும்-புகைப்படப் பிடிப்பாளர்களும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் வேலையைக் குறிப்பிடுவதுடன் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட சுயவிவரத்துடன் தேசிய அடையாள அட்டைப் புகைப்படப் பிரதியுடன் 30-11-2005 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல. - 2755**
**மே/பா உதயன்**

(42947)
(26-11-17-21)


## முதலாம் ஆண்டு நினைவலை



**கந்தையா இரத்தினம்**

அன்னை மடியில்
15-05-1945

ஆண்டவன் அடியில்
02-11-2004

திதி : பஞ்சமி

*ஓராண்டு ஓடி மறைந்தது ஐயா!*
*ஒரு மாதம் போலுள்ளதே ஐயா!*
*நீங்கள் விட்டுப் பிரிந்த நேரம் முதற்கொண்டு*
*நீரோடிச் சென்ற எம் ஈர விழிகள் காயவில்லை*
*ஆயிரம் உயிர்கள் இருந்தென்ன ஐயாவே*
*அவை அனைத்தும் உங்கள் அன்பிற்கு ஈடாகுமா?*
*ஆண்டுகள் எத்தனை உருண்டோடினாலும்*
*ஆண்டவன் அடியில் சென்ற உங்கள் – நினைவு*
*எம் இதயங்களில் நிலைத்து நிற்கும்...*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

694, கண்டிவீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(42952)(21.11.17)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**கணபதிப்பிள்ளை செல்லமுத்து**
(தொட்டிலடி, சங்கானை)

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய் திகழ்ந்த
எங்கள் குடும்பத்தின்
குலவிளக்கே!
உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்னையின் ஆத்மசாந்தி வேண்டி இன்று (20-11-2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

'சேது வாசம்'
தொட்டிலடி, சங்கானை.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(42937)(50-14-19)


## SAAMSTECH இன் ஆங்கிலம்

எழுத, வாசிக்க, கதைக்க, புரிந்துகொள்ள மூன்றே மாதத்தில் முழுமையான ஆங்கிலம்

- அடிப்படைக்கட்டமைப்புக்கள் மூலம் வசன உருவாக்க வேகம்
- விருத்தியாக்க படிமுறைமூலம் பெரிய வசனங்கள்
- ஒலிப்பயிற்சி மூலமான கிரகித்தல்
- பழக்கப்படுத்தல் மூலம் சொல்வள விருத்தியாக்கம்
- பிரயோகங்கள் மூலம் தொடர்ச்சியான கதைத்தல்
- உரையாடல் மூலமான தேர்ச்சி

-தினம் தினம் அமெரிக்கா மற்றும் லண்டனில் இரு து தருவிக்கப்படும் ஒலிப்பயிற்சிகளுடன்................

இப்பயிற்சிமூலமாக சிறியவர்களால்க்கூட சில நாட்களிலேயே ஏராளமான வசனங்களை வேகமாக உருவாக்கிக் கதைக்க முடியும்

அனேகரின் விருப்பத்திற்கிணங்க **இரட்டைச் சலுகை**

1. இன்றும் நாளையும் பாடநெறிக்கு பதிவுசெய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD என்பன இலவசம்
2. ஆங்கிலத்துக்கு பதிவுசெய்வோருக்கு ரூபா 2500/- புத்தகங்கள், மற்றும் ரூபா 4000/- பெறுமதியான சிங்கள பாடநெறி இலவசம்

**இச் சலுகை இன்று மட்டும்**


ஒவ்வொரு பிரிவுக்கும் காலை, மாலை கிழமை மற்றும் சனி,ஞாயிறு வகுப்புக்கள் உண்டு. விரும்பிய வகுப்பில் பதிவுசெய்யலாம்
ஒவ்வொரு வகுப்பிலும் 30 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505

# நவீன தகவல் தொழில்நுட்பத்தை தமிழர் தாயகத்தில் வளர்க்கும் 'வன்னிரெக்'

கலிபோர்னியாவில் உள்ள 'சிலிக்கன் வலி' என்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் கடமைபுரியும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒன்றிணைந்து கிளிநொச்சி நகரில் 2002 ஆம் ஆண்டு வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் (வன்னிரெக்) என்ற ஒன்றை ஆரம்பித்தனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் புதிய வழியில் தம்மை அபிவிருத்தி செய்வதற்கும் - நவீன விடயங்களை மக்கள் மத்தியில் புகுத்துவதற்காகவும் - 'வன்னிரெக்' உருவாக்கப்பட்டது. இதன் மூலம் பல மாணவர்கள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 'வன்னிரெக்'குடன் தம்மை இணைத்துக்கொண்டு தமது திறமைகளை வெளிக்கொண்டுவருகின்றனர்.



தகவல் தொழில்நுட்பம் பற்றி செயன்முறை விளக்கம் அளிக்கும் 'வன்னிரெக்' விரிவுரையாளர்கள்.

இம்மாணவர்கள் கணனித்தொழில்நுட்பத்தில் முன்னேறியுள்ளனர். அத்துடன், பாடசாலைகள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றிற்குச் சென்று 'வன்னிரெக்' மாணவர்கள் நேரடியாகப் பயிற்சிகளை வழங்கிவருகின்றனர்.

### தொழில் நடவடிக்கையில்

'வன்னிரெக்' சில தொழில் நிறுவனங்களில் அவற்றின் தொழில் நடவடிக்கைகளை இலகுபடுத்தக் கூடிய கணனிமுறைகளை அறிமுகப்படுத்தி அவற்றைச் செயற்படுத்தியும் வருகின்றது. 'வன்னிரெக்' இன் செயற்பாடுகள் வளர்ந்து வரும் வேளையில் 2003ஆம் ஆண்டில் 'ரெக் ஷாக்' (**Tech - Shack**) எனும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதில் 'வன்னிரெக்'கில் கல்விகற்று வெளியேறிய பட்டதாரிகள் பணியாற்றுகின்றனர். 'வன்னிரெக்கில் பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு தொழில் பயிற்சியை வழங்குவதற்காகவே 'ரெக் ஷாக்' ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள 'வன்னி ரெக்' தலைமையகத்தில் நிர்வாக அலுவலகம், விரிவுரைமண்டபம், மென்பொருள் ஆய்வுகூடம் ஆகியவை அமைந்துள்ளன.

இதில் 30 வலையமைப்புக் கணனிகள் உள்ளன. வன்பொருள் ஆய்வுகூடத்தில் ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட நவீன நூல்கள் அடங்கிய நூலகம், மாணவர் விடுதி எனப் பல வசதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

### புதிய அலகு

கடந்தமாதம் 'வன்னி ரெக்' நிறுவனத்தால் நல்லூர், பருத்தித்துறை வீதியில் வியாபார அலகு திறந்துவைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் ஏனைய மாவட்டங்களிலும் இந்த வியாபார அலகு ஆரம்பிக்கப்படவுள்ளது.

'வன்னிரெக்' நிறுவகத்தின் விரிவுரையாளர்கள் யாழ். குடாநாட்டிற்கு கடந்த வாரம் விஜயஞ்செய்து, யாழ்.பல்கலைக்கழகம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி போன்றவற்றில் மாணவர்கள் மற்றும் கணனி சார்ந்த உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் போன்றோருக்கு கணனி தொடர்பான கருத்தரங்குகளை நடத்தியதுடன், செயன்முறை விளக்கங்களையும் அளித்தனர்.

நவீன தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனிசார்ந்த நவீன செயற்பாடுகள் எனப் பல விடயங்கள் தொடர்பாகவும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இதில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து பயன்பெற்றனர்.


இக்கருத்தரங்குகளில் 'வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் ஆரம்பம், அதன் விரிவாக்கம், அதன் செயற்பாடு, எதிர்காலத் திட்டம் என்பன தொடர்பாகவும் பட எறிகருவி மூலம் அகலத்திரையின் உதவியுடன் விளக்கமளிக்கப்பட்டது.

### செயன்முறை* விளக்கம்

அத்துடன், வியாபார நிறுவனங்களில் இரகசிய விலைக்குறியீட்டுக் கருவிகளின் பயன்பாடு, கணனியின் உதவியுடன் தொலைபேசி உரையாடல்முறை **Computer Communication** போன்ற விடயங்கள் செயன்முறை விளக்கத்துடன் காண்பிக்கப்பட்டன.

இக்கருத்தரங்கில் வன்னி தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் விரிவுரையாளர்களான அனான் பொன்னம்பலம், தங்கராஜன் சுபாகரன், கார்த்திகா தனசிங்கநாதன் ஆகியோர் பங்கேற்று விரிவுரை நிகழ்த்தினர். இவர்களில் தங்கராஜன் சுபாகரன் தகவல் தொழில்நுட்ப வலையமைப்புத் தொடர்பாகவும், கார்த்திகா தனசிங்கநாதன் கணனி மென்பொருள் தொடர்பாகவும் விரிவுரைகளை நடத்தினர்.

கணனி சார்ந்த செயற்பாடுகள் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டோர்.



'வன்னிரெக்கினால்' கிளிநொச்சியில் வருடாவருடம் 'கணனிக் கண்காட்சி நடத்தப்பட்டுவருகின்றது.

### வன்னி விஷன்

இந்த ஆண்டு இடம்பெற்ற 'வன்னி விஷன்' என்ற கண்காட்சியில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியில் மாணவர்களின் கணனி தொடர்பான புதிய ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன. மாணவர்களே இக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தி நடத்தியமை குறிப்பிடத்தக்கது. 'வன்னிரெக்கின்' எதிர்காலத் திட்டமாக முறிகண்டிப் பகுதியில் அமைந்துள்ள அறிவியல் நகரத்தில் கணனிப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்குரிய திட்டவரைபடங்களும் தயாரிக்கப்பட்டுவருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. அநேகமாக 2007ஆம் ஆண்டளவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுமார் 300 மாணவர்கள் இப்பல்கலைக் கழகத்தில் இணைத்துக்கொள்ளப்படுவர். யுத்தத்தால் அழிவடைந்துள்ள தமிழர் தாயகத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் அழிவுகளை மக்கள் பொருட்படுத்தாது புதிய தகவல் தொழில்நுட்பங்களின் மூலம் வளர்ச்சி அடைய, மக்களைத் தூண்டுவதும் மக்கள் மத்தியில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதுமே 'வன்னிரெக்' நிறுவகத்தின் நோக்கம் என அதன் விரிவுரையாளர்கள் தெரிவித்தனர். இந்த நோக்கத்தில் வெற்றிகரமாகப் பயணித்து வருகிறது 'வன்னிரெக்'.

- கங்கைவேந்தன் -

# ஜனாதிபதித் தேர்தல் - 2005 மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகள்

**மொனறாகல**

| | |
|---|---|
| மஹிந்த - 126094 | - 56.94% |
| ரணில் - 92244 | - 41,65% |
| செல்லுபடியானவை | - 221450 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2636 |
| மொத்த வாக்குகள் | - 224086 |
| பதிவு செய்யப்பட்டவை | - 276109 |

**மாத்தளை**

| | |
|---|---|
| மஹிந்த - 120533 | -48,09% |
| ரணில் - 125937 | - 50.25% |
| செல்லுபடியானவை | - 250620 |
| நிராகரிக்கப்பட்டவை | - 3785 |
| மொத்த வாக்குகள் | - 254405 |
| பதிவு செய்யப்பட்டவை | -321876 |

**நுவரெலியா**

| | |
|---|---|
| மஹிந்த - 99550 | - 27.97% |
| ரணில் - 250428 | - 70.37% |
| செல்லுபடியானவை | - 355875 |
| நிராகரிக்கப்பட்டவை | - 5410 |
| மொத்த வாக்குகள் | - 361285 |
| பதிவு செய்யப்பட்டவை | - 447225 |

**அம்பாந்தோட்டை**

| | |
|---|---|
| மஹிந்த - 202918 | - 63.43% |
| ரணில் - 112712 | - 35.23% |
| செல்லுபடியானவை | - 319925 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2798 |
| மொத்த வாக்குகள் | - 322723 |
| பதிவுசெய்யப்பட்டவை | - 396595 |

**திகாமடுல்ல**

| | |
|---|---|
| மஹிந்த - 122329 | - 42.88% |
| ரணில் - 159198 | - 55.81% |
| செல்லுபடியானவை | - 285267 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2941 |
| மொத்த வாக்குகள் | - 288208 |
| பதிவு செய்யப்பட்டவை | - 396453 |

**புத்தளம்**

| | |
|---|---|
| மஹிந்த - 160686 | - 48.14% |
| ரணில் - 169264 | - 50.71% |
| செல்லுபடியானவை | - 333783 |
| நிராகரிக்கப்பட்டவை | - 3536 |
| மொத்த வாக்குகள் | - 337319 |
| பதிவு செய்யப்பட்டவை | - 470604 |

**அனுராதபுரம்**

| | |
|---|---|
| மஹிந்த - 231040 | - 55.08% |
| ரணில் - 182956 - | 43.62% |
| செல்லுபடியானவை | - 419434 |
| நிராகரிக்கப்பட்டவை | - 4563 |
| மொத்த வாக்குகள் | - 423997 |
| பதிவு செய்யப்பட்டவை | - 536808 |

**பொலநறுவ**

| | |
|---|---|
| மஹிந்த - 110499 | - 52.61% |
| ரணில் - 97142 | - 46.25% |
| செல்லுபடியானவை | - 210030 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2002 |
| மொத்த வாக்குகள் | - 212032 |
| பதிவு செய்யப்பட்டவை | - 263609 |

**பதுளை**

| | |
|---|---|
| மஹிந்த - 192734 | - 45.18% |
| ரணில் - 226582 | - 53.11% |
| செல்லுபடியானவை | - 426599 |
| நிராகரிக்கப்பட்டவை | - 6825 |
| மொத்த வாக்குகள் | - 433424 |
| பதிவு செய்யப்பட்டவை | - 533163 |

**கொழும்பு**

| | |
|---|---|
| மஹிந்த - 534431 | - 47.96% |
| ரணில் - 569627 | - 51.12% |
| செல்லுபடியானவை | - 1114250 |
| நிராகரிக்கப்பட்டவை | - 12879 |
| மொத்த வாக்குகள் | - 1127129 |
| பதிவு செய்யப்பட்டவை | -1468537 |

**கம்பஹா**

| | |
|---|---|
| மஹிந்த - 596698 | - 54.78% |
| ரணில் - 481764 | - 44.23% |
| செல்லுபடியானவை | - 1089277 |
| நிராகரிக்கப்பட்டவை | - 11724 |
| மொத்த வாக்குகள் | - 1101001 |
| பதிவு செய்யப்பட்டவை | - 1364180 |

**களுத்துறை**

| | |
|---|---|
| மஹிந்த - 341693 | - 55.48% |
| ரணில் - 266043 | - 43.20% |
| செல்லுபடியானவை | - 615860 |
| நிராகரிக்கப்பட்டவை | - 6517 |
| மொத்த வாக்குகள் | - 622377 |
| பதிவு செய்யப்பட்டவை | - 764305 |

**கண்டி**

| | |
|---|---|
| மஹிந்த - 315672 | - 44.30% |
| ரணில் - 387150 | - 54.33% |
| செல்லுபடியானவை | - 712620 |
| நிராகரிக்கப்பட்டவை | - 9817 |
| மொத்த வாக்குகள் | - 722437 |
| பதிவு செய்யப்பட்டவை | - 907038 |

**காலி**

| | |
|---|---|
| மஹிந்த - 347233 | - 58.41% |
| ரணில் - 239320 | - 40.26% |
| செல்லுபடியானவை | - 594468 |
| நிராகரிக்கப்பட்டவை | - 5540 |
| மொத்த வாக்குகள் | - 600008 |
| பதிவு செய்யப்பட்டவை | - 732289 |

**மாத்தறை**

| | |
|---|---|
| மஹிந்த - 279411 | - 61.85% |
| ரணில் - 165837 | - 36.71% |
| செல்லுபடியானவை | - 451722 |
| நிராகரிக்கப்பட்டவை | - 4077 |
| மொத்த வாக்குகள் | - 455799 |
| பதிவு செய்யப்பட்டவை | - 562987 |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| மஹிந்த - 1967 | - 25.00% |
| ரணில் - 5523 | - 70.20% |
| செல்லுபடியானவை | - 7868 |
| நிராகரிக்கப்பட்டவை | - 656 |
| மொத்த வாக்குகள் | - 8524 |
| பதிவு செய்யப்பட்டவை | - 701938 |

**வன்னி**

| | |
|---|---|
| மஹிந்த - 17197 | - 20.36% |
| ரணில் - 65798 | - 77.89% |
| செல்லுபடியானவை | - 84476 |
| நிராகரிக்கப்பட்டவை | - 1398 |
| மொத்த வாக்குகள் | - 85874 |
| பதிவு செய்யப்பட்டவை | - 250386 |

**திருகோணமலை**

| | |
|---|---|
| மஹிந்த - 55680 | - 37.04% |
| ரணில் - 92197 | - 61.33% |
| செல்லுபடியானவை | - 150334 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2094 |
| மொத்த வாக்குகள் | - 152428 |
| பதிவு செய்யப்பட்டவை | - 238755 |

**குருணாகல்**

| | |
|---|---|
| மஹிந்த - 468507 | -52.26% |
| ரணில் - 418809 | - 46.72% |
| செல்லுபடியானவை | - 896497 |
| நிராகரிக்கப்பட்டவை | - 8458 |
| மொத்த வாக்குகள் | - 904955 |
| பதிவு செய்யப்பட்டவை | - 1124076 |

**இரத்தினபுரி**

| | |
|---|---|
| மஹிந்த - 294260 | - 53.01% |
| ரணில் - 252838 | - 45.55% |
| செல்லுபடியானவை | - 555074 |
| நிராகரிக்கப்பட்டவை | - 5510 |
| மொத்த வாக்குகள் | - 560584 |
| பதிவு செய்யப்பட்டவை | - 668217 |

**கேகாலை**

| | |
|---|---|
| மஹிந்த - 239184 | - 51.02% |
| ரணில் - 223483 | - 47.67% |
| செல்லுபடியானவை | - 468773 |
| நிராகரிக்கப்பட்டவை | - 4795 |
| மொத்த வாக்குகள் | - 473568 |
| பதிவு செய்யப்பட்டவை | - 583282 |

**மட்டக்களப்பு**

| | |
|---|---|
| மஹிந்த - 28836 | - 18.87% |
| ரணில் - 121514 | - 79.51% |
| செல்லுபடியானவை | - 152837 |
| நிராகரிக்கப்பட்டவை | - 1778 |
| மொத்த வாக்குகள் | - 154615 |
| பதிவு செய்யப்பட்டவை | - 318728 |

**வேட்பாளரின் வாக்கு வீதம்**

| | | |
|---|---|---|
| 1. மஹிந்தராஜபக்ஷ | 48,80,950 | 50.33% |
| 2. ரணில் விக்கிரசிங்க | 46,94,623 | 48.4% |
| 3. சிறிதுங்க ஜயசூரிய | 35,319 | 0.36% |
| 4. அசோக சுரவீர | 31,155 | 0.32% |
| 5. விக்டர் ஹெட்டிகொட | 14,447 | 0.15% |
| 6. சமில் ஜயனெத்தி | 9,286 | 0.1% |
| 7. அநுர டி சொய்ஸா | 7,671 | 0.08% |
| 8. விமல் ஜீகனகே | 6,633 | 0.07% |
| 9. அநுர டி சில்வா | 6,345 | 0.07% |
| 10. ஜே.ஏ.அஜித்குமார | 5,047 | 0.05% |
| 11. விஜய டயஸ் | 3,488 | 0.04% |
| 12. பி.நெல்சன் பெரேரா | 2,516 | 0.03% |
| 13. சாந்த தர்மவஜ | 1,310 | 0.01% |

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

சண்டெல் தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-066602. (42946)

### வான் விற்பனைக்கு

**LH 51** - சுப்பர் கஸ்ரம் 54 - **xxxx** 1989 மொடல் டுவல் A/C புல் ஒக்சன் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 32, சேர்.பொன். இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். 222 5185. (42971)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

பூச்சி நீக்கிய பாவோ தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட நல்லின அல்சேசன் ஜேர்மன் செப்பட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.கங்காதரன், 101/1, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (42953)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி தெற்கில் கந்தசாமி கோயிலுக்கு மிகவும் அண்மையில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776424797. (42949)

### காணி விற்பனைக்கு

கோயில் வீதி, நல்லூரில் நல்ல சுற்றாடலில் 3 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: குட்டி மெக்கானிக், 45, புதியசிவன் வீதி, நல்லூர். **T.P.** 222 3826, 222 7172, 222 5363. (42931)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1971 பூராடம், முதலாம் கால், செவ்வாய் தோசமற்ற, நிரந்தர ஆசிரியராகக் கடமைபுரியும் மணப்பெண்ணிற்கு சிறு உத்தியோகம், சுயதொழில் செய்யும் மணமகன் தேவை. இ.சகிதன், இராஜகிரி, வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டி. 0773066677 **Working days (9.a.m - 3. p.m)** (42940)

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தை சேர்ந்த, கொழும்பில் உள்ள அரச திணைக்களமொன்றில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றும், சைவ போசனமுடைய 5' 5'' உயரமும் 34 வயதும் உடைய சதய நட்சத்திரம் கும்பராசியில் அமைந்த பொது நிறமுடைய அழகிய, பண்பான பட்டதாரி மணமகளிற்கு பொருத்தமான மணமகன் தேவை. தொடர்புகளுக்கு பண்டிதர் திரு.ஏ.பரஞ்சோதி, கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை. (42928)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ **B.Engineering, M.Engineering (Electronics)** படித்த **U.K.** இல் வேலை செய்யும் **PR** உள்ள, 1974 ஆம் ஆண்டு, கேட்டை நட்சத்திரம், 50 பாவம், 5'10" உயரமுடைய மணமகனுக்கு படித்த அழகிய பொருத்தமான பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2754, மே/பா உதயன். (சி-46269)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42861)

புறொயிலர் **1Kg** 160/-, சுத்தம் செய்தது **1Kg** 240/-. மற்றும் சேவல், கல்பேட் என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- **1)New R.S.K. Farm,** பெரியமதவடி, மானிப்பாய் றோட், உடுவில். 2) **New R.S.K Farm** மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (42901)

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி, (42975)

### கடைகள் வாடகைக்கு

1-9 தங்ககம் அருகில் உள்ள சகல வசதிகளுடன் கூடிய இரு கடைகள் வாடகைக்குண்டு. (மலசலகூடம், குளியல் அறை) நீளம் 72x15 **T.P.:** 021 2285910, 077 6282957. (சி-46270)

### தவறிவிட்டது

இரத்தினசிங்கம் விஜயகுமார் என்பவருடைய 840121688V இலக்க தேசிய அடையாள அட்டையும் 0902015432 இலக்க விசேட அடையாள அட்டையும் திருநெல்வேலிக்கும் பலாலி வீதிக்கும் இடை யில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விஜயகுமார், பலாலி வீதி, திருநெல்வேலி. என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். (42943)

சுதுமலை, மன்னார், விடத்தல் தீவு என்ற முகவரியை உடைய மரியகற்பலன்காரன் செல்வம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.830415009V) அடங்கிய பேர்ஸ் கடந்த 17.11.05 மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். ப.வடிவேல், சாவற்கட்டு சந்தை அருகில், ஆனைக்கோட்டை. (42944)

### திருமண சேவை

தங்களுக்குப் புதுமணமா? மறுமணமா? எவ்வகைத் திருமணம் என்றாலும் குரும்பசிட்டியூர் மாயெழு வேல்அமுதனை தயங்காது நாடுங்கள்! வேல் அமுதனிடம் விவரங்கள் அடங்கிய மணமக்களின் கடிதக் கோப்புக்கள் எக்கச்சக்கம். தாங்கள் தங்களுக்கும் பிரியமான வாழ்க்கைத் துணையைச் சுலபமாக சுயதெரிவு முறையில் தெரிந்தெடுக்கலாம். பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர், சுயதெரிவு முறை முன்னோடி வேல் அமுதனிடம் நேரடித் தொலைபேசி 2360488, 4514396 கிழமை நாள்களில் மாத்திரம், மாலை 4.30 க்கு மேல் தொடர்பு கொள்க (சி-46262)

### பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் தாள்களால் தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம்மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: நெட்டிலிப்பாய், கோண்டாவில் **(DSI)** ரயர் களஞ்சியத்திற்கு அருகில் (46278)

## நீங்காத நினைவில் ஆறாம் ஆண்டு நினைவலைகள்


ச.தாட்சாயினி


ச.சுஜிதரன்


ச.சுதாகரன்


ச.பபிதரன்

அன்னை மடியில்

07.03.1986 02.10.1990 02.10.1990 13.01.1993

ஆண்டவன் அடியில் 20.11.1999

ஆண்டு ஆறு சென்றாலும் எம்துயரம் ஆறிடுமோ எம் செல்வங்களே
அன்னையவள் காலடியில் அடைக்கலம் என்றிருக்க
அடைந்தனிரோ அவள் பாதம் தஞ்சமென்று
எம் அருமைச் செல்வங்களே!

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இசைவாணி உணவகம்
பளை.

(42972)(11-13)

அம்மா, அப்பா, சகோதரன், உற்றார், உறவினர்.

## மரண அறிவித்தல்

## சிதம்பரி சின்னத்தம்பி



*(மாவிட்டபுரம்)*

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது மானிப்பாயில் வசித்து வந்தவருமான சிதம்பரி சின்னத்தம்பி அவர்கள் 18.11.2005 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் சின்னம்மா (சுந்தரம்) வின் அன்புக் கணவரும் செல்லத்துரை, சரஸ்வதி, சிற்றம்பலம் (லண்டன்), சிறிபாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரவணமுத்து, பவளம், ஞானேஸ்வரி (லண்டன்), சிவபாக்கியலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சத்தியமூர்த்தி (ஜேர்மனி), செல்வரஞ்சன் (சுவிஸ்), அருட்செல்வம், சிவம் (சுவிஸ்), கந்தசாமி (சுவிஸ்), துரை (சுவிஸ்), ரகு (சுவிஸ்), அலன்கியூமர், சிவனேசன்(சுவிஸ்), செல்வரதி (ஜேர்மனி), சுதாயினி (சுவிஸ்), செல்வமலர், செல்வகலா (சுவிஸ்), லலிதா (சுவிஸ்), சாந்தா (சுவிஸ்), றூபிதா (சுவிஸ்), கவிதா, சுமித்தா, மாயவதாஸ் (லண்டன்), நிரூஜா (சுவிஸ்), கீர்த்தனா (சுவிஸ்), வினோத் (சுவிஸ்), கிதீஸ்னசுகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரரும் பிரதீபன், சிந்துஜா, ஆரோன், பவீனா, புவரா, லக்சன், யாழினி, றதீசா, ஜான்சா, மேனகா, போபினாத், போகாஸ், றொசான், றோசல், கௌதம், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2005) திங்கட்கிழமை மதியம் 12மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கலாமன்ற வீதி, "செல்வபவனம்"
மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய்.
தொ.பே.021- 4591053

தகவல்:
சி.செல்லத்துரை *(மகன்)*.

(42977)(21.11.46)

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 09 08 1970

உதிர்வு 01 12 2004



## கதிர்காமதாஸ் விஜயகுமாரி

(யாழ். இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலய ஆசிரியை)

*ஓராண்டு ஆனதம்மா செல்லமே உனைப்பிரிந்து*
*நீர் பூத்தவிழிகள் உன்னைத்தேடி நிதம் ஏங்குதம்மா*
*தாரணிந்து மணமகளாய் நின்ற கோலம் மறையுமுன்னே*
*தேரேறிப் பறந்ததென்ன திருமகளே விரைந்ததென்ன*
*நூறாண்டு ஆனாலும் உன் நினைவு நெஞ்சில்மாறாது*
*நீறாகிப்போகும்வரை நிம்மதியே வாராது*
*கார்காலமேகமெனக் குளிர்த்தவளே எம் கண்மணியே*
*வாராயோ எங்கள் வாசலுக்கே காத்திருப்போம்.*

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை

(42961)(11-13)

அம்மா,அப்பா,
குடும்பத்தினர்.

### ஒளிராத மின்குமிழ்

குருநகர்,நவ.20

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியில் தண்ணீர் தாங்கி முன்பாக அமைக்கப்பட்டுள்ள மின்குமிழ் பல காலமாக ஒளிராத நிலையில் உள்ளது.

தண்ணீர் தாங்கி அமைந்துள்ள இடம் மூன்று வீதிகள் சந்திக்கும் இடமாக உள்ளதுடன் வீதி மிகவும் குறுகியதாகவும் உள்ளது. இதனால் மின் ஒளி இல்லாததால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் இரவில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (எ-51)

### சோமவார உற்சவம்

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சோமவார உற்சவம் நாளைபி.ப 3 மணிக்கு கும்பபூசையுடன் ஆரம்பமாகி நான்கு திங்கட்கிழமையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (த-61)

### விபத்தில் காயம்

தென்மராட்சிநவ.20

வல்லைப்பாலத்தில் மோட்டார் சைக்கிள் சறுக்கியதால் ஏற்பட்ட விபத்தில் தூக்கி வீசப்பட்டு மோட்டார் சைக்கிள் ஓட்டி காயமடைந்தார்.

கடந்த 17ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டுவிலைச் சேர்ந்த எஸ்.மயில்வாகனம் (வயது 50) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். (த-117)

**இரசாயனவியல் வகுப்புகள்**

ஆரம்பம்: 21-11-2005

**Day Class,**
2006 A/L
2007 A/L
N.Kala
83/19, Arasady Road,
Jaffna.

(42963)



சிறுவர் சமூக அபிவிருத்தி மன்றத்தினால் சிறுவர் உதவித் திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தின் தலைவர் க.தம்பிராசா மாணவி ஒருவருக்கு கல்வி உபகரணங்களை வழங்குவதனைப் படத்தில் காணலாம். (எ-70)


தற்பொழுது வவுனியா மாநகரில்.....



வலது குறைந்தோர், ஊனமுற்றோர்களுக்கான ஊன்றுகோல்கள் (Walking stick) கிரட்சஸ் (Crutches), முழங்கை கிரட்சஸ் (Elbow Crutches, Bedpan, Urinal, Walking frame, Wheel Chair) சக்கர நாற்காலி (Tricycle) ஆகியவை மொத்தமாகவும் சில்லறையா கவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

ASHRAFF & co

இல.30, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
தொ.பே. 024 2222383

(C/46273)


## மாணவர் விவரம்

யாழ். மாவட்டச் சிக்கனக்கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கச் சமாசம், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு உதவி வழங்கவுள்ளது.

எனவே, அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் மாணவர்கள் சமாச அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (எ)


## யா/இராமநாதன் கல்லூரி

தரம் -1, தரம் -6 மாணவர்களுக்கான
அனுமதி - 2006

மேற்படி வகுப்புகளுக்கான விண்ணப்பப் படிவங்களை
கல்லூரிக் காரியாலயத்தில் பெற்று
30-11-2005 ஆம் திகதிக்கு முன்னர்
விண்ணப்பத்தைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு
வேண்டப்படுகிறீர்கள்.

-அதிபர்.

(42984)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
24-02-1936
முருகனடியில்
19-10-2005

அமரர்
நவரத்தினம் மதியாபரணம்
(வன்னியசிங்கம்)

19.10.2005 அன்று முருகனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் நவரத்தினம் மதியாபரணம் (வன்னியசிங்கம்) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரணமும் இன்று (20.11.2005)ஞாயிற்றுக்கிழமை 'திருப்பதி' கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தொடர்ந்து நடைபெறும் பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருப்பதி, பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (42782)(15-45) -குடும்பத்தினர்.
T.P.: 0776258127



## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஆண்டுப் பொதுக்கூட்டம்

FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய்த்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 04.12.2005 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகம்கொடுக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம். இணைச் செயலர்கள்
வலயக் கல்வி அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
19.11.2005


## மாவீரர் தின உரையில்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டகையோடு -சிங்களத் தலைமைகளின் உள் நோக்கத்தைப் புரிந்துகொண்ட தமிழ்மக்கள் தேர்தலைப் புறக் கணிக்கப் புறப்பட்டனர். ஒட்டு மொத்தமாக தமிழர் தாயகப் பகுதியில் தேர்தல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக சிங்களத் தலைமைகளுக்கு நல்ல பாடத்தைத் தமிழ் மக்கள் கற்பித்துள்ளனர்.

### தேர்தல் தந்த பாடம்

தெற்கில் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஒரு ஜனாதிபதி வேட்பாளர் ஆகக் கூடியது 10 லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

தமிழர்களில் முழுமையானவர்கள் வாக்களிக்காததால் இதற்கு முன்னர் 1999இல் நடைபெற்ற தேர்தலில் 7லட்சம் வாக்குகளால் ஒருவர் வெற்றி பெற்ற சந்தர்ப்பமும் ஏற்பட்டிருந்தது.

ஆனால், இம்முறை தேர்தலில் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு லட்சத்து 80 ஆயிரம் வாக்குகள் பெரும்பான்மையுடன் ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்படும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்புத்தான் இந்த நிலை ஏற்படக் காரணம் என்பதை சிங்களத் தலைவர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் உணரவேண்டும். இதைச் சர்வதேச சமூகம்கருத்திற்கொள்ளவேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ் மக்கள் உணர்த்தியுள்ள இந்தப் பாடத்தைப் புரிந்துகொண்டு சிங்கள ஆதிக்க வெறியில் செயற்படுவதை மஹிந்த ராஜபக்ஷ தவிர்த்துக்கொண்டாரேயானால் நாட்டில் அமைதி நிலை ஏற்படும்.

தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் தேர்தல் முடிவை நிர்ணயிக்கப்போகிறவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தான் என ஆரூடம் கூறியிருந்தார். அது இன்று நிஜமாகியுள்ளது. தமிழர்கள்தான் இந்த நாட்டின் எதிர்கால இருப்பை உறுதிப்படுத்தப் போகின்றவர்கள் என்பது இந்தத் தேர்தல் மூலம் வெளிப்பட்டு நிற்கின்றது.

''மஹிந்தவின் வெற்றி தலைவர் பிரபாகரனின் வெற்றிக்கு வாய்ப்பாக அமையப் போகின்றது'' என்று விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான வே.பாலகுமாரன் தேர்தல் முடிந்த கையோடு கருத்துக் கூறியுள்ளார். அவரின் இந்த ஆழமான கருத்து இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றது என்பது மட்டும் உண்மை.

புதிய ஜனாதிபதியாக வந்துள்ள மஹிந்த தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்புக் கொடுத்து செயற்படப் போகின்றாரா? தம்முடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய பேரினவாதிகளின் சொற்படி நடக்கப்போகின்றாரா? சர்வதேச உதவியுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்து தற்போதுள்ள சமாதான சூழலைத் தக்க வைக்கப் போகின்றாரா? தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிந்த விடயங்களுக்கு சிங்கள மக்கள் வழங்கிய ஆணையை ஏற்றுச் செயற்பட முனையப் [illegible]றாரா?

தேர்தல் [illegible] வெற்றி பெறக் காட்டிய முகத்தைக் காட்டி நாட்டில் ஆட்சிசெய்ய முனைவாரேயானால் நிலைமை மோசமடையும் என்பது மட்டும் யதார்த்தம்.

### தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை

ஜனாதிபதியாகப் பதவியேற்றுத் தமது காய் நகர்த்தல்களை மஹிந்த ஆரம்பிக்கும் நேரத்தில் -

அடுத்த ஒருவாரத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையை ஆற்றவுள்ளார்.

அந்த மாவீரர் தின உரைமூலம் விடுக்கப்படவிருக்கும் செய்தியை மஹிந்த மட்டுமல்ல சிங்களத் தலைமைகள் எல்லாம், ஏன் சர்வதேசமும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

அந்தச் செய்தி மூலம் விடுவிக்கப்போகும் தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை - நிலைப்பாட்டைப் பற்றி நின்று செயற்பட மஹிந்த தயாராகாவிட்டால் நாட்டில் மீண்டும் ஒரு யுத்தத்துக்கான பாதை திறக்கப்படுவது தவிர்க்க முடியாத தாகிவிடும்.

அடுத்த வாரம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல. சிங்கள மக்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. அது வரை பொறுத்திருப்போம்.


### தொலைபேசி இயக்குநர், கணனி இயக்குநர் தேவை

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள தொலைத்தொடர்பு நிலையத்திற்கு கணனி பயின்ற அல்லது பயிலுநர் (பெண் பிள்ளை) தேவை. Page Maker விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0777 213953
021 222 7638

(42981)


## கலை, இலக்கியப் போட்டியில் சான்றிதழ் பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.20

தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் சான்றிதழ் பெறத் தெரிவுசெய்யப்படவர்களின் பெயர் பிரதேச செயலர் பிரிவு விவரம் வருமாறு:-

**சிரேஷ்ர பிரிவு:-**

**கட்டுரைப் போட்டி:** இ.கௌரீசன் (கரவெட்டி), ஏ.ஜீவகாந்தன் (யாழ்ப்பாணம்), நி.நிசாந்சா (நல்லூர்), வி.தேவகௌரி (ஊர்காவற்றுறை), க.திலக்கி (கோப்பாய்).

**கனிஷ்ர பிரிவு:-**

**கட்டுரைப் போட்டி:** ச.பிரதாபன் (நல்லூர்), யோ.கஜேந்தினி (சாவகச்சேரி), இ.இராஜேஸ்வரி (காரைநகர்), ம.வதனி (கோப்பாய்), செ.சோபிதா (சங்கானை).

**திறந்த பிரிவு:-**

**கவிதை (தமிழ்):** பா.வேதநாயகம் (பருத்தித்துறை), வ.சின்னப்பா (சாவகச்சேரி), ச.சேவியர் வில்பிரட் (வேலணை) து.உதயகௌரி (சங்கானை), சி.மாதுமை (உடுவில்).

**கவிதை (ஆங்கிலம்):** ரா.பஞ்சலிங்கம் (பருத்தித்துறை), வை.சின்னப்பா (சாவகச்சேரி).

**சிறுகதை:-**

**திறந்த பிரிவு:** பா.மாலாதேவி (தெல்லிப்பழை), சி.லகிதா (உடுவில்),க.சுபாங்கி (கோப்பாய்), து.உதயகௌரி (சங்கானை), த.பரமலிங்கம் (நல்லூர்),

**குறு நாடகம்:-**

**திறந்த பிரிவு:** சி.ஜெயானந்தன் (நல்லூர்), ம.யோகராணி (சண்டிலிப்பாய்), பா.தேவநாயகம் (பருத்தித்துறை), வீ.இமாஜினி (உடுவில்), திருமதி நா.ஆனந்தராணி (கரவெட்டி).

**சித்திரம்:-**

**சிரேஷ்ர பிரிவு:** அ.காண்டீபன் (உடுவில்), வி.ஜெயச்சந்திரன் (யாழ்ப்பாணம்), செ.சதீஸ்குமார் (சங்கானை) இ.தயாளினி (ஊர்காவற்றுறை), ந.பிரதாஸ் (கோப்பாய்).

**கனிஷ்ர பிரிவு:-**

நா.ஜஸ்வர்யா (நல்லூர்), அ.ஜோன்ஜிப்ரிகோ (சண்டிலிப்பாய்), கி.யோ.சிவேந்தன் (உடுவில்), கே.நிரூஜன் (சங்கானை), க.கஜன் (மருதங்கேணி).

**திறந்த பிரிவு:-**

ம.கணேசானந்தன் (சங்கானை), ர.பிரகாஷ் (கோப்பாய்), க.சந்திரகுமார் (தெல்லிப்பழை), திருமதி சி.நித்தியாஞ்சலி (கரவெட்டி), ச.சாரூபா (நல்லூர்).

**நாட்டுப் பாடல்:-**

**சிரேஷ்ர பிரிவு:** ஜெ.வைஷ்ணவி (சண்டிலிப்பாய்), சு.சசிகுமார் (பருத்தித்துறை), ர.நிலானி (சங்கானை), சூ.மேரிவேர்ஜினி (ஊர்காவற்றுறை).ந.ரஞ்சித்பாலன் (கரவெட்டி), கோ.கம்சத்வனி (உடுவில்).

**கனிஷ்ர பிரிவு:-**

இ.டயாளினி (சண்டிலிப்பாய்), கே.வர்சினி (தெல்லிப்பழை), ஜெ.கம்சவதி (கரவெட்டி), ம.மேரிடிலானி (ஊர்காவற்றுறை), கு.சுஜாதா (காரைநகர்).

**திறந்த பிரிவு:-**

த.தமிழினி (உடுவில்), தி.சுகிர்தன் (சண்டிலிப்பாய்), ஜெ.சுபாசினி (நல்லூர்), இ.அனுசியா (ஊர்காவற்றுறை), திருமதி தி.நேசபவானி (தெல்லிப்பழை).

**கலை நிறுவனங்களுக்கான நடனம்**

**திறந்த போட்டி:-**

வலி.வடக்கு கலாசாரப் பேரவை (தெல்லிப்பழை), நல்லூர் கலாசாரப் பேரவை (நல்லூர்). (எ-204)


## கண்ணீர் அஞ்சலி


எமது கல்லூரியின் பழையமாணவியும் ஆசிரியையுமாகிய
திருமதி பத்மா சுப்பிரமணியம்
அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம்.

யா/இராமநாதன்கல்லூரி. பழைய மாணவர் சங்கம்.
(42983)



## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரலிங்கம் மங்களேஸ்வரி



வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் மங்களேஸ்வரி 18.11.2005 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவரஞ்சினி (பிரான்ஸ்), அகிலா (லண்டன்), சுந்தரவாதன், தேவகுமார் (பிரான்ஸ்), கோகிலதாசன் (பிரான்ஸ்), ஜெயதரன் (பிரான்ஸ்), கிரிதரன், சிவராஜினி, லாவண்யா, தயாளினி, பிறேமிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் பாக்கியராஜ் (பிரான்ஸ்), தயாபரன் (லண்டன்), லதாங்கி ஆகியோரின் அன்பு மாமியும் வெனுஷா (பிரான்ஸ்), நிசாந் (பிரான்ஸ்), அபினய (பிரான்ஸ்), கபிசன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் 3மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. (4298) (54-15-45)

தகவல்:
சுந்தரலிங்கம் (கணவர்).

## 60 ஆம் நாள் நீங்கா நினைவுகள்

எமது சபையின் சக ஊழியர்
திருமதி யோ.ஸ்ரீஉதயமோகன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் செல்லையா லட்சுமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.

(42968)(26-11-17-24)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 - 03 - 1941



விண்ணில் 26 - 11 - 1991

**அமரர் செல்லத்துரை கனகசபாபதி**

*(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்)*

*திதி:20-11-2005*

கற்றவரும் உற்றவரும் நல்லவரும் தான்போற்ற
சாரியமாய் வாழ்ந்திட்ட கனிவான எம் தெய்வம்
நற்றுணையாம் கந்தனவன் பாதடிக்கு சேவை செய்ய
நமைவிட்டு சென்றிங்கு ஆகினவே ஆண்டுகள் பதினான்கு.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (42964)(26-11-17-24)

என்றும் நீங்கா நினைவுடன்,
மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சந்திரமோகனதாஸ்



யாழ்ப்பாணம், சுண்டிக்குளியைச் சேர்ந்த கந்தையா சந்திரமோகனதாஸ் 17.11.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தவமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் மோகனரூபராணியின் அன்புச் சகோதரனும் அமராவதியின் அன்புக் கணவரும் ரமேஷ் மோகன் (ஆசிரியர் - கொழும்பு), சுரேஷ் மோகன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி), சதீஷ்மோகன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), சர்மிலி (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிக்ஷன் கெனடியின் (கனடா) அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை இல.4, குருசோ வீதி, சுண்டிக்குளியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.4, குருசோ வீதி
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(42970) (24-11-17)

### வேலுப்பிள்ளை நவரத்தினம்

(முன்னாள் உத்தியோகத்தர், புகையிரதத் திணைக்களம்)



யாழ்ப்பாணம், அத்தியடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இல. 131/1, இராசாவின் தோட்டம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரத்தினம் 19.11.2005 சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தசாமியின் அன்புச் சகோதரனும் தர்மினி, குகதாசன் (சுவிஸ்), தர்மதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராஜா (இலங்கை மின்சார சபை), தவராணி (சுவிஸ்), கிருஷிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆகாஷ், அஸ்வின், நவநீதா, நிவேதிகா, கீர்த்திகன், சூர்யா, சுஜித்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

131/1, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:0776063323

(சி/46282) (24-11-17)

தகவல்:
கி.தேவராஜா
(மருமகன்).

### செல்லத்துரை ஜெகநாதன்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை ஜெகநாதன் 18ஆம் திகதி நவம்பர் மாதம் 2005ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அருந்தவத்தின் அன்புக் கணவரும் ஆரணியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - யோகம்மாவின் அன்பு மகனும் கணநாதன், காலஞ்சென்ற பத்மநாதன், திலகநாதன், சத்தியவதி, ரகுநாதன் ஆகியோரின் பிரியமுள்ள சகோதரனும் காலஞ்சென்ற நாராயணபிள்ளை - பாக்கியலட்சுமியின் அன்பு மருமகனும் அரியராஜா, அரியமலர், அமிர்தவல்லி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.20, OLD QUARRY ROAD,
MOUNTLAVINIA.
T.P.: 2722792
(சி/46280) (24-11-17)

தகவல்:
திருமதி செ.அருந்தவம்
(மனைவி).


## College of Computer Studies

எமது கணனி நிறுவனத்திற்கு Ms Office, DTP பாடநெறியில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. (Instructures) தகுதியுடையவர்கள் 21-11-2005, 22-11-2005 திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமைகளில் காலை 10.30 மணிக்கு சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

இயக்குநர்,
CCS (42973)
119, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P. No.: 0777 279034
(26-11-17-24)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 23 - 04 - 1917



விண்ணில் 22 - 10 - 2005

**அமரர் முருகேசு யோசேப் எமிலியானுஸ்பிள்ளை**

[இளைப்பாறிய ஆசிரியர், யூனியன் கல்லூரி தெல்லிப்பழை]

22-10-2005 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் முருகேசு எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் 31 ஆம் நாளாகிய நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஏழாலை இசிதோர் ஆலயத்தில் நிகழும் திருப்பலியிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனவிருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

- குடும்பத்தினர்.

(42980)(26-11-17-24)


## IIS

**இக் கல்வி ஆண்டிற்கான இறுதி பிரிவுகள் ஆரம்பம்.**

19.11.2005
21.11.2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

புலமைப்பரிசிலில்
தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களே
இச்சந்தர்ப்பத்தினை
தவறவிடாதீர்கள்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

வைமன் வீதி, மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த
**செல்வக்குமாரன் - இந்திராணி**
தம்பதிகளின் செல்வப்புதல்வி ஷாகித்தியா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 20-11-2005 அவரது இல்லத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு ஆசைமிக்க அப்பா, அம்மா, அண்ணா விதுஜன், அப்பம்மா, அப்பப்பா (ஜேர்மனி), பெரியப்பாமார்களான மோகன் (விதுஜன் எலற்றோனிக் மானிப்பாய்), பாலு, ராயு, பெரியம்மாமார்களான ராஜசிறி, குயில், சுபா, கல்யாணி (கனடா), நித்தி (கனடா), மாமா - சுரன் (கனடா), பிரபாகரன் மாமா (கிளிநொச்சி), அத்தைமார்களான சித்திரா/ சந்திரா மற்றும் அண்ணன்மார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மானிப்பாய் வேலக்கை பிள்ளையாரினது அருளும் ஆசியும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.




மானிப்பாய் தெற்கு.

தகவல்:
அப்பா-செல்வக்குமாரன்
(42976) (39-11-17-24)


## STUDY IN SINGAPORE

SINGAPORE QUALITY CLASS for Private Education Organisations

FTMS Global — Established since 1986

- CAT
- ACCA
- B.A(Hons) Accounting & Finance
- B.A(Hons) Business Administration
- B.Sc(Hons) Computer Science
- B.Sc(Hons) Business Information Technology
- B.Sc(Hons) Computer Games Technology
- B.Eng Com & Communication Systems Engineering

- Next Intake - January 2006
- Pathway to Migration(UK,USA,Australia,Newzeland)
- Internationally Recognized Universities
- FTMS Accredited by Ministry of Education Singapore
- Edexel International Diploma holders can get exemption to follow final year degree in Singapore.
- Part time work opportunities
- Application Cut date 30 Nov 2005
- Minimum Qualification -G.C.E (O/L)
- For more Details contact Jaffna Agent

GOLDEN EDUCATION SERVICES
T.P - 0773256575,0773164320


## 51ஆவது அகவையில் எம் தேசியத் தலைவர்



தம்பலம் உணராத தமிழரை எழுப்பி
தமிழீழத் திசை நோக்கி அவரை வழிதிருப்பி
உலகத்துத் தமிழருக்கு உறைவிடம் தந்த
சூரியப் புதல்வனே வாழ்க நீ பல்லாண்டு.

போர்க் கலைக்கு புதுவடிவம் கொடுத்து நின்றாய்
போராடும் வலுவதனை எமக்குத் தந்தாய்
மறத் தமிழர் படையணியின் தலைமகனே
மாற்றார்க்கு விலை போகாத் தமிழ் மகனே
அறப்போர் நடத்திப்பல வெற்றி கண்ட
பைந்தமிழ்க் காவலனே நீடு வாழி!

*பரமேஸ்வராச்சந்தி வர்த்தகர்கள்.*

# போர்ப்பயிற்சிகள் மூலமாக அடுத்த கட்டத்துக்கு நகரும் நிலையில் நாம்!

## துணைப்படைப் பயிற்சி நிகழ்வில் கேணல் சூசை

கிளிநொச்சி,நவ.20

இனவாதக் கட்சிகள் ஒன்றுசேர்ந்து தமிழினத்துக்கு எதிராகத் தூக்கிய போர்க்கொடிக்கு சிங்கள மக்கள் ஆதரவளித்திருக்கின்ற நிலையில், துணைப்படைப் பயிற்சிகள் மூலம் நாம் அடுத்தகட்டத்துக்கு நகரவேண்டிய நிலையில் உள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.

லெப்ரினன்ட் கேணல் கங்கை அமரன் கடற்படை, துணைப்படை பயிற்சிப் பாசறையில் 5ஆம் அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்தி அவரின் எண்ணக் கருக்களை செயற்படுத்த அனைவரும் கைகொடுக்கவேண்டும் - என்றும் சூசை தமது உரையில் குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள கங்கை அமரன் பயிற்சிப்பாசறையில் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றினார்.

லெப்ரினன்ட் கேணல் கங்கை அமரனின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான பகலவன் ஏற்றிவைத்தார்.

மலர்மாலையை லெப்ரினன்ட் கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் அணிவித்தார்.

தொடர்ந்து சிறப்புரைகளை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனை அடுத்து பயிற்சியினை நிறைவு செய்த அணியினருக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கடற்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-12)


## வெளிக்கள போதனாசிரியர் போட்டிப்பரீட்சை வகுப்புகள்

✱பொது உளச்சார்பு ✱ பொது அறிவு
ஆசிரியர்: த.தவசேகர் B.Sc, P.G.D.E.

| | |
|---|---|
| D.M.I யாழ். நகர் திங், செவ், புதன் 4-6 சனி 2-6 ஆரம்பம் : 21.11.05 | கிறிஸ்ரல் நெல்லியடி வியாழ, வெள் 4-6 சனி 8-12 ஆரம்பம் : 24.11.05 |

*வகுப்புகள் 21.11.05 இலிருந்து 02.12.05 வரை நடைபெறும் (42985)


## சைக்கிள் திருட முற்பட்டவர் சிக்கினார்

யாழ். நகரப்பகுதியில் சைக்கிள் திருடர் ஒருவர் பொதுமக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார். கஸ்தூரியார் வீதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை திருட முற்பட்ட வேளையே இந்த நபர் பிடிபட்டார்.

சைக்கிள் உரிமையாளர் அதனைப் பூட்டாது கடையினுள் சென்றபோதே அருகில் நின்ற இந்த நபர் சைக்கிளை எடுத்துச்செல்ல முற்பட்டதாகவும் அதனைக் கண்ணுற்ற சைக்கிள் உரிமையாளரும் மற்றும் பொதுமக்களும் அவரை மடக்கிப் பிடித்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## நாடு துண்டாடப்பட்டு விடக்கூடாது...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட சவால்களுடன் கூடிய ஒரு பயணமாகவே இருந்தது. எதிர்காலத்தில் எனக்கு முன்னால் இதுபோன்ற இன்னும் பல சவால்கள் இருப்பதை நான் நன்கு அறிவேன். சவால்களுக்கு முகம் கொடுப்பது எனது பொழுதுபோக்காகும். அந்தவகையில் எனது நாட்டுக்கும் நான் நேசிக்கும் எனது நாட்டு மக்களுக்கும் நன்மைகளை வழங்கக்கூடிய வகையில் எதிர்கொள்ளும் சகல சவால்களையும் அச்சமின்றி முகங்கொடுப்பேன் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் ஆசிய மக்கள். ஆசியா உலகிற்கு பல பெறுமதிமிக்க விடயங்களை வழங்கியுள்ளது. ஆசியர்கள் என்ற அடிப்படையில் அவற்றைப் பாதுகாத்து முன்னெடுத்துச் சென்று எமது நாட்டை சக்திமிக்க ஒரு நாடாக மாற்றுவதற்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள எமது நண்பர்களோடு மிக நெருக்கமாகச் செயற்படவுள்ளேன்.

எமது நாட்டுக்குப் பொருந்தக்கூடிய ஒரு முன்னேற்றகரமான வெளிநாட்டுக்கொள்கை ஒன்றையும் நான் முன்வைப்பேன்.

### ஆலோசகர்கள் வேண்டாம்

நான் வாயில் தங்கக் கரண்டி ஒன்று ஏந்திக்கொண்டு பிறந்த இளவரசன் அல்ல உங்களுள் பெரும்பாலானவர்களைப் போன்று சாதாரண மக்களுள் ஒருவனாகப் பிறந்து உருவான தலைவன். அதனால் மக்களுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்காக புதிதாக ஆலோசகர்களை நியமிக்கவேண்டிய தேவை எனக்கில்லை. என்னால் அதை நன்றாகப் புரிந்துகொள்ளமுடியும். ஆலோசகர்களுக்கும் நிபுணர்களுக்கும் அவர்களுடைய அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற இடம் வழங்கப்படும். இந்த நாட்டு மக்களோடு நான் நெருங்கிச் செல்லத் தடையாக இருக்கக்கூடிய எந்தத் தடைகளையும் வேலிகளையும் ஏற்படுத்திக்கொள்ளமாட்டேன். என்னுடைய ஜனாதிபதி மாளிகையும் அலுவலகமும் இந்த நாட்டு மக்களுக்காக திறந்துவைக்கப்படும்.

நான் இந்த நாட்டின் வரலாற்றின் மூலம் கற்றுக்கொண்ட விடயங்களை இந்த நாட்டில் அமுல் செய்வதற்கு தயராக உள்ளேன். வரலாற்றில் நாம் விட்ட பிழைகளை சரிசெய்து நாம் பெற்றுள்ள வெற்றியையும் பாதுகாத்து இந்த நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும் பொறுப்பையும் நான் நன்கு உணர்ந்துள்ளேன். புதிய கொள்கை, புதியதோர் இலங்கை நவீன பிரஜைகள் என அது அமையும். இந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலம் எனது நாட்டு மக்கள் அனுமதித்துள்ள மஹிந்தவின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு புதிய வரவு - செலவுத் திட்ட யோசனைகளை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர நான் தீர்மானித்துள்ளேன். நான் இதனைச் செய்வதன் மூலம் இந்த நாட்டு மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாத்து என்னுடைய நிர்வாகத்தை ஆரம்பிக்க இது வழிவகுக்கும் என நம்புகின்றேன். நாடாளுமன்ற ஜனநாயகத்தை உச்ச மட்டத்தில் பாதுகாத்து எனது நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வேன் என்று சகல இலங்கைப் பிரஜைகளுக்கும் நான் உறுதி கூறுகின்றேன்.

என்னுடைய நெருங்கிய நண்பர்களாக நான் கருதுவது எனக்குப் புகழாரம் சூட்டுபவர்களை அல்ல. நியாயமான முறையில் என்னை விமர்சிப்பவர்களையே நான் நெருங்கிய நண்பர்களாகக் கருதுகின்றேன். இதற்கான சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக்கொடுப்பேன்.

இறுதியாக எனது அன்புக்குரிய சகோதர சகோதரிகளான இந்த நாட்டின் பிரஜைகளிடம் நான் கேட்டுக்கொள்ளவிரும்புவது தாய்மார்களே தந்தை மார்களே சகோதர சகோதரிகளே பிள்ளைகளே நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுங்கள். உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள். குழப்பங்களின்றி தூய சிந்தனையோடு பணியாற்றுங்கள். உழைப்பதன் மூலம் நாட்டை முன்னேற்றுவோம். நாடு முன்னேற்றமடைந்தால் நீங்களும் முன்னேற்றமடைவீர்கள். உங்கள் அனைவருக் கும்சகலவெற்றிகளும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். (ஐ)

## மணல் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய கடலிலிருந்து மணல் அகழ்ந்தெடுப்பு

### மாகாணசபை அறிமுகம் செய்கிறது

கொழும்பு,நவ.20

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் மணலுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் புதிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கடலிலிருந்து மணலை அகழ்ந்தெடுத்துச் சுத்திகரித்தலும் - அந்த மணலை கட்டுமாணப் பணிகளுக்குப் பயன்படுத்துவதுமே இந்தத் திட்டமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சர்வதேச ரீதியில் கேள்விப்பத்திரங்கள் கோரப்படவுள்ளன என கடந்தவாரம் திருகோணமலையில் நடைபெற்ற மாநாடொன்றில் மாகாண சபையின் பொறியியற்துறை பிரதிப் பிரதம செயலாளர் ரீ. தவசிலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை தேசிய மீள்கட்டுமாணச் சங்க உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் இதுபற்றி அவர் மேலும் தகவல் தெரிவித்ததாவது:-

உத்தேச கடல் மண்சேகரிப்புத் திட்டப்படி கடலிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மணல், கடற்கரையில் பொருத்தப்படும் இயந்திரங்கள் மூலம் நவீன முறையில் சுத்திகரிக்கப்பட்டு கட்டுமானப் பணிகளுக்குப் பாவிக்கப்படும் - என்றார். (எ-205)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புதியாள் புதியான்



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புதியாள் புதியான் அவர்கள் நேற்று (19.11.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புதியானின் அன்பு மனைவியும் மாணிக்கன், சின்னத்தம்பி, மார்க்கண்டு(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, பார்வதி, ரவீந்திராதேவி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ஜெயலதா, துரைராசா, திருமதி சசிகலா கெங்காதரன், இமையாளன்(இத்தாலி), தனேஷ் (இலங்கை போக்குவரத்துச் சபை) மற்றும் வரதராஜ், ரஜனி (இத்தாலி), முகுந்தராஜா (இத்தாலி), திருமதி வரதராணி செல்வராசா மற்றும் மாவீரர் மதனரூபன் (கல்கத்), மதன்ராஜன் (சின்னப்பழம் கனடா), திருமதி மயூரதி பிரதீபன் (வவுனியா), மதனாகரன் (சுவிஸ்) மகிந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2005) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அந்திராணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
விக்னேஸ்வரா வீதி,
புத்தூர். (42989) (54-45-15)

தகவல்:
பிள்ளைகள்
T.P.:0779228975
0779586947

### செல்லத்துரை அருட்பிரகாசம் (நவரட்ணம்)

(பிரபல முறிவு, நோவு வைத்தியர் - ஒட்டகப்புலம்)



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அருட்பிரகாசம் அவர்கள் நேற்று (19.11.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சமத்தர் செல்லத்துரை-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் ஜெறானின் ஜொய்சி (லண்டன்), நொய்லின், அன்ரன் அனோஜன் (நாராயணா ஹாட்வெயார், யாழ்ப்பாணம்), பிலிப்நிறஞ்சன் (யாழ்/தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்), டர்லின் நிரோசி (யாழ்/பற்றிசியன் தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் தவரட்ணம் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும் எவின், ரிஜான் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான றோசம்மா, பிரான்சிஸ், மரியநாயகம் மற்றும் லயனல் ராஜா (லண்டன்), ராஜேஸ்வரி சூசைதாசன் (அங்கமணி பிரான்ஸ்), மகேந்திரன் (சட்டத்தரணி - லண்டன்), திருமதி [illegible] பாலரட்ணம் (பிரான்ஸ்), ஜேம்ஸ் சமத்தர் (நியூ சில்வஸ்டார் உரிமையாளர், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் லூர்த்துநாயகி (ஹொலண்ட்), ஞானசவுந்தரி (கனடா), லில்லி, வஸ்ரியாம்பிள்ளை (கனடா), இந்திரா, மெற்றில்டா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.11.2005) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி:- 0777 498216 (42991) (54-45-15)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி வீரகத்திப்பிள்ளை சின்னம்மா

(இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி வீரகத்திப்பிள்ளை சின்னம்மா (ஆசிரியை) அவர்கள் நேற்று (19.11.2005) சனிக்கிழமை பருத்தித்துறையில் காலமானார்.

அன்னார் காங்கேசன்துறை, தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பருத்தித்துறை, தம்பசிட்டியை வதிவிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை அதிபரின் அன்பு மனைவியும் சிவபாலசுந்தரம் (பட்டயக் கணக்காளர், கனடா), சிவகணேசன் (பொறி வல்லுநர்), இந்திராணி அம்மா(லண்டன்) அவர்களின் அன்புத் தாயாரும் ரஞ்சனா (கனடா), உதயகுமாரி, வேலும் மயிலும் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வினோ (கனடா), வித்திகா(கனடா), காண்டீபன், நந்தகோபால், நந்தகோபன், லக்சன், நந்தினி, தர்சினி, செவ்வேள், தர்மினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் விசாலினி, அபிலாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும், இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம்(கடற்படை லிகிதர்), உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மாணிக்கவாசகர் (புகையிரத என்ஜின் டிரைவர்), காலஞ்சென்ற சிவராமலிங்கம் (வர்த்தகர் திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தம்பசிட்டி றோட்,
காந்தியூர், புலோலி. (சி-46291) (54-45-15)

தகவல்:
வீ.சிவகணேசன்
(மகன்).












நாளை ஆரம்பமாகும் மாவீர எழுச்சி வாரத்தை முன்னிட்( கோப்பாயில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லம் புதுப்பொலிவு பெற்றிருப்பதைப் படத் தில் காணலாம்.
(படங்கள்:- பிரபா)

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை குறுகிய காலத்துக்குள் முடிக்க வசதி

## மதிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படும்

கொழும்பு,நவ.20

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் விடைத்தாள் திருத்தும் நடவடிக்கையின்போது விசேட நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இம்முறை மேலதிகமாக 12ஆயிரம் மதிப்பீட்டாளர்கள் விடைத்தாள்களைத் திருத்தும்பணியில் ஈடுபடுத்தப்பட்டு, குறுகியகாலத்துக்குள் விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளைப் பூர்த்திசெய்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் 12 நாள்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் இம்முறை 8 நாள்களில் பூர்த்திசெய்யப்படவிருக்கின்றன.

மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் பாடசாலைகளின் விடுமுறைக் காலம் 10 நாள்களில் இருந்து 4 நாள்களாகக் குறைக்கப்படவுள்ளது.

இதேவேளை -

மதிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவு 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டாளர்களுக்கு முதல் தடவையாக தங்குமிடம் மற்றும் போக்குவரத்துச் செலவுகளுக்காக மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படவிருக்கின்றது. மதிப்பீட்டு நடவடிக்கைகளில் தவறுகள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு மதிப்பீட்டு நிலையத்திலும் மேலதிகமாக இரண்டு கணித மதிப்பீட்டாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை அடுத்த மாதம் 12ஆம் திகதிமுதல் 23ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள் ளார்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு இம்முறை 5 லட்சத்து 26ஆயிரத்து 629 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 3 லட்சத்து 78ஆயிரத்து 702 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் ஆவர். இதில் ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 927 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குவர்.

நாடளாவிய ரீதியில் 3ஆயிரத்து 911 நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (ஐ-12)

# 'புலிகளின் குரல்' விசேட ஒலிபரப்பு

கிளிநொச்சி,நவ.20

'புலிகளின் குரல்' வானொலியின் ஆண்டு நிறைவு வானோசை 15 நிகழ்வு மற்றும் மாவீரர்தின நிகழ்வு ஆகியவற்றையொட்டி புலிகளின்குரல் விசேட சிறப்பு ஒலிபரப்புகள் இன்றுமுதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

சிறப்பு ஒலிபரப்புக்காக இன்றுமுதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை காலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரை சேவை விரிவாக்கப்பட்டுள்ளது. இன்று வானோசை - 15 சிறப்பு ஒலிபரப்பு நாளைமுதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை மாவீரர்தின சிறப்பு ஒலிபரப்பு இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாள் வாழ்த்து ஒலிபரப்பும் மறுநாள் மாவீரர் நாள் ஒலிபரப்பும் தமிழீழ வானொலியினருடன் இணைந்து புலிகளின் குரலில் இடம்பெறும்.

(ஐ-3)

# அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிவதை ரணில் விரும்பவில்லை என்று அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர்.

ஐ.தே.கட்சியின் தவிசாளரான மலிக் சமரவிக்கிரம தமது பதவியில் இருந்து விலகுவதாக கட்சியின் செயலாளர் என்.வேரகொட வுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என நம்பிக் கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-3)

# பல தரப்புகள் பங்கேற்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான முயற்சிகள் முடிவுக்கு வருவதைக் குறிப்பது போன்ற சாரப்பட அந்த உரை அமைந்திருந்தது.

இனிமேல் புதிதாகவே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும். அதுவும் ஒரு தரப்புடன் - அதாவது விடுதலைப் புலிகளுடன் - மட்டுமன்றி ஏனைய பல தரப்புகளும் பங்கேற்கும் வகையில் சமாதான முயற்சிகளும் அவை தொடர்பான பேச்சுக்களும் முன்னெடுக்கப்படும் என்பதைத் தமது உரையில் தெளிவுபடுத்தினார் மஹிந்த.

இந்தியா உட்பட ஆசியப் பிராந்திய நட்பு நாடுகளும் சமாதான முயச்சிகளுக்குள் உள்வாங்கப்படும் என்பதையும் ஜனாதிபதியின் உரை கோடிகாட்டியது.

இது வரை சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வகித்து வந்த நோர்வேயின் பங்கு பணி குறித்து தமது உரையில் ஜனாதிபதி எதனையும் குறிப்பிட்டுக் கூறவில்லை.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாடு பிளவுபடக்கூடாது என்பதை ஏற்றுக்கொண்டு பெரும்பாலான மக்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர். இது இந்த நாட்டு மக்களின் பொதுவான அபிலாசையாக உள்ளது. மக்களின் இந்தப் பொதுவான அபிலாசையை அடிப்படையாகக் கொண்டே நான் மேற்கொள்ளவுள்ள சமாதான முயற்சிகளும் அமையும். இந்த அடிப்படையில் புதிய சமாதான செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். யுத்தம் நான் கையாளப்போகும் ஒரு வழி முறையாக இருக்காது. நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பாகச் சகல தரப்பினரோடும் புதிய பேச்சுவார்த்தைகளை நாம் ஆரம்பிப்போம். அந்தப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் வடக்கு மக்களின் அபிலாசைகளைப் போன்று தெற்கு மக்களின் அபிலாசைகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இது வரை இடம்பெற்ற இருதரப்பு சமாதான செயற்பாடுகளுக்குப் பதி லாக பல தரப்பினரும் பங்கேற்கும் சமாதான செயற்பாடுகளை அறிமுகம் செய்வோம். இந்தச் சமாதானச் செயற்பாடுகளின்போது விடுதலைப் புலிகளுடன் நேரடியான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்று அமுலில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி அதனை மீளாய்வு செய்வதற்கும் புதுப்பிப்பதற்கும் நாம் நடவடிக்கைகளை எடுப்போம். இந்தச் செயற்பாடுகளின் போது எமது சின்னஞ்சிறிய நாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் இந்தியா உட்பட ஆசிய பிராந்தியத்தின் ஏனைய நட்பு நாடுகளுடனும் சர்வதேச சமூகத்துடனும் இணைந்து செயற்படுவதோடு எமது நாட்டுக்குக் கௌரவமான சமாதான மொன்றைப் பெற்றுக்கொள்ளும் வகையில் எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாம் அவர் களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு ஜனா திபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் விசேட உரை முடிவடைந்தவுடன் முப்படை அணிவகுப்புமரியாதை இடம்பெற்றது. அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சமாதானத்தைக் குறிக்கும் வகையில் வெள்ளைப் புறாக்களைஜனாதிபதிவானில் பறக்கவிட்டார்.

ஜனாதிபதியி பதவியேற்ற வைபவத்தில் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயர் அரசுப் பிரமுகர்கள் படைத் தளபதிகள், சர்வமதத் தலைவர்கள் ஆகியோர் உட்படப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ஐ-3)


உங்கள் அதிர்ஷ்டத்தை பரிசீலிக்க
திருமுருகனின் விசேட விலைக் கழிவு
விவரம் 6ஆம் பக்கத்தில்

புதிய வீடியோ கிராபிக்ஸ் வெளியீடுகள்
Title, Background DVD, Software Video Effects.
T.P. 0777 917610

IISஇன் நம்பமுடியாத கட்டணச்சலுகை தை 2006 பிரிவுகளுக்கு
விபரங்கள் மிக விரைவில் உங்கள் உதயனில்
IIS

CATWAS.COM
Computer Academy
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna
TP: 021 -222 3806
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses
Microsoft Office 1750/=
Desk Top Publishing 2000/=
Web Designing 3000/=
Certificate Courses
Word XP, Excel XP, Access XP, PowerPoint XP, Page Maker 7, Corel Draw 11, Photo Shop 7, HTML, Cool 3D
Kids Program


# மரண அறிவித்தல்

## திருமதி துரைசிங்கம் லீலாவதி

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி துரைசிங்கம் லீலாவதி நேற்றுக் காலமானார்.

அன்னார் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும் சதாசிவம் - அன்னம்மா தம்பதியரின் மகளும் விஜயராணி, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் சிவகுார் (ஜேர்மனி), இந்திராணி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான செல்வராணி, சாந்திராணி மற்றும் சுகுமார் (ஜேர்மனி), ஜெயராசா (குமார்), ஆறுமுகம், பதுர்நிஷா (கொழும்பு) ஆகியோரின் தாயாரும் புவனமலர், ஜெயக்குமார், காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் யூலி (ஜேர்மனி), மகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் சோபனா, ரமேஸ், ரமணா, நளினா, ரமணன், குமணன், ஜெயந்தன், துஸ்யந்தினி, சுகந்தினி, மயூரன், தினேஷ், கஜானி, சுபாஷினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (20.11.2005) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு கோரியடி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயராசா (குமார்)
மகன்.

3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(சி.46292)
(15-45-53)


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
20.11.2005

# பாதுகாப்பற்ற கிணறுகளால் காவு கொள்ளப்படும் உயிர்கள்

## கிணறுகளைப் பேணாதோர் மீது நடவடிக்கை எடுக்க சட்டத்தில் இடம்

குடாநாட்டில் உயிர்களைக் காவுகொள்ளும் காரணிகளில் வீதி விபத்துகளுக்கு அடுத்ததாக திறந்த - பாதுகாப்பற்ற - கிணறுகள் முன்னணிக்கு வந்துள்ளன என்று தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பற்ற கிணறுகளில் தவறுதலாக வீழ்ந்து மரணிப்போர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதுதான் அந்த அதிர்ச்சித் தகவல்.

நீதிமன்றப் புள்ளி விவரங்களின் படி கடந்த ஜனவரி மாதம் முதல் இம்மாதம் வரை கிணறுகளில் தவறி வீழ்ந்து மரணமானவர்கள் எண்ணிக்கை பத்தைத் தாண்டி விட்டது. இது முன்னைய காலங்களைவிட உயர்வானதாகும். இது மாரிகாலம் ஆகையால் பாதுகாப்பற்ற இந்த நிலைமை மோசமாகி வீணான உயிரிழப்புக்கள் தொடரும் என்று எச்சரிக்கின்றன நீதித்துறை வட்டாரங்கள்.

கடந்த கால யுத்தத்தால் குடாநாட்டில் பரவலாகக் கிணறுகள் சேதமடைந்தன. கிணறுகளில் தரைக்கு மேல் உள்ள மேல் பக்கம் பாதுகாப்பு இன்றிக் காணப்படுவதே ஆபத்தாக உள்ளது.

யுத்தத்தின் பின் ஏற்பட்ட சமாதான



காலத்தில் சேதமடைந்த கிணறுகள் முறைப்படி புனரமைக்கப்பட வில்லை. இந்த விடயத்தில் அரச அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை. திட்டங்கள் ஏதும் தயாரிக்கப்படவில்லை.

நலன்புரி நிலையங்களில் குடிதண்ணீர் பெற முடியாது இருந்த மக்களுக்கு உதவுவதற்காக சர்வதேச அமைப்புக்கள் கிணறுகளை அமைத்துக் கொடுத்தன. விரல் விட்டு எண்ணக் கூடிய வகையிலேயே அந்தக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

பெரும் எண்ணிக்கையான கிணறுகள் பாதுகாப்புக்கட்டுக்கள் இன்றியும் மேல் பக்கம் மூடப்படாமலும் தூர்ந்து போய் கிடக்கின்றன. அவைதான் உயிர்களைக் காவு கொள்ளும் பாதாளக் குழிகளாக உள்ளன.

நீதிமன்றப் புள்ளிவிவரங்களின் படி கிணறுகளில் வீழ்ந்து உயிரிழந்தவர்கள் சிறு குழந்தைகளாகவும், நடுத்தர வயதுடையவர்களாகவும் முதியவர்களாகவும் உள்ளனர். வளர்ந்தவர்கள் அனைவருமே திடகாத்திரமானவர்களாகவும் உள்ளனர்.

வீடுகளுக்கு அருகே உள்ள கிணறுகளில் சிறுகுழந்தைகள் தவழ்ந்து சென்று விழுந்த சம்பவங்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. இது பெற்றோரின் கவனக் குறைவினால் ஏற்படுகின்ற அவலம்.
சுற்றி வர கட்டுக்கள் கட்டப்படாத - நிலமட்டத்தில் உள்ள பல கிணறுகள் குடியிருப்புப் பகுதிகளில் இப்போதும் காணப்படுகின்றன.

கிணறுகளில் தவறிவீழ்ந்து மரணமானவர் தொடர்பாக மரண விசாரணைகளை நீதிமன்றங்கள் நடத்துகின்றன. விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுக் கோவைகள் கிடப்பில் போடப்படுகின்றன.

இந்த அநியாய உயிரிழப்புக் களுக்கு முடிவு கிட்டாதா என்று சிந்திக்கின்றது நீதித்துறை. சமூக அமைப்புகள் இந்நிலையை முடிவுக்கு கொண்டு வர மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது நீதித்துறை.

கிணறுகளுக்கு நிலமட்டத்தில் இருந்து குறைந்தது 5அடி உயரத்துக்கு பாதுகாப்புச்சுவர் கட்டப்படவேண்டும். கிணறுக்கு மேல் தகரம் அல்லது கம்பி வலை போட்டு மூடவேண்டும். தண்ணீர் அள்ளுகின்ற மிதி உள்ள பக்கத்தில் தடுப்பு உயரமாகக் கட்டப்பட வேண்டும்.

மோட்டார் அல்லது நீர்ப் பாய்ச்சும் இயந்திரங்கள் மூலம் நீரை வெளியே எடுக்க வசதியாக அவற்றின் இணைப்புக்களுக்கு கிணற்றுக் கட்டில் துவாரம் போட வேண்டும். கிணறு அமைந்துள்ள இடங்களை ஏதாவது வகையில் அடையாளமிட வேண்டும்.

இந்த நடைமுறைகள் மூலம் அநியாய இறப்புகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என ஆலோசனை கூறப்படுகின்றது.

அரச செயலக, பிரதேச செயலக அதிகாரிகள் கிராம சேவையாளர்கள் ஊடாக கிணறுகள் தொடர்பான கணக்கெடுப்பை நடத்தவேண்டும். அதன் மூலம் பாதுகாப்பற்ற கிணறுகளை இனங்கண்டு அவற்றைப் பாதுகாப்பான வகையில் மீளக்கட்டுவதற்கு மானியங்களை வழங்கவேண்டும். இதில் விசேட கவனம் செலுத்தத் தவறுவோமானால் அநியாய உயிரிழப்புகளைத் தடுக்கமுடியாது.

வயல்வெளிகள், தோட்டம் போன்ற இடங்களில் உள்ள ஆழமான கிணறுகள் தொடர்பாக விசேட திட்டங்கள் வகுக்க வேண்டும். அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று அவை புனரமைக்கப்பட வேண்டும். கூடுதலாக உயிரிழப்புக்கள் வயல் மற்றும் தோட்டப்பகுதிகளில் உள்ள கிணறுகளிலேயே ஏற்படுகின்றன எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

கடந்தகாலங்களில் பல்வேறு காரணங்களுக்காக கிணறுகளில் வீழ்ந்து தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. அத்தகைய சம்பவங்கள் தற்சமயம் குறைந்துள்ளன. கிணறுகளில் தவறிவீழ்ந்து மரணமாகும் சம்பவங்களே அதிகரித்துள்ளன என்று கூறுகின்றது நீதித்துறை.

இத்தகைய சம்பவங்களைத் தடுக்கச் சம்பந்தப்பட்ட கிணறுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக - நடவடிக்கை எடுக்க ஏதாவது சட்ட ஏற்பாடுகள் உள்ளனவா என யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனிடம் கேட்டோம்.

இதற்கான சட்டஏற்பாடுகள் குறித்து விளக்கம் ஒன்றை அவர் வழங்கினார்.

''குடாநாட்டில் கிணற்றுக்குள் தவறிவீழ்ந்து மரணமாவோர் எண்ணிக்கை கடந்த காலங்களை விட தற்சமயம் அதிகரிக்கின்றது.

''இந்த மரணங்கள் தொடர்பாக மரணவிசாரணைகளை நடத்துகின்றோம். மரண விசாரணைகளில் தெரிவிக்கப்படும் சாட்சியங்களை ஆராய்ந்து விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்குகின்றோம்.

''இந்தச் சம்பவங்களில் அப்பாவிகள் வீணாக உயிரிழக்கின்றனர். ஆனால், கிணற்றைப் பாதுகாப்பு இன்றி வைத்திருக்கும் அக்கிணற்றின் உரிமையாளர்கள் தப்பிக்கொள்கின்றனர்.

''கிணறுகளைப் பாதுகாப்பு இன்றி வைத்திருப்பவர் மீது வழக்குத் தாக்கல்செய்து அவரிடம் இருந்து உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க சட்டத்தில் இடமுண்டு. அதற்கு சட்ட ஏற்பாடுகளும் உண்டு.

''சிவில் சட்டங்களுக்கும் குற்றவியல் சட்டங்களுக்கும் இடையே தீங்கியல் என்ற சட்ட ஏற்பாடு உண்டு. அந்த சட்ட ஏற்பாட்டின் கீழ் பாதிக்கப்பட்ட எவராவது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தால் மரணமானவரின் உறவினர்களுக்கு நஷ்டஈடு கிடைக்க உதவலாம்.

''யாழ்.மாவட்டத்தில் இதுவரை எவரும் இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யவில்லை.இதுபற்றி மக்களுக்குத் தெரியாமல் கூட இருக்கலாம்.

''இந்தச் சட்ட ஏற்பாட்டின் கீழ் கிணற்று உரிமையாளர் மீது வழக்குத் தொடர்வதன் மூலம் பாதுகாப்பற்ற கிணறுகள் புனரமைக்கப்பட வாய்ப்புக் கிட்டும்'' - என்று விளக்கம் தந்தார் ஸ்ரீநிதி நந்தசேகரன்.

எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதன் மூலமும் அரச அதிகாரிகள் இந்த விவகாரத்தில் தலையிட்டு விசேட திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவதன் மூலமும், - வீணான

மாவை குகன்

உயிரிழப்புகளைத் தவிர்க்கமுடியும் என்று நம்பிக்கை வெளியிடப்படுகின்றது.

தற்சமயம் மழைகாலம் ஆரம்பித்துள்ளது. மழையால் கிணறுகள் எல்லாம் நிரம்பும்நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பற்ற கிணறுகள் மூலம் வீணாக உயிர்கள் காவுகொள்ளப்படும் சூழ்நிலையைத் தவிர்க்க அரச அதிகாரிகள் துரித செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். சமூக, பொது அமைப்புக்களும் இந்த விடயத்தில் நாட்டம்கொள்ள வேண்டும்.

காலத்தின் தேவைகருதி இதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று நீதித்துறை சகல தரப்பினரிடம் விண்ணப்பிக்கின்றது.

# சிறுவர் காப்பகங்களில் கேள்விக்குறியாகும் சிறுவர் பாதுகாப்பு...

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அக்கறை கொண்டு செயற்பட்டுவரும் இக்கால கட்டத்தில் சிறுவர்களது உரிமைகள், நலன்கள் கேள்விக் குறியாகி நிற்பதும் வெளிப்படையாகின்றது. குறிப்பாக குடும்பச் சூழலில் சிறு சிறு உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் சிறுவர் காப்பகங்களில் இதன் தாக்கம் பெரும் வெளிப்பாடாகப் புலப்படுகின்றது.

இவ்விடயத்தினை விபரித்து விமர்சிக்கும்போது இதயசுத்தியுடனும் தன்னலமற்ற சேவை நோக்குடனும் செயற்பட்டுவரும் சிறுவர் காப்பகங்களின் சேவையாளர்களுக்கு தாக்கம் ஏற்படுமோ என்ற குற்றஉணர்வு ஏற்பட்டபோதும் இவற்றினை சுட்டிக்காட்ட வேண்டியதன் அவசியம் அண்மையில் ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் அதனை வெளிப்படுத்துவதில் அவர்களும் ஒத்துழைப்பார்கள் என்றே எதிர்பார்க்கிறேன். இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள் சேவை நோக்கமும் அன்புநெறியும் கொண்டு உருவாக்கப்பட்டு வழிநடத்தப்படும் நிறுவனங்களுக்கு அப்பால் தம்மை சேவையாளர்களாக இனங்காட்டிக் கொள்ளவும், அதன் மூலம் வருமானம் ஈட்டிக்கொள்ளவும் உருவாக்கி அதனை நிர்வகிக்கத் தெரியாது அல்லது நிர்வகிப்பதில் அக்கறை கொள்ளாது உருக்குலைத்துக்கொண்டிருக்கும் நிறுவனங்களின் நிலைகளையே குறித்து நிற்கிறது.

ஒரு குழந்தைக்குத் துன்பம் வருகின்ற போது தாய் வருவாளா இல்லையா என்பதை தெரியாமல் ''அம்மா'' என்று தான் அழைக்கிறது குழந்தை. போர்க்கால சூழ்நிலைகளாலும் ஏனைய துரதிர்ஷ்டவசமான சந்தர்ப்பங்களினாலும் பெற்றவர்களை இழந்து பேதலித்துப் போன சிறார்களே சிறுவர் காப்பகங்களில் தஞ்சம் தேடியதுடன் தொலைந்துவிடுமோ என்ற தமது எதிர்காலத்தை எட்டிப் பிடிப்பதற்காக ஏங்குகின்றார்கள். இப்படியான சிறார்களின் ஏக்கங்களுக்கெல்லாம் ஒளி கொடுத்து அவர்களை நல்ல சிற்பிகளாக்கிய வரலாறு சிறுவர் காப்பகங்களிற்கு இருந்து வந்ததும் மறுக்க முடியாததே. தமக்கு யாருமே இல்லை என்று எண்ணிய சிறார்களுக்கும், தம்மை யார் தட்டிக்கேட்க இருக்கிறார்கள் என்ற மனப்பாங்கில் தடுமாறிப் போன சிறுவர்களையும் தத்தெடுத்து 'உங்களுக்காக நாம் இருக்கிறோம்' என்று அரவணைத்து நல்வழி காட்டும் எண்ணம் எல்லோருக்கும் உதித்துவிடாது, அவ்வாறு எண்ணுகின்ற உள்ளங்களால் உதித்ததே சிறுவர் காப்பகங்கள்.

### வேலியே பயிரை மேய்வதா?

இங்கே நுழைகின்ற சிறுவர்கள் நல்ல ஒழுக்கங்களையும், ஆன்மீக சிந்தனைகளையும் பெற்று மற்றைய சிறுவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார்கள், திகழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தாம் பெற்றவர்களை இழந்தவர்கள் அல்லது பெற்றவர்களது அரவணைப்பிற்கு அப்பாற்பட்டவர்கள் என்ற மனநிலையை மறந்து தங்களுக்குள்ளே சகோதர உணர்வை வளர்த்து உற்றவராய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வசந்தமான வாழ்வியலுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு இப்போது சோதனைகளும் வேதனைகளும் ஏற்படத் தொடங்கியிருப்பதுதான் பலரின் மனக் குமுறலுக்குக் காரணம்.

சிறுவர் காப்பகங்களில் இடம்பெறுகின்ற குறைபாடுகளும், முறைகேடுகளும் அண்மைக்காலப் பத்திரிகைகளில் அடிக்கடி வரும் செய்தியாகிவிட்டது. இந்த நிலை ஏன் உருவானது? இந்தச் சிறார்கள் செய்த குற்றம் தான் என்ன? இவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உடனுக்குடன் அவதானிக்க யாருமே இல்லையா? என்ற வினாக்கள் மனக்கண்முன் தோன்றுகின்றன. சிறுவர் உரிமை மீறல் என்ற ரீதியில் பார்க்கும்போது

*01. பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள்*
*02. அளவுக்கதிகமான வேலைப் பளுவை சுமத்துதல்*
*03. அடிமைகள் போன்ற பாவனையில் நடத்துதல்*
*04 அவர்களது விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பளிக்காமை.*

என்றவாறு பட்டியல் நீண்டுகொண்டு செல்கிறது. இவ்வாறான துன்புறுத்துதல்களை யார் மேற்கொள்கிறார்கள் என்று பார்க்கும்போது, அதனை அங்கு பணிபுரிபவர்களே பெரும்பாலும்



செய்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. அவர்களால் இழைக்கப்படுகின்ற இவ்வாறான துன்புறுத்தல்கள் அதிகாரத்தனத்துடனான மிரட்டல்களால் மறைக்கப்பட்டும் வருகின்றன. இது யாருமே இல்லை என்று ஏங்கி மன அழுத்தங்களோடு நல்வாழ்வை வேண்டி நிற்கும் பிஞ்சு உள்ளங்களுக்கு இன்னும் பாரிய பின்னடைவையே ஏற்படுத்தும் என்பது தெட்டத்தெளிவு.

### பாலியல் துன்புறுத்தல்

இதில் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆட்பட்டுப்போன சிறுவர்களின் நிலையோ வார்த்தைகளால் கூறமுடியாதவை. இது நிகழ்கால வாழ்வியலை மட்டுமன்றி எதிர்காலக் கனவுகளையும் சிதைத்து விடுகின்றது. அவ்வாறான தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் தாங்கள் உடலியல் ரீதியாக ஏற்பட்ட பாதிப்பில் இருந்து விடுபட முயன்றாலும், சமூகம் பார்க்கின்ற பார்வையில் இருந்து மீண்டு கொள்ள முடியாமல் தமது ஆளுமைகளையெல்லாம் முடக்கி அவல வாழ்விற்குள் நடைப்பிணமாய் வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அடுத்து, அளவுக்கதிகமான வேலைப்பளு மற்றும் அடிமைகள் போல நடத்துதல் என்ற துன்புறுத்தலை நோக்கினால் அது சற்று வித்தியாசமாக சிறுவர்களை நல்வழிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் பயிற்சி என்ற போர்வையில் நடத்தப்படுகின்ற வேதனையான சம்பவமாகின்றது. தங்களுடைய சொந்தப் பிள்ளைகளை அவ்வாறு பயிற்றுவிக்கவேண்டும் என்று எண்ணாதவர்கள் இந்த அப்பாவிச் சிறுவர்களை அடிமைகள் போல ஆட்டுவிப்பது பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு வேதனைகளையும் சோதனைகளையும் சிறார்கள் மீது திணித்துக் கொண்டிருப்பவர்கள் ஒன்றை நன்கு சிந்திக்க வேண்டும். நீர்க்குமிழி போன்ற மானிட வாழ்வில் இன்று என்பது மட்டும் தான் நிஜமாய் இருக்கிறது. நாளை என்ன நடக்கும் என்பது நிச்சயமற்றதாய் இருக்கிறது. நாளை என்னுடைய பிள்ளைக்கு இந்த நிலை ஏற்பட்டால்... அல்லது என்னுடைய பிள்ளையை அல்லது என்னுடைய சகோதரரை இவ்வாறு மோசமாக யாராவது நடத்தினால் அந்தப் பிள்ளையின் மனம் எவ்வாறு வேதனைப்படும் என ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிறுவர் இல்லங்களை நாடி வருகின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் தங்களை அந்த இல்லங்களில் அரவணைக்கும் ஒவ்வொருவரும் தெய்வங்களாகவே காட்சியளிப்பர். அந்த தெய்வங்களே தங்களை வேதனைப்படுத்துகின்றன என அவர்கள் எண்ணினால் அவர்களது ஒளிமயமான எதிர்கால எண்ணங்கள், கனவுகள், கற்பனைகள் கேள்விக்குறியாய் நின்று அவர்களின் நீண்ட வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்பது திண்ணம்.

### நிர்வாகங்களின் பொறுப்பு

இவ்வாறு சிறுவர் காப்பகங்கள் மற்றும் ஏனைய இடங்களில் சிறார்கள் மீது குற்றம் புரிபவர்களைத் தெரிந்தாலும் கூட அந்த நிறுவனத்தின் பொறுப்பில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருப்பவர்களே அதன் தாக்கத்திற்கு உள்ளாகின்றார்கள். அவ்வாறு பொறுப்பில் இருப்பவர்கள் தாக்கத்தினை அனுபவிப்பதற்கு தங்களது பொறுப்பினை சரிவர நிறைவேற்றாமையும் ஒரு காரணமாக அமைகின்றது. தாங்கள் எதிர்கால சந்ததிக்கான தூண்களை உருவாக்குவதற்கான பாரிய பொறுப்பினை ஏற்றவர்கள் என்ற எண்ணத்தினை மறக்கின்ற போதும் அல்லது அப் பொறுப்பினை துஷ்பிரயோகம் செய்கின்றபோதும் ஆரம்பிக்கும்போது ஒரு மனப்பாங்கினையும் பின்னர் அதன் செயற்பாட்டுக் காலத்தில் இன்னொரு மனப்பாங்கினையும் கொண்டிருக்கும் போது தமது சுய இலாப நோக்கத்திற்காக ஆரம்பித்து அதன் பலன்களைப் பெற்ற பின்னர் பொறுப்பின்றி விடுகின்ற போதுமே இவ்வாறான வேதனைமிக்க சம்பவங்கள் உருவெடுக்கின்றன. இவர்களது இவ்வாறன நடத்தைகளால் நல்லநோக்கோடு இயங்கிவரும் நிறுவனங்களும் பாதிப்புக்குள்ளாகின்றமை பலரது மனங்களைப் புண்ணாக்குகின்றது.

தொண்டு நிறுவனங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பத்திரிகைகளில் சிறுவர் உரிமை தொடர்பான விளம்பரங்களையும், வாசகங்களையும் காலத்திற்குக் காலம் வெளியிடுவதுடன் சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது மனநிறைவினை அளித்தாலும் கூட இவ்வாறான துஷ்பிரயோகங்கள், துன்புறுத்தல்கள் நடைபெறாது தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, காலத்திற்குக் காலம் மேற்பார்வைகளை மேற்கொள்வதோடு சிறுவர்களது உள்ளத்து உணர்வுகளைக் கேட்டு அறிந்து அவர்களது சுதந்திரத்தையும் உரிமைகளையும் மேலும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்களேயானால் எதிர்காலச் சமூகம் ஆரோக்கியம் பெற்ற சமூகமாக மாறும் என்பதில் ஐயம் இல்லை.

நடராஜா ஐங்கரன்

---

## அனுமதிக்கப்படாத பக்கம்

என்குருவின் படைப்புகளை
தொகுத்து அச்சேற்றினால்
கலைஆத்மா சாந்திபெறும்
கனத்தது நினைவொன்று!

தெருத்தெருவாய் தேடி
ஒருவருட நிறைவில்தான்
பிரதிகளைச் சேகரித்தேன்.

ஒவ்வொரு பிரதியினதும்
கடைசிப் பக்கத்தில்
இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

தயாரிப்பாளரின் முன்
அனுமதியின்றி
எந்த மாற்றமும்
நிகழ்த்தக் கூடாதென்று...

ந.வினோதரன்

# வன்முறைகளற்ற சமூகத்தில் பெண்கள்

பெண்மை இன்று தலை தூக்கி நிற்கின்றது. இன்றைய சமூ கத்தில் பெண்கள் அறிவியல் ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும், அரசியல் ரீதியிலும், சமூக மட்டத்திலும் உயர்ந்த நிலையில் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் சமூக உயர் நிலையில் முன்நிற்கத் தவறவில்லை.

பெண்மை என்பது உயிரிகளின் தோற்றம் என்றும் உயிரிகளின் ஆரம்பம் என்றும் கூறமுடியும். பெண் ஆனவள் தாயாகவும் மனைவியாகவும் சகோதரியாகவும் அதைவிட உயர்வாக தெய்வமாகவும் போற்றப்படுகின்றாள். பெண்மை என்ற சொல்லுக்குள் அல்லது அந்த உயிருக்குள் அன்பு, பாசம், கருணை, மென்மை போன்ற தெய்வீகக் குணங்கள் உள்ளடங்கியுள்ளது. அதனாலே பெண்மையையும் பெண்களையும் தெய்வத்துக்கு நிகராகப் போற்றுகின்றோம். அன்னை திரேசா, நைற்றிங்கேள் போன்ற சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெண்களையும் வரலாற்று நோக்கில் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பெண்களாகிய கண்ணகி, சீதை, சந்திரமதி போன்ற பெண்களையும் இதற்கு உதாரணமாகச் சொல்ல முடியும்.

ஆயினும் பெண்ணியத்துக்கான விடுதலை, சுதந்திரம், மனித வரலாற்றுக் காலம் தொட்டு நசுக்கப்பட்டே வந்தது என்பதை வரலாறுகள் ஊடாகவும் தற்கால வாழ்வியல் ஊடாகவும் உணர முடிகின்றது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் ஒடுக்குமுறைகளையும் நாம் நோக்குகின்ற போது சமூகரீதியான வன்முறை என்றும் உடலியல் ரீதியான வன்முறை என்றும் நோக்கலாம்.

சமூக ரீதியான வன்முறைகள் என்கின்ற போது ஒரு சமூகத்தின் அங்கங்களை குடும்பம், சமயம், கலை, கலாசாரம் அரசியல் பொருளாதாரரீதியான பிறழ்வுத் தாக்கங்கள், தாழ்த்தல் நிலைகள், ஒடுக்கு முறைகள் பெண்ணியத்தை இந்நிலைகளில் இருந்து ஒடுக்குகின்றது. ''ஆணையும் பெண்ணையும் இயற்கை படைக்கிறது. ஆனால் அதனை ஆண்மையாகவும் பெண்மையாகவும் சமூகமே மாற்றி வைக்கின்றது'' என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

**ஆணையும் பெண்ணையும் இயற்கை படைக்கிறது. ஆனால், அதனை ஆண்மையாகவும் பெண்மையாகவும் சமூகமே மாற்றி வைக்கின்றது.**

பெண்களுக்குரிய ஆண்மைத் தன்மைகள் வரையறுக்கப்பட்டு உள்ளமையால் (சமூகத்தால்) மேற் கூறப்பட்ட சமூகத்தளங்களிலே பெண் ஆனவள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளாள். சமயரீதியிலே இறைவனால் பெண் சம உரிமையோடு படைக்கப்பட்டாள் என்று கிறிஸ்தவ வேதாகமம் எடுத்துக் காட்டு கின்றது. அர்த்தனாதீஸ்வரர் என்ற உருவநிலையை (ஆண், பெண்) இந்துக்களின் தெய்வமும் உணர்த்து கின்றது. எனவே, படைப்பிலே சம நிலை காட்டப்பட்டாலும் பெண் பேச்சுச் சுதந்திரம் அற்றவளாகவும் சமூகப் பிரதிநிதித்துவம் வழங்கப்படாதவளாகவும் அங்கீகரிக்கப்படாதவளாகவும் பெண்ணியல்பில் ஆசைகளும் திறமைகளும் ஆண்மைவாதிகளால் வன்முறையாக பெண்க ளுக்கு எதிராகத் திணிக்கப்பட்டது.


உடல் ரீதியான் வன்முறைகளை நோக்கும்போது பெண்கள் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கும் உடல் ரீதியான வன்முறைகளுக்கும் உளரீதியான வன் முறைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள். பொதுவாக வெட்டுதல், தண்டித்தல், கற்பழித்தல், கொலை செய்தல் அதிக வேலைப்பளுவை சுமத்துதல், பணத்துக்கு விற்றல் கூலிக்கு அமர்த்துதல், அடிமைப் படுத்தல் போன்ற வன்முறைச் செயற்பாடுகளைக் கண்டு கொள்ள முடியும். சிலவேளைகளில் உளரீதியான தாக்கங்களினால் வன்முறையின் எல்லையில் பெண்கள் தற்கொலை செய்கின்றனர்.

சமூகத்தில் பெண்கள் வன் முறைக்கு உட்படாதவர்களாக விளங்க வேண்டுமாயின் அவர்களுக்கான உரிமைகள், சுதந்திரங்கள் சமத்துவங்கள் வழங்கப்பட வேண்டும். மறுக்கப்பட்டு இருக்கின்ற உரிமைகள் வழங்கப்படுகின்ற போது அல்லது கிடைக்கின்ற போது பெண்களும் கல்விமான்களாக, விஞ்ஞானிகளாக, நீதிவான்களாக திகழமுடியும் என்பதற்கு 20ஆம் நூற்றாண்டு எடுத்துக் காட்டாக அமைகின்றது. இங்கு தான் பாரதி கண்ட புதுமைப் பெண் உருவெடுத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

ஆயினும், நாகரீக வளர்ச்சிக்கு ஏற்பவும், உலகமயமாதலுக்கேற்பவும் உலகம் சுருக்கப்பட்டாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் முடிவுற்றதாகக் காணப்படவில்லை. இலங்கையில் 60 வீதமான பெண்கள் வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்படுகிறார்கள். உடல் ரீதியான வன்முறைக்கு உட்படுவோர் அதிகம் பேர் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. தெற்காசிய நாடுகளிலும், ஆபிரிக்க நாடுகளிலும்



வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்ட பெண்களே அதிகம் வன்முறைக்குட்படுத்தப்படுவதாகத் தரவுகள் கூறுகின்றன. ஆயினும், இவற்றுக்கெதிராக உலகளாவிய ரீதியிலும், சமூக ரீதியிலும், போராட்டங்களும் அமைப்புகளும் தோற்றம் பெற்றன. பெண்கள் தினங்களும் பெண்கள் அமைப்புக்களும் தோற்றம் பெற்று உலகில் பெண்களுக்கு எதிராக ஏற்படும் வன்முறைகளுக்குக் குரல் கொடுத்தன.



ஆயினும், வன்முறைகளை முற்று முழுதாக ஒழிக்க வேண்டுமாயின் பெண்களுக்கு ஆதரவான கடுமையான சட்டங்கள் தோற்றம் பெறவேண்டும். பெண்கள் பற்றிய அவசியத்தை பெறுமதியை சர்வதேச ரீதியாக உணர்த்த வேண்டும். அத்துடன், பெண்கள் பற்றிய விழிப்புணர்வை ஆணாதிக்கத்தின் மத்தியில் ஏற்படுத்தவேண்டும். அதற்காகவே இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் செயற்படுகின்றன.



– இராசரத்தினம் கருணாகரன்

# ஒவ்வொருவரும் அழகுதான்



அழகுக்காக நாம் நேரத்தையும் பணத்தையும் செலவிடுவது தவறில்லை. வீட்டிலேயே செய்யக் கூடிய அழகுக் குறிப்புகள் சில உண்டு. அவற்றை உங்களுக்காக இங்கே தருகின்றோம்.

ஒரு முட்டையின் வெண்கருவுடன் அரை மேசைக்கரண்டி தேன் கலந்து முகத்தில் பூசி 20 நிமிடம் ஊற வையுங்கள். பிறகு குளிர்ந்த தண்ணீரால் கழுவுங்கள். வாரம் இருமுறை இவ்வாறு செய்தால் போதும். (பளிச்சென்று தெரியும்.)

பப்பாளிப்பழத் துண்டை முகத்தில் தேய்த்து 10நிமிடம் கழித்து முகம் கழுவலாம். முகம் மின்னலடிக்கும்.

2கரண்டி மஞ்சள்தூள் அதே அளவு தோடம்பழச்சாறு கலந்து முகத்தில் பூசிக் கழுவலாம் - பூனைமுடிகள் அகன்று மாசுமறுவற்று முகம் பளபளக்கும்.

# பெண்மை என்றொரு பெருமை

ஆவேசப்படு தேவதையே!
அதுதான் பெண்மைக்கு
ஆனந்த ஆரோக்கியம்!
ஏனெனில் அழுவது
பெண்மைக்கு அழகன்று!

கண்ணீரும் உனது
ஆபரணம் என்று
கருதி விடாதே!
கவலைக்கு அதுதான் நிவாரணம்
என்று கருதி விடாதே!

உறங்கிக் கிடக்கின்ற
உன்னதப் பூக்களை
உசுப்பி விட்டு
வேடிக்கை பார்த்தால்
கயல் விழிகள் எல்லாம்
இனிப் புயல் விழிகள் ஆகும்
என்பதைப் புரிய வைப்பாய் பூவையே...

அடக்கி வைப்பதே
ஆண்மை என்றும்
அடங்கி நிற்பதே
பெண்மை என்றும்
தொடக்கி வைத்தவர்கள்
தொலைந்து போகட்டும்!
ஏனெனில், காதலை
கருவாடாக்கி காய வைத்த
கயவர்கள் அவர்கள்!

தன் மனைவிக்குத்
தாலி கட்டுவதற்கும்
தந்தியில்லாத தந்திகள் அவை!
சொர்க்கத்தை அணைப்பதற்கும்
ரொக்கத்தையா எதிர்பார்ப்பது!
கண்ணாக இரு என்றும்
கருத்தோடு - உயர் பெண்ணாக
இருப்பதற்காகப் பொறுப்போடு!!

*எஸ்.அபூறதி,* சங்கானை

**அர்த்தமுள்ள வாழ்விற்கு...**

வலிமை என்பது அசைக்க முடியாத மன உறுதியில் இருந்து வருகிறது. மனதில் தூய்மை அதிகம் இருந்தால் நமது வலிமை அதிகமாக இருக்கும்.

# சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியாவிற்கு!**

''நமது கோபக்கனலின் ஒவ்வொரு கதிரும் இறுதியில் நம்மையே சுட்டெரித்துவிடுகிறது''

இன்று நம்மை சில இடங்களில் (மிகச் சில இடங்களில்) தைரியசாலியாகவும் அநேகமான இடங்களில் பலவீனராகவும் உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது கோபம் என்னும் உணர்வேயாகும்.

கோபம் ஒரு மனிதனை அலைக்கழிக்கின்றது. ஆட்டிப்படைக்கின்றது. நன்மையான விடயங்களைக் கூட புரிந்து கொள்ள முடியாத மனப்பாங்கை உருவாக்கி விடுகின்றது.

இந்தக் கோபம் மனித உள்ளத்தையும் உடலையும் வெகுவாகப் பாதிக்கின்றது. உடலும் உள்ளமும் மிக நெருங்கிய தொடர்புடையது. இதனால் கோபம் இரண்டையும் மிகமிகப் பாதிக்கின்றது. உள்ளத்தில் உருவாகும் கோபம் உடல் நலத்தைப் பாதிக்கின்றது.

இந்தக் கோபம் வேண்டாத, விரும்பப்படாத ஓர் உணர்வு. கோபத்தை ஓர் உள நோய் என்றே கூறலாம். இந்த உள நோய்க்கு நாம் அவ்வப்போது ஆளாகின்றோம். சிலர் அடிக்கடி பாதிக்கப்படுகின்றோம்.

கோப உணர்வு நம் உள்ளத்தின் நல்ல உணர்வுகளை கொஞ்சம் கொஞ்சமாகத் தின்று கொண்டிருந்தது. சிலர் கோபம் வந்தால் மாதக் கணக்கில் கூட யாரிடமும் பேசாமல் மௌனம் சாதிப்பார்கள். இது குடும்பங்களுக்கிடையே வேற்றுமையை அதிகம் உருவாக்கும்.

கோபம் பல வித நோய்களை நமக்குள் தோற்றுவிக்கின்றது. நமது இதயத்தைப் பாதிக்கின்றது. ஒவ்வொரு முறையும் தன்னடக்கமின்றி கோபம் வெளிப்படும் போது நமது நரம்பு மண்டலமே அதிர்ந்து போகின்றது. திரும்பத் திரும்பக் கோபப்படும்போது ஒரு சிறு விடயத்தில் கூட கோபத்தைத் தூண்டி விடுகின்றது. இதனால் நரம்புகள் பலவீனப்பட்டுப் போகின்றது.

இவைமட்டுமா? அடிக்கடி கோபப்படுவர்கள் தொடர்ந்து கோபத்தை மனதில் தேக்கி வைப்பதால் அல்சர் உண்டாகக் காரணமாகின்றது. அத்துடன், எமது உடம்பின் நோய் எதிர்ப்புச் சக்தியையும் மிகக்குறைத்து விடுகின்றது.

என்ன பிரியா? சாதாரண ஒரு கோபத்தால் இத்தனை வியாதிகளையும் நம் உடலிற்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமா? மற்றவர்களை அழிக்கும் கோபம் முதலில் நம்மைத்தான் அழிக்கும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

*எனவே, கோபம் நம்மை அழிக்கமுன் கோபத்தை நாம் அழிப்போம்.*

**பிரியமுடன் சந்தியா**

# யாழ்ப் பாணம்



# ‘குறுக்குவழி’

பணபலம் உட்பட, சகல வசதி வாய்ப்புகளும் அவருக்கு இருந்தன. இத்தனைக்கும் பெரிய அளவிலான வர்த்தக முயற்சிகளை அவர் மேற்கொண்டதில்லை. ‘ஈரொட்டு வியாபாரம்’ என்பதன் மூலம் ஈட்டிய தேட்டமே அது.

பிற இடங்களில் இருந்து கொழும்பின் நான்காம் குறுக்குத்தெரு வர்த்தக நிறுவனங்களுக்கு வந்து சேரும் விவசாய உற்பத்தி மற்றும் உணவு வகைப் பொருள்கள், லொறியை விட்டு இறக்கப்படாமலேயே விலைபேசி முடிக்கப்பட்டு முழுமையாகவே மற்றொரு வர்த்தக நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்படுவதுண்டு. இவ்விதம் தம்மிடம் அனுப்பப்பட்ட பொருளை - வெறும் மாதிரிகளைப் பார்த்தே - விலைபேசி விற்று ஒரு சில நிமிடத்தில் எவ்வித சிரமமும் இன்றி பொருளின் விற்பனைத் தொகையில் ஒரு சில விகிதத்தொகையை ஈட்டமுடிவது ஒரு சில வர்த்தகர்களுக்கு மட்டுமே கைவந்தகலை.

தரகுத் தொழிலில் பணமுதலீட்டுக்கு அவசியம் ஏற்படுவதில்லை. பெரும்பாலான தரகர்கள் அவ்விதம் பெரிய அளவு நிதி வசதி கொண்டிருப்பதுமில்லை - அவர்கள் வெறும் இடையீட்டாளர்களே. வேண்டுமானால் நாட்டின் இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வேக்காரர் போன்று அனுசரணை வழங்குவது மட்டுமே அவர்களது பங்கு .

ஈரொட்டு வர்த்தகம் வித்தியாசம் மிக்கதொன்று. உற்பத்தியாளரின் அவசிய நிதித்தேவையைப் பொறுத்து நியாயமான விலையை விடக் குறைத்து விலைபேசி முடித்து மொத்தத் தொகையையும் செலுத்தி பொருளைத் தமது வீட்டில் அவர் களஞ்சியப்படுத்திக்கொள்வார். அப்பொருளுக்கு சந்தையில் கடும் கிராக்கி ஏற்படும் சமயம் அப் பொருளை விற்று அதிக இலாபம் ஈட்டிக்கொள்ளும் சாதுரியம் அவருக்குக் கைவந்த கலை. ஐந்தாவது வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்திக்கொண்ட அவர், தனது வார்த்தை ஜாலத்தால் - சரளமான பேச்சால் - இவ்விதம் வாங்கி - விற்றுப் பணமீட்டும் திறன் என்னைப் போல் பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுண்டு.

பணம் செலவழிப்பதில் மனிதர் கறாரான பேர்வழி. இலேசில் கை விரிக்க மாட்டார். பொது நிகழ்வுகளுக்கு நிதிசேகரிக்கச் செல்லும் ஊர் இளைஞர்கள் அவரது கஞ்சத்தனத்தைக் கேலிசெய்து விமர்சிப்பதுண்டு. மத சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குக் கூட மனிதர் எந்த வித நிதி உதவியும் செய்ததில்லை.

தனது தனிப்பட்ட - தனக்கு இலாபமீட்டித்தரும் தேவைகள் எதற்கும் பணச் செலவு செய்ய அவர் ஒருபோதும் பின்நின்றதில்லை. ‘பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்’ என்று அவர் அடிக்கடி பெருமைபேசிக் கொள்வதுண்டு. தனது வார்த்தை ஜாலங்கள் எடுபடாத வேளைகளில் கையை இளக்கிக் காரியம் சாதித்துக்கொள்வதில் அவர் படு கில்லாடி; அதன் பின்னர் தாம் ‘வெட்டி ஆடி வென்றுவிட்டதாக’ மார்தட்டிக் கொள்வது அவரது வழக்கம்.

சமூக மட்டத்தில் மட்டுமன்றி அரசதுறை அலுவல்களில் கூட எந்தவொரு காரியத்தையும் பணத்தால் சாதித்துக்கொள்ளலாம் என நம்பிய மனிதர் அவர். எவரெவரை எப்படியெல்லாம் சமாளித்துத் தனது தேவையைச் சாதகமாக நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பதை அனுபவ பூர்வமாய் செய்து காட்டியதுடன், அதற்காக அவர் பெருமை பாராட்டிக்கொண்டதுமுண்டு.

பொதுவில் ‘அவரது காட்டில் எப்போதுமே மழை’ என்ற விதத்தில் வாழ்ந்தவர் அவர். இத்தனைக்கும் இவையாவும் அவரின் குருட்டு அதிர்ஷ்டமே என நான் நம்பியதுண்டு. சிலரின் முக வசீகரம் எடுத்த காரியத்தில் வெற்றி அளிப்பதுண்டு என்பதை அவரது வாழ்க்கை நிரூபிப்பதாக நான் கருதியதுண்டு.

> வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. [ஆ-ர்]

அவருக்கு ஐந்து பெண் மக்கள். அத்தனை பேருக்கும் மாப்பிள்ளை தேடி, சீதனம் கொடுத்து கட்டிக்கொடுப்பதில் கூட அவரது இயல்பான வர்த்தக அணுகுமுறை கைகொடுத்ததென்னமோ உண்மைதான்.

காலச்சக்கர ஓட்டத்தில் வயது முதிர்ந்து அவர் படுத்த படுக்கையானார். கடந்த ஆண்டில் ஒரு சமயம் அவர் கடும்நோய்வாய்ப்பட நேர்ந்தது. மருமக்கள் ஆளுக்கொரு டாக்டர்களை அழைத்து வந்து சிகிச்சை செய்வித்தும் அவரது ‘‘தொய்வு நோய்’’ குணப்பட்டதாயில்லை.

தனது கடைசி வேளையை எதிர்பார்த்துப் படுக்கையில் உழன்ற வேளையில்கூட அவர் தனது மூத்த மருமகனிடம் கூறியது எனக்கு இன்றும் நினைவில் நிற்கிறது. ‘‘நீங்கள் கூட்டிவந்த டாக்டருக்கு ஐந்தைப் பத்தைக் கைக்குள் வைத்தாவது என்னுடைய இந்த அவஸ்தையை நிற்பாட்டுங்கோ!

லஞ்சம், கையூட்டு என்றெல்லாம் இன்று நாகரீகமாகக் குறிப்பிடப்படும் விடயம். அன்றைக்குக் கூட எம் மத்தியில் இருந்து வந்த பழக்கமொன்றே. ஆனால் அது ‘‘ஐந்தைப் பத்தைக் கைக்குள் பொத்தி’’ என்று சூசகமாகக் குறிப்பிடப்பட்டு வந்தது என்பதே உண்மை.

கையூட்டுப் பெறுவது குற்றமென்றால், கையூட்டு வழங்குவதும் குற்றமானதொன்றே. ஆனால், லஞ்ச ஊழல் குற்றச்சாட்டொன்றில் கையூட்டு வாங்குபவர் மாட்டிக்கொள்ள, சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி கையூட்டுக் கொடுப்பவர் தப்பித்துக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. வாழ்க்கையில் இவ்வாறு பல தடவைகள் பற்பல விடயங்களுக்கு ‘ஐந்தைப் பத்தை கைக்குள் பொத்தி’ காரியத்தைச் சாதித்துக்கொண்ட அவரால், மனிதர்கள் விரும்பும் அனைத்தையும் பணத்தால் நிறைவேற்றிக்கொள்ள இயலாதென்பதை உணரமுடியாது போய்விட்டது.

பாவம்; இதற்கும் மேல் ஒரு படி மேல்சென்று யமதர்மன் உயிரை எடுக்க வரும்வேளை ஐந்தைப் பத்தை அவனது கைக்குள் பொத்தி திருப்பி அனுப்பிவிடலாம் என எண்ணாது விட்டாரே, அதுவேபோதும்.

யார், எவர் முயன்ற போதிலும் கடைசியில் யமதர்மனின் பாசக்கயிற்றிலிருந்து அவரால் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. கடந்த வாரம் அவருடைய பேரன் என்னைத் தேடி வந்திருந்தான். மோட்டார் சைக்கிள் ஓட்ட அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய அவசியம் அவனுக்கு.

எழுத்துப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை இவ்விரண்டிலும். சித்திபெற்றாக வேண்டுமெனத் தெரிவித்தேன்.

‘‘சட்டதிட்டங்களில் கடும்போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள்; இரண்டு பரீட்சைகளிலுமே என்னால் சித்திபெறுவது இயலாத காரியம்’’ என்றான் ஈனஸ்வரத்தில். அப்படியானால் அவன் என்னிடம் எதிர்பார்ப்பதென்ன?

‘‘ஐந்தைப் பத்தைக் கொடுத்து - ஒரு மாதிரிச் சமாளித்து எனக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுத்தர இயலாதா?’’ என்றான் தயங்கித் தயங்கி. எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

‘‘இந்தக் காலத்தில் இது எதுவுமே இயலாது தம்பி! உரிய பரிச்சயம் இன்றி உங்களைப் போன்றோர் வாகனம் செலுத்த முனைவதால்தான் இன்றைக்கு இத்தனை வீதி விபத்துக்களும் உயிரிழப்புகளும் நேர்கின்றன. உங்களைப் போன்றோருக்காகத்தான் சட்டதிட்டங்களில் இத்தனை கண்டிப்பும் இறுக்கமும் காட்டவேண்டியிருக்கிறது. உரிய பயிற்சியெடுத்து, உரிய முறையில் பரீட்சைக்கு முகம் கொடுத்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதுதான் உனக்கும் நல்லது ஊருக்கும் நல்லது என்று ஏசி அனுப்பிவைத்தேன்.

பேரனின் கடந்த வார பிரசன்னமே, அவனது பாட்டனின் அந்தக்கால நினைவுகளை என் மனதில் மீண்டும் நினைவுபடுத்தக் காரணமாய் ஆனது.

இந்த இளம் வயதில் இவர்களின் சிந்தனை இவ்விதம் குறுக்கு வழியில் செல்லக் காரணமென்ன?

மரபணுத் தொடர்பு பரம்பரையாகத் தொடர்ந்து நிலைக்கும் என்பது விஞ்ஞான பூர்வ முடிவு என்கிறார்களே!

ஒருவேளை பாட்டனின் வழிவந்த இந்த பேரனின் விடயத்திலும் அது சரியாக இருக்கக் கூடுமோ?

**பொன்வேளன்**

---

# ஆவைப் பிரிந்த கன்றானோம்

பல் ஆ, நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்  
புன்தலை மன்றம் நோக்கி, மாலை  
மடக்கண் குழவி அணவந்து அன்ன,  
நோயேம் ஆகுதல் அறிந்தும்  
சேயர், தோழி! சேய் நாட்டோரே.

இது கருவூர்க் கதப்பிள்ளை என்னும் புலவர் இயற்றிய பாட்டாகும். தனக்கு ஆறுதல் கூறிய தோழிக்குத் தலைவி விடை உரைப்பதாக அமைந்த பாடல் இது. குறுந்தொகையில் வரும் முல்லைத் திணைப் பாடல்களில் இதுவுமொன்று. புன்தலை - வெறிச்சோடிய இடம். மடம் - அழகு. குழவி - இளங்கன்று. அணவருதல் - அண்ணாந்து நோக்குதல் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்குத் தாயைப் பிரிந்து தவிக்கும் கன்று உவமானமாகக் காட்டப்பட்டுள்ளது.

தலைவன் பொருள் தேடப் போய் விட்டான். அவன் வருவதாகக் குறித்த நாள் கடந்து விட்டது. வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்த தலைவி ஏமாற்றம் அடைந்தாள்; தலைவன் இன்னும் வரவில்லையே என்று ஏங்கினாள்; பெருமூச்சு விட்டுப் பித்தேறியவள் போல் வாடியிருந்தாள்.

தலைவியின் இத்துயரத்தைக் கண்ட தோழி அவளுக்கு ஆறுதல் மொழி புகன்றாள். தலைவன் சொன்னசொல் தவறமாட்டான். போன காரியம் முடிந்தவுடன் விரைவில் புறப்பட்டு வந்து விடுவான். வீணாக ஏன் வேதனைப்படுகின்றாய். நெஞ்சத்தை நெகிழ விடாமல், துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிரு என்று கூறினாள். அப்பொழுது தலைவி, அத்தோழியிடம் தன் உள்ளத்துயரை அப்படியே எடுத்துரைத்தாள்.

‘‘தோழியே! தலைவன் பிரிவால் நாம் பொறுக்கமுடியாத துக்கம் அடைந்திருக்கிறோம். கொட்டகையில் இருந்த பல பசுக்களும் மேய்ச்சலுக்காக நீண்டதூரம் சென்று விட்டால் அந்தக் கொட்டகை பார்ப்பதற்கு வெறிச்சென்றிருக்கும். கன்றுகள் மட்டும் அக் கொட்டகையில் இருந்தாலும் பயன் இல்லை. தாய்ப் பசுக்களைப் பிரிந்த அக்கன்றுகள் சோர்ந்து கிடக்கும். துள்ளி விளையாடாமல் தாயை எண்ணிக்கொண்டு தயங்கி நிற்கும்.



மாலைநேரம் நெருங்க நெருங்க அக் கன்றுகளின் வருத்தமும் வளரும். இன்னும் அன்னைப் பசுக்கள் வரவில்லையே எளறு அண்ணாந்து அண்ணாந்து பார்த்து வருந்தும். இதைப் போலலே நாமும் தலைவன் பிரிவை எண்ணி வருந்துகின்றோம். அவர் வரவை எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றோம்.

நாம் இவ்வாறு - தாயைப் பிரிந்த கன்றுபோல் வருந்திக் கிடப்போம் என்பது அவருக்குத் தெரியாதது அன்று. தெரிந்தும் அவர் இன்னும் தொலைவில் உள்ள நாட்டில் வாழ்கின்றார். ஆதலால் நாம் வருந்தாமல் என்னதான் செய்யமுடியும்? என்று தலைவி கூறினாள். இந்த நிகழ்ச்சியை எடுத்து விளக்கும் வகையில் இயற்றப்பட்டதே இப்பாடலாகும்.

இலக்கியப் பூங்கா

**- காப்பியன்**

# ...அந்திம காலத்தைப் பயனுள்ளதாக கழிக்க விரும்பும் டெனிஸ் முதியவர்கள்...

டென்மார்க்கின் 'வயன்' நகரம் அழகு நிறைந்தது. இங்குதான் ஓர் அழகிய சிறிய நூதனசாலையும் உள்ளது. இந்த நகரின் ஒதுக்குப்புறமான பகுதி தோட்டங்களும் வயல்களும் நிறைந்ததாக விளங்குகின்றது. நான்குபுறமும் சிறிய செடிகளால் வேலியிடப்பட்ட தோட்டம் ஒன்றினுள் சென்றோம். அங்கு டெனிஸ்கார முதியவர் ஒருவர் மண்வெட்டியினால் நிலத்தைக் கிளறிக் கொண்டிருந்தார். அதன் அருகே தூவல்முறை நீர்ப்பாசனக் கருவி மூலம் தோட்டத்திற்கு நீர்பாய்ச்சப்பட்டுக் கொண்டிருந்தது. எம்மைக் கண்டவுடன் மண்வெட்டியை வைத்துவிட்டு, எம்மை டெனிஸ்மொழியில் வரவேற்றார்.

நாம் எம்மை அறிமுகப்படுத்தினோம். மகிழ்ச்சியோடு எம்மை அழைத்துக்கொண்டு தோட்டத்தின் நடுவே அமைந்த சிறிய வீட்டிற்கு கூட்டிச் சென்றார். அங்கே ஆசனங்களைப்போட்டு அமரும்படி கூறினார்.

எமது ஊரில் தோட்டங்களுக்கு காவலாக குடிசை அமைப்பது வழமை. ஆனால் இந்த வீடு அவ்வாறில்லாமல் அழகிய கலைநயம் பொருந்தியதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அந்த


மகிழ்ச்சியுடன் காணப்படும் காரின் - பூறி தம்பதியர்

வயோதிபர் தன்னை அறிமுகப்படுத்தினார். தனது பெயர் கிறிஸ்ரியன் இயர்ப்பாசன் என்றும் வயது 76 எனவும் கூறினார். வயதைக் கேட்டதும் ஆச்சரியப்படவைத்தது. மிகவும் இளமையாகக் காணப்பட்டார். அவரது தோட்டத்தில் தக்காளி, கீரை, உருளைக்கிழங்கு, கோவா, அவரை, கறிமிளகாய் போன்ற செடிகள் காய்த்துக் குலுங்கின. அத்துடன், ஸ்ரோபரி பழத்தோட்டமும் தனியாகக் காணப்பட்டது.

இவ்வளவு வயதாகிவிட்டபோதும் அவர் தனது பிள்ளைகளுக்கோ, உறவினர்களுக்கோ தொந்தரவு கொடுக்காமல் சுயமாக வாழ்ந்துவருவது ஆச்சரியம்தான்.

வீணாகப் பொழுதைக் கழிக்காமல் தோட்டம் செய்து வாழ்வது தனக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருவதாக அந்தப் பெரியவர் பெருமையாகக் கூறினார்.


பறவைகளுக்காக டெனிஸ் மக்களால் அமைக்கப்பட்டிருக்கும் கூடுகள்

அந்தத் தோட்டக் காணியினுள் நின்ற உயர்ந்த மரம் ஒன்றில் சிறிய பலகையினாலான கூடுகள் வைக்கப்பட்டிருந்தன. அவை ஏன் வைக்கப்பட்டுள்ளன என அந்தப் பெரியவரிடம் கேட்டபோது, அவர் கூறிய பதில் எம்மை ஆச்சரியப்படவைத்தது. இவ்வாறான கூடுகளை இங்குமட்டுமல்ல, டென்மார்க்கின் அநேகமான இடங்களில் காணமுடியும் என்று பதில் அளித்தார்.

டென்மார்க் மக்கள் உயிரினங்களில் அன்பு மிகுந்தவர்கள். அவ்வாறே சிறிய பறவைகள், வெயில், மழை போன்றவற்றில் இருந்து தப்பி வாழ்வதற்காக இவ்வாறான கூடுகளை அமைத்துவைத்துள்ளனர். இதனால் அவர்கள் மனநிறைவடைகின்றனர் என அப்பெரியவர் விவரித்தார். அவரின் பதிலினால் பரவசமடைந்தவர்களாய் நாம் அவரிடமிருந்து விடைபெற்றோம். தமது தோட்டத்தில் இருந்து சில பழங்களை எமக்குப் பறித்துத்தந்து வழியனுப்பிவைத்தார்.

பின்னர் நாம் மற்றொரு தோட்டத்திற்கு சென்றோம். அங்கு கணவன், மனைவி என வயது முதிர்ந்த தம்பதியரான முதியவர்கள் இருந்தனர். அவர்களும் தமது கடைசிக் காலத்தைக் கழிப்பதற்காக இங்கு வந்து வீடமைத்து வாழ்கின்றனர். தமக்குத் தேவையான மரக்கறி வகைகளையும், பழவகைகளையும் தாமே உற்பத்திசெய்து வாழ்க்கையை நிறைவுடன் ஓட்டுகின்றனர். எம்மை அன்புடன் வரவேற்ற அந்தத் தம்பதிகள், விருந்தினர் அமர்வதற்கு விசேடமாக அமைக்கப்பட்டிருந்த குடையின் கீழ் எம்மை அமர்த்தி எமக்கு குளிர்பானம் தந்து தாமும் எம்முடன் அமர்ந்து குளிர்பானத்தைப் பருகியவாறே தம்மை எமக்கு அறிமுகப்படுத்தினர்.

அவரது பெயர் காறின் வயது 58. அவரது மனைவி பூறி வயது65. இவர்களுக்கு இரண்டு பிளீளைகள். இருவரும் திருமணம் முடித்துச் சென்றுவிட்டனர். தற்போது தமது இறுதிக்காலத்தைக் இங்கு கழிக்கின்றனர்.

பின்னர், தோட்டத்தைச் சுற்றிக்காட்டினர். தோட்டத்தில் பல்வேறு வகையான மரக்கறி, பழவகைகள் எனக் காய்த்துக் குலுங்கின. அத்துடன், சிறிய அழகிய குளம் ஒன்றையும் அமைத்திருந்தனர். அந்தக் குளத்தினுள் அழகிய மீன்கள் வலம்வந்தன. இவற்றையெல்லாம் பார்த்தபோது, வயோதிப காலத்தில் மனதுக்கு நின்மதிதரக்கூடிய இடம் இதுதான் என்பது சொல்லாமலே புரிந்துகொண்டது. இந்தத் தம்பதியினரிடம் கேட்டுவிட்டு இங்கேயே தங்கிவிடலாம்போல் இருந்தது.

தம்மைப்போல் எல்லோரும் செயற்பட்டால் நாட்டுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நன்மையாக இருக்கும் என அந்தத் தம்பதிகள் பெருமையுடன் கூறினர்.

குளிர்காலத்தில் என்ன செய்வீர்கள் என அவர்களிடம் கேட்டபோது, தற்போது உற்பத்திசெய்யும் பொருள்களைச் சேமித்து வைத்துப் பயன்படுத்துவோம். அத்துடன் சூடேற்றும் கருவிகளையும் வீட்டினுள் பொருத்தியுள்ளோம் என்று கூறிய அவர்கள், மிருகங்களுக்கு வேண்டிய புற்களையும் பொதிசெய்து வைப்பார்கள் எனக் கூறினர்.

பனிகொட்டும் காலத்தில் தாவரங்கள் எதுவும் டென்மார்க்கில் இருப்பதில்லை. எல்லா இடங்களும் பனிக்கட்டிகள் மூடிக்காணப்படும். போக்குவரத்துச் செய்வதற்கும் பனிக்கட்டிகளை வழிக்கவேண்டிய நிலை உள்ளது. இதனை டென்மார்க் மாநகரசபை பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தும்.

டென்மார்க்கில் கடந்த ஒக்ரோபர் மாதக் கடைசியில் நேரம் ஒரு மணித்தியாலங்களால் குறைக்கப்பட்டுள்ளது. காரணம் தற்போது பொழுது தாமதமாகவே விடிகின்றது. இதனால், இலங்கைக்கும் டென்மார்க்கிற்கும் இடையில் உள்ளநேரவேறுபாடு 4மணியில் இருந்து 5மணி நேரமாக மாற்றமடைந்துள்ளது. இனி அடுத்த ஆண்டு மார்ச் மாதக் கடைசியிலேயே நேரம் ஒரு மணிநேரத்தால் அதிகரிக்கப்படும். அப்போது கோடைகாலம் ஆரம்பிக்கும்.

எனது பயணத்தை நிறைவு செய்யும் நாளும் வந்தது. டென்மார்க்கை விட்டு வெளியேற மனமில்லாமலே அன்று காலை 5மணிக்கு அனைவரிடமும் விடைபெற்று 'பிலூண்ட்' விமான நிலையத்தை நோக்கி உறவினர்களுடன் புறப்பட்டேன். இவ்வளவு நாளும் மகிழ்ச்சியாகவே பயணங்கள் அமைந்தன. ஆனால், டென்மார்க்கை விட்டுச் செல்லும் பயணம் என்பதால் மனதுக்கு கஷ்டமாகவே இருந்தது. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு விமான நிலையத்தை அடைந்தேன். விமான நிலையத்தில் கடமைகளை முடித்துக்கொண்டு விமானத்தில் ஏறுவதற்குச் சென்றேன். என்னை வழியனுப்ப வந்தவர்கள் கையசைத்தவாறு நிற்க, அவர்களை விட்டுப்பிரிய மனமின்றி கண்களில் கண்ணீருடன் எனது கால்கள் விமானத்தை நோக்கிநகர்ந்தன.

விமானம் காலை 6.30 மணிக்கு புறப்பட்டது. அது ஒரு மணிநேரப் பயணம்தான். டென்மார்க் கொஞ்சம் கொஞ்சமாக கண்களில் மறைய ஆரம்பித்தது. 7.30 மணியளவில் ஜேர்மனியில் உள்ள 'பிராங்போர்ட்' (Frank furt) என்ற விமான நிலையத்திலே விமானம் தரையிறங்கியது. மிகவும் பிரமாண்டமான விமான நிலையம் அது. அநேகமான நாடுகளில் இருந்து விமானங்கள் இங்கு வந்துசெல்வது வழமை.



தனது தோட்டத்தில் நிற்கும் கிறிஸ்ரியன் இயர்ப்பாசன்

3மணிநேரம் 'பிராங்போர்ட்' விமான நிலையத்தில் தங்கிவிட்டு 'கட்டார்' (Qatar) செல்லும் விமானத்தை ஒருவாறு தேடிப்பிடித்து ஏறினேன். முற்பகல் 10.55 மணிக்கு விமானம் கட்டார் நோக்கிப் புறப்பட்டது. 6 மணிநேர பயணத்தின் பின்னர் கட்டாரில் உள்ள விமான நிலையத்தில் தரையிறங்கினேன். கட்டாரில் நான்கு மணிநேரம் தங்கியிருக்க வேண்டிஏற்பட்டது. இதனால் எமக்கு இரவு உணவு கட்டார் விமான நிலையத்தில் வழங்கப்பட்டது. கட்டார் நேரப்படி அதிகாலை ஒரு மணிக்கு கொழும்புக்கான விமானம் புறப்படத்தயாரானது. உரிய அறிவித்தலின்படி விமானத்தில் ஏறிக்கொண்டோம். எனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்துகொண்டேன்.

மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த கட்டார் விமான நிலையத்தில் இருந்து உரிய நேரத்திற்கு விமானம் புறப்பட்டது. விமானம் புறப்பட்டு சென்றுகொண்டிருக்கும் பாதையை விமானத்தில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளில் காண்பித்தனர். அவற்றைப் பார்த்தவாறே பயணம் செய்து கொண்டிருந்தோம். இரண்டு மணித்தியாலங்கள் தாண்டியிருக்கும் திடீரென விமானம் சென்ற பாதை வழியே கட்டார் நோக்கித் திரும்பிச்சென்றது. என்ன, ஏது என்று புரியாமல் அனைவருமே தவிக்க, மீண்டும் விமானம் கட்டாரில்

டென்மார்க்கிலிருந்து
**பகீர்**

தரையிறங்கியது. பின்னர்தான் அறிந்தோம் பயணிகளில் ஒருவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு ஆபத்து நிலையில் இருந்தார் என்பதை. அவருக்கு உடினடியாக அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆயினும், பயணிகள் எவருமே விமானத்தைவிட்டு


ஜேர்மனியிலுள்ள பிராங்போர்ட் விமான நிலையம்

இறங்க அனுமதிக்கப்படவில்லை. சிகிச்சையின் பின்னர் ஒரு மணிநேரத்தில் மீண்டும் கொழும்பை நோக்கி விமானம் புறப்பட்டது. தாமதத்திற்கு விமான நிறுவனம் மன்னிப்புக்கோரியது.

கடவுளை வேண்டிக்கொண்டே பயணம் தொடர்ந்தது. குறிப்பிட்ட நேரத்தில் இருந்து மூன்று மணிநேர தாமதத்தின் பின்னர் இலங்கை நேரம் முற்பகல் 10.30 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தேன்.

*(முற்றும்)*

# ஒன்றுபட்டு உலப்புடன் வாழ்வோம்!

அடர்ந்த மரங்கள் நிறைந்த அழகிய காடு அது. அங்குள்ள மிருகங்களின் ராஜாவான சிங்கம் அங்கு வசிப்பனவற்றின் குறைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அவற்றை நிவர்த்தி செய்யும். அக்காட்டில் வேடர்களின் நடமாட்டத்தால் விலங்குகள் குறைந்துகொண்டே வந்தன. அன்று அப்படித்தான் வேடன் ஒருவன், தனது உயிர் நண்பனான யானையை வேட் டையாடிச் சென்று விட்டான்.

இதனால் மனம் வருந்திய சிங்கம் வேடர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த வேண் டும் என முடிவெடுத்தது. அனைத்து மிருகங்களையும் பறவைகளையும் ஊர்வனவற்றையும் கூட்டி கூட்டம் நடத்தியது.

அனைவரும் வேடர்களின் வருகையால் துன்புற்றிருப்பதை அவதானித்த சிங்கம் ''வேடர் கள் இங்கு வராமல் இருக்க நாம் எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்படுவோம். உங்கள் அனைவரதும் ஆதரவு தேவை என அறிவித்தது''

எல்லா மிருகங்களும் ஒத்துழைப்பதாக உறுதி கூறின.

அன்றிலிருந்து நரியாருக்கு காட்டில் வேடங்களின் நடமாட்டத்தைக் கவனிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அன்று இரண்டு வேடர்கள் வேட்டையாடும் எண்ணத்துடன் காட்டுக்கு வந்தார்கள். இதனை நரியார் சாதுரியமாக அனைவருக்கும் அறிவித்தார்.

எல்லா மிருகங்களும் வேடர்களை எதிர்க்கத் தயாராகின.

ஏதாவது பெரியமிருகத்தை வேட்டையாட வேண்டும் என்ற எண்ணத்துடன் வேடர்கள் பெரிய பொறிக் கிடங்கொன்றை வெட்டினர். அதன் மேல் சாதுரியமாக இலை, தளை, சருகு களை இட்டு மூடி ஏதாவது விலங்கு வந்து விழுந்து கிடக்கட்டும் என்று பேசிக்கொண்டு அப்பால் சென்றனர்.

இதனை அவதானித்த சிங்கம் 'யானையாரே பெரிய மரக்கிளையொன்றை முறித்து பொறிக் கிடங்கினுள் போடும்' என்று சொன்னது. யானை அவ்வாறே செய்தது. சிறிது நேரம் காடெல்லாம் சுற்றிவிட்டு வேடர் இருவரும் பொறி வைத்த கிடங்கை நோக்கி வந்தனர்.

அதனைக் கவனித்த எறும்புகள், வேடனின் காலைக் கடித்தன. யானை பிளிறிக்கொண்டு ஓடிவந்தது. வேடர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடினர். இவ்வாறு தினமும் நடந்தது.

அன்றிலிருந்து வேடர்களின் தொல்லை குறைய ஆரம்பித்தது. மிருகங்கள் சந்தோசமாக வாழ்ந்தன.

*'ஒற்றுமையே பலம் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'*

- கவிதா

## வெற்றியின் வழிகாட்டி

* அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே.
* இரக்கம்காட்டு ஆனால் ஏமாந்து போகாதே.
* பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே.
* கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே.
* சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே.
* வீரனாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே.
* சுறுசுறுப்பாக இரு ஆனால் பதட்டப்படாதே.
* தர்மஞ்செய் ஆனால் ஆண்டியாகி விடாதே.
* பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே.
* உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறவாதே.

**த.கஜேந்திரன்**
தரம்-7பி, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

## கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!



தம்பி, தங்கைகளே!
மேலே உள்ள படங்களுக்கு இடையே குறைந்த பட்சம் 7வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.




## உங்களின் கைவண்ணம்



ர.மயூரி,
தரம் - 7எவ்,
யா/இந்து மகளிர் கல்லூரி.

## தெரிந்து கொள்ளுங்கள்

* உலகிலேயே முதன்முதலில் சுவீடனில் தான் தீப்பெட்டியைத் தயாரித்தார்கள்.
* தையல் இயந்திரத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர் பாத்லேமி நிம்போனியர் ஆவார்.
* இண்டர்போல் (Inter pol) எனப்படும் சர்வதேச குற்றவியல் பொலிஸ் அமைப்பு 'பரிஸ்' (Paris) நகரில் உள்ளது.
* கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறிஸ்மஸ் மரத்தை வைத்து அலங்கரித்தவர் பிரின்ஸ் ஆல்பெர்ட்டே என்பவராவார்.
* ஆறுகள் இல்லாத நாடு சவூதி அரேபியா ஆகும்.
* குருதியமுக்கமானியை முதன்முதலில் கண்டு பிடித்தவர் வில்லியம் ஹாவே.
* எரிமலையே இல்லாத கண்டம். ஆஸ்திரேலிய ஆகும்.

ஜீவன்
தரம்:- 9சி, யாழ்/சென்ஜோன்ஸ் கல்லூரி.

## வர்ணம் தீட்டுவோம்!

கடந்த ஞாயிறன்று வெளியான சூரியகாந்தியில் 'வர்ணம் தீட்டுவோம்' போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மூவரின் பெயர்கள் பிரசுரமாகி இருந்தன. அவை வர்ணம் தீட்டுவோம் - போட்டி இலக்கம் 5 இல் தெரிவாகியவர்களின் பெயர்கள் ஆகும். தவறுதலாக போட்டி இலக்கம் - 6 இல் தெரிவானோர் என்று அச்சாகி உள்ளது. அதைத் திருத்தி வாசிக்கவும்.

(ஆ-ர்)

## செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்...

''அங்கை பாருங்கோ... செல்லையாத் தாத்தா வந்திட் டார்'' என்று சத்தமிட்டான் பிரியன். சிறுவர்கள் விளையாட்டை நிறுத்தி விட்டு, புளியடிக்கு ஓடி வந்தனர். தாத்தா புளியமரவேரில் அமர்ந்திருந்து சிறுவர்களை அவதானித்துக் கொண்டி ருந்தார்.

''ஏன் தாத்தா வழக்கமான பாதையை விட்டு வேறை வழியாலை வந்தியள்? அதுதான் எங்களுக்கு நீங்கள் வந்தது தெரியேல்லை'' என்றாள் பிரியங்கா.

''உங்கடை நம்பிக்கை எதிர்பார்ப்பு எல்லாம் வீண் போச்சுது. அப்பிடித்தானே?'' என்றார் செல்லையாத் தாத்தா.

''ஓம்...'' என்றனர் சிறுவர்கள்.

''ஆனால், நம்பிக்கையை நாங்கள் விடக்கூடாது ஏனென் டால் நம்பிக்கையாலேதான் நாங்கள் வாழ்கிறம்'' என்றார் தாத்தா.

''நாங்கள் உணவை உண்பதாலும், நோய்கள், விபத்துக்களிலிருந்து எங்களைப் பாதுகாத்துக்கொள்வதாலும், வேலை செய்வதாலுமல்லோ வாழ்கிறம்'' என்றான் இனியன்.

''நம்பிக்கை என்பது உருவமும் செயற்பாடும் இல்லாதது. அதை வைத்துக் கொண்டு நாங்கள் எப்பிடி வாழலாம்?'' என்று வினவினான் அகிலங்கன்.

''நீங்கள் இப்போது உயிருடன் இருக்கிறீர்கள். நாளைக்கு இருப்பீங்களோ?'' ''சொல்லமுடியாது'' என்றனர் சிறுவர்கள்.

''அப்படியானால் நாளைக்கு இருப்பது தெரியாமல் நீங்கள் எல்லாத் திட்டங்களையும் போட்டு விட்டீர்கள். இதெல்லாம் வீண்தானே!''

''இல்லை... நாங்கள் நாளைக்கும் இருப்பம்'' என்றாள் சாந்தி.

''எப்பிடிச் சொல்லுகிறீர்?''

''ஒரு நம்பிக்கைதான்! என்றாள் சாந்தி. ''அப்பிடியெண்டால் வாழ்க்கையிலை நம்பிக்கை முக்கியம் என்று விளங்குதல்லே!''

''ஓம் .. ஓம் ... '' என்றனர் சிறுவர்கள்.

''நம்பிக்கை என்பது எங்களுடைய மூன்றாவது கை. இரண்டு கைகளால் முடியாவிட்டால் மூன்றாவது கை முடியும் என்பதைச்



சொல்லும். அரிஸ்டோட்டில் என்பவர் கிரேக்க நாட்டின் ஒரு தத்துவஞானி. உயிரியலின் தந்தை என்றும், அரசியல், பொருளாதாரம் பற்றிய கருத்துக்களை முன்வைத்த மூலவர் என்றும் சிறப்பிக்கப் படுபவர். அவர் 'நம்பிக்கை என்பது விழித்திருக்கும் மனிதனின் கனவு' என்று சொல்கிறார். விழிப்பு நிலையில் காணும் கனவில் இலச்கு இருக்கும்; இலட்சியம் இருக்கும். அதை அடை வதற்கான வழிகள், மாற்றுவழிகள் இருக்கும். அவ்வாறான கனவு கண்டவர்களே விஞ்ஞானிகளும் அரசியல், சமூகத் தலைவர்களும். அவர்களது கனவுகளே கண்டுபிடிப்புக்களையும் முன்னேற்றங் களையும் தந்தன'' என்று தாத்தா கூறினார்.

''நம்பிக்கையிலை பலவகை இருக்குதல்லே..?'' என்று வினவினான் அகிலங்கன்.

''ஓம்... தன்னம்பிக்கை, தெய்வநம்பிக்கை, இலட்சிய நம் பிக்கை, மூட நம்பிக்கை என நம்பிக்கை களைப் பலவாறாகப் பகுக்கலாம். தன்னம்பிக்கை என் பதுதான் இங்கு முக்கியமானது. என்னால் எதையும் சாதிக்கமுடியும் என எங்களில், எங்களது செயல்களில் நம்பிக்கை கொள்ளவேணும். அப்பிடி நம்பிக்கை உள் ளவர்கள் தான் வரலாற்றில் சாதனையாளர்களாக விளங் கியவர்கள். விஞ்ஞானிகள் எல்லோரும் தம்மை, தமது செயல்களை, தமது மூளையை நம்பியதால் தான் அவர்களால் கண்டு பிடிப்புக் களைச் செய்ய முடிந்தது'

''மூடநம்பிக்கைகள் கூடாதல்லே...'' என்றாள் பிரியங்கா.

''மூட நம்பிக்கைகள் கூடாதுதான். இல்லாத சிலவற்றை உள்ளது என நம்பிக்கொண்டு பயப்படுவதும், அதைப்போக்கு வதற்காகப் பணத்தைச் செலவழிப்பதும் மூடநம்பிக்கைதான். இப்பிடி மூடநம்பிக்கை உள்ளவர்களாலை பல பேர் காசு உழைத்துக் கொண்டிருக்கினை. ஆனால், இந்த மூடநம்பிக்கைகள் சிலவற்றினாலை மனநோய்களை, மன இறுக்கங்களைக் குறைக்க லாம் என்று உளவியலாளர்கள் சொல்லுகிறார்கள்''

''அப்ப... கடவுள் நம்பிக்கை...?'' என்று வினவினான் பிரியன்.

''கடவுள் என்பது விஞ்ஞானத்தால் அறியப்படாத பொருள். அறியப்படாதது எதனையும் விஞ்ஞானம் ஏற்றுக் கொள்வதில்லை. விஞ்ஞானம் கடவுள் இல்லையென்றே கூறும். ஆனால், கடவுள் என்பது பாரம்பரியமாக, சந்ததி சந்ததியாக எம்மால் பின்பற்றபட்டு வருகின்ற மரபுகள், விழுமியங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் தத்துவங்கள், கதைகள் என்பன வழியாக வருகின்ற நம்பிக்கை. அது எங்கடை இரத்தத்தோடையும் உணர்வோடையும் ஊறிய விசயம். நாங்கள் கடவுளை நம்பி அவரை நினைத்து எங்களது வாழ்க்கையை அமைக்கிறம். பிழைகளை, குற்றங்களைச் செய்தால் கடவுள் தண்டிப்பார் எனப் பயப்படுகிறோம். அதுவே எங்களை மனிதத் தன்மையுள்ள, ஒரு ஒழுங்கான மனிதர்களாக வாழ வைக்கிறது. ஆனால், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் வாழ்கிறார்கள்தான். அவர்களிடமும் நல்ல மனிதப் பண்புகள் இருக்கின்றனதான்'' என்றார் தாத்தா.

''நாங்கள் பிறர் நம்ப நடப்போம். பிறரை நம்பி நடக்காமல், எங்கடை தன்னம்பிக்கையிலை நடப்பம். என்ன தாத்தா?'' என்றான் இனியன்.

பிறரை நம்ப வேணும். ஆனால் பிறரைப்போல நடக்க நினைத்தால் 'அன்ன நடை நடந்து தன்நடையும் கெட்ட காகம் போல' ஆகிவிடுவம்'' என்றுசொல்லியபடி தாத்தா எழுந்தார்.

சிறுவர்கள் சிரித்தவாறு தாத்தாவின் பின் சென்றனர்.

*(தாத்தா மீண்டும் வருவார்)*

**பாபு அண்ணா.**


# வாய்ப்புற்றுநோயை வலிய வரவழைக்கும் பழக்க வழக்கங்கள்...

வாய்ப்புற்றுநோய் மூலம் பாதிப்படைவோர் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவது தற்சமயம் கண்டறியப் பட்டுள்ளது. வாய்ப்புற்றுநோய் மற்றும் தொண்டைப் புற்றுநோய் கூடுதலாக 50வயது கடந்தவர்களுக்கே ஏற்படுகின்றது. கூடுதலாக ஆண்களையே பாதிக்கின்றது. கூடுதலானோர் நோய்கண்டு முற்றிய நிலையிலேயே சிகிச்சைக்காக வைத்திய நிலையங்களை நாடுகின்றனர்.

*வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்கள் இந்நோய் பல* வகையானவை என இனம் காணப்பட்டுள்ளது. இக்காரணிகள் பலவும் ஒன்று சேர்ந்து செயற்படுவதனால் வாய்ப்புற்று நோய் ஏற்படுகின்றது. அவையாவன சிகரட் பிடித்தல், சுருட்டுப் புகைத்தல், புகைக்கும் போது வெளிவரும் புகையை அருகில் இருப்போர் உள்வாங்குதல், புகையிலையை வாய்க்குள் மென்று உண்ணுதல், மூக்குப்பொடி பாவனை ஆகிய காரணிகள் வாய்ப்புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றுடன் சேர்த்து மென்று சாப்பிடுவோருக்கு வாய்ப்புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.

சாராயம், கசிப்பு, புளித்த கள்ளு ஆகியவற்றைப் பருகுவதனால் ஏற்படும் எரிவுத்தாக்கம் ஆகியவற்றால் வாய்ப்புற்று நோய் ஏற்படும்.

வாய்ச்சுகாதாரம் இல்லாது இருத்தல் மேலும் வாயில் கிருமித்தாக்கம் ஏற்படுதல். உதாரணமாக மேகநோய், வாய் அழுகல் இவற்றின்



தாக்கத்தினால் வாய்ப்புற்றுநோய் ஏற்படும். உடையும் பற்களில் உள்ள கூரிய பாகங்கள், சூடான, உறைப்பான உணவுகள் உட்கொள்வது மற்றது ஒழுங்காக கட்டப்படாது உள்ள செயற்கைப் பற்களை அணிதல் ஆகியவை வாய் உள்ளக சதைப்பகுதியைத் தொடர்ந்து உறுத்துவதால் வாய்ப்புற்றுநோய் ஏற்படக் காரணமாகின்றது.

சூரியனில் தோன்றும் கதிர்கள், மற்றும் ஓசோன் படலத்தின் உடைவால் பூமியை வந்தடையும் பாதகமான சூரியக் கதிர்கள் இது குறிப்பாக வெயிலில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு உதட்டுப் புற்றுநோயை ஏற்படுத்தலாம்.

சத்துள்ள உணவுப் பற்றாக்குறையும் வாய்ப்புற்று நோய் ஏற்படக் காரணமாகின்றது. உதாரணமாக விட்டமின் 'ஏ' குறைபாடு வாய்ப்புற்று நோய் ஏற்படக் காரணியாகின்றது. வாயின் உட்புற மேலணியில் காணப்படும் அகற்ற முடியாத வெண்ணிற அல்லது செந்நிற தழும்பு கவனிக்கப்படாது விடினும் அவை வாய்ப்புற்று நோயாக மாற்றமடைய இடமுண்டு.

**வாய்ப்புற்று நோய்க்கான அறிகுறிகள்**

* வாய் உள்ளக மேனி, நாக்கு மற்றும் உதடு என்பவற்றில் மாறாது இருக்கும் புண்கள்.
* சிவந்த அல்லது வெண்ணிறமான அகற்ற முடியாத படலம் தெரிதல்.
* உணவு அரைத்தல் அல்லது விழுங்குதலில் கடினமாக இருத்தல்.
* வாயில் அல்லது கன்னத்தில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படல்.
* கதைப்பதில் கஷ்ரம் இருந்தல்.
* வாயில் இருந்து இரத்தம் வடிதல் வாய்ப்பகுதியில் உணர்ச்சி இன்மை.

**வாய்ப் புற்றுநோய் தடுப்பு வகைகள்**

* முன் கூறப்பட்ட பழக்க வழக்கங்களைக் கைவிடுதல் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை பாவனையைக் கைவிடுதல்.
* புகைப்பதைத் தவிர்த்தல், மூக்குபொடி போடுவதைத் தவிர்த்தல் வாய்ச் சுகாதாரத்தை பேணுதல், மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல்.
* வாய்ப்புற்றுநோய் முன்னிலை அல்லது மேற்கூறப்பட்ட எச்சரிக்கை அறிகுறிகள் ஏற்படின் உடனடியாக வைத்தியரை அணுகி ஆலோசனை பெறுதல். பல்லில் ஏதாவது மாற்றம் ஏற்படின் உடன் பல் வைத்தியரை அணுகி சிசிச்சை பெறுதல். பொருந்தாத கட்டிய பல்லை அணியாது தவிர்த்தல்.
* பச்சை நிற இலைவகைகள், மஞ்சள் நிற பழவகைகள் கூடுதலாக உட்கொள்ளுதல்.

மேற்கூறியவாறு பாதகமான காரணிகள் மற்றும் எச்சரிக்கைக் குறிப்புகளை அறிவதன்மூலம் நீங்கள் உங்கள் பழக்க வழக்கங்களை மாற்றி, பாதக காரணிகளைத் தவிர்ப்பதன் மூலம் சந்தேகத்துக்கு இடமாக வாயில் ஏற்படும் மாற்றங்களை உடன் பல்வைத்தியரிடம் காட்டுவதனாலும் வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதனை தவிர்க்க முடியும் அல்லது ஆரம்ப நிலையில் கண்டறிய முடியும். இதனால், உங்களுக்குக் குணமடையும் நோக்கிலான சிகிச்சையை வழங்க முடியும்.

அ.அருணாசலம்

சுகநலம்

# மரவள்ளியும் இஞ்சியும் தரும் மரண பயம் ஏன்?

இஞ்சிக் கிழங்கையும் மரவள்ளிக்கிழங்கையும் சேர்த்து உண்ணலாமா என்று ஒரு கேள்வியை 08.11.2005 உதயன் பத்திரிகையில் வாசகர் ஒருவர் கேட்டிருந்தார். இஞ்சியும் மரவள்ளிக்கிழங்கும் ஒரேநேரத்தில் சாப்பாட்டில் சேர்க்கக்கூடாது என்ற நம்பிக்கை வெகுகாலமாக எமது மக்களிடையே உள்ளது. இரண்டையும் சேர்த்துச் சாப்பிட்டால் நச்சுவிளைவு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததை அனுபவத்தில் கண்டவர்களும் உண்டு. அதேவேளை, இஞ்சிக் கிழங்கையும் மரவள்ளிக்கிழங்கையும் சேர்த்துச் சாப்பிட்டு எவ்வித பிரச்சினையும் ஏற்படாமல் இருப்பவர்களும் பலர். அவர்கள் இது ஒரு மூடநம்பிக்கை என்று கேலிசெய்வதையும் காணலாம்.

இதுபற்றிப் பல ஆய்வுகள் விஞ்ஞான ரீதியில் நடைபெற்றுள்ளன. அதன் முடிவுகளின்படி பின்வரும் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

மரவள்ளிக்கிழங்கிலும் அதன் குருத்திலைகளிலும் (முக்கியமாக வெட்டப்பட்டுப் பழுதடைந்த அல்லது நாள்பட்ட கிழங்குகளில்) Cyanogenic Glycoside (CG), Linase என்னும் நொதியமும் உண்டு. இதில் சயனோஜனிக் கிளைக்கேசைட்டு இரண்டு வடிவங்களில் உள்ளது.

1. Autolysable Form ($CG_1$), அதாவது தானாகவே அழிவடையும் தன்மை. அதாவது, இந்த வகைச் சயனேஜனிக்கிளைக்கோசைட்டு லினேசு என்னும் நொதியம் உள்ள இடத்து தானாகவே அழிவடைந்து ஐதரோசயனிக்கமிலம் (HCN) அல்லது புரூசிக் கமிலமாக (Prussic Acid) மாறிவிடுகின்றது. இது நச்சுத் தன்மையுள்ளது.

சயனேஜனிக் கிளைக்கோசைட்டு —(லினேசு நொதியம் / தானாகவே அழிவடைதல் (Autolysis))→ ஐதரேசயனிக் கமிலம்/ புரூசிக் கமிலம்

2. Hydrolysable Form ($CG_2$) அதாவது நீர்ப்பகுப்புக்குள்ளாகும் தன்மை. உதாரணமாக வெட்டுப்பட்ட கிழங்குகள் நீண்ட நேரத்துக்கு திறந்த வெளிச்சூழலில் வைக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள சயனேஜனிக் கிளைக்கோசைட்டு ($CG_2$) நீர்ப்பகுப்புக்குள்ளாகி ஐதரோசயனிக்கமிலமாக மாறிவிடும். இது நச்சுத்தன்மை வாய்ந்தது.

சயனேஜனிக் கிளைச்கோசைட்டு —(திறந்த வெளிச் சூழல் ↓ நீர்ப்பகுப்பு)→ ஐதரேசயனிக் கமிலம் (நஞ்சு)

நாள்பட்ட அல்லது வெட்டுப்பட்டு - நீண்ட நேரத்துக்கு திறந்த வெளியில் வைக்கப்பட்ட - மரவள்ளிக் கிழங்கு நச்சுத்தன்மையுள்ளதாக மாறுவதற்கு மேற்படி இருமுறையிலான தாக்கவிளைவுகளே காரணமாகின்றன.

இஞ்சிக்கிழங்கும் மரவள்ளிக்கிழங்கும் சேர்க்கப்படும் போது நச்சு விளைவுகள் ஏற்படுவதா என்பது பற்றி தெளிவான முடிவுக்கு வரப்படவில்லை. ஆனால், இஞ்சிக் கிழங்கில் லினேசு நொதியம் போன்ற (Linase Like Substance) ஒரு பொருள் இருப்பதாகக் கருதப்படுகிறது. இந்தப் பொருள் முதலாவது வகை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தன்மை வாய்ந்ததாக உள்ளதால் இஞ்சிக் கிழங்கும் மரவள்ளிக்கிழங்கும் (முக்கியமாக வெட்டப்பட்ட) உணவில் ஒன்றாகச் சேரும் போது நச்சுத்தன்மை ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. அவ்வளவுதான்.

எனவேதான், உயிருடன் விளையாடும் இந்த விஷப் (நச்சுப்) பரீட்சை வேண்டாம் என்று எமது முன்னோர் இவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து உண்ணவேண்டாம் என்று கூறி வைத்தனர் போலும்.

குறிப்பு :- மரவள்ளிக்கிழங்கை சமைக்கும்போது கிழங்கை வெட்டிக் கழுவி, கிழங்கை மூடுமளவுக்கு நீர்விட்டு 72 பாகை செல்சியஸ்ஸிலும் இலும் கூடுதலாக எரித்து மூடாமல் சமைத்தால் லினேசு நொதியம் அழிவடைந்து போகும். HCN எந்த வடிவத்தில் (Form) இருந்தாலும் ஆவியாகி வெளியேறி விடுகின்றது. நச்சு விளைவுகள் ஏதும் ஏற்படமாட்டாது. எனவே மரவள்ளிக் கிழங்கை சமைக்கும்போது அதை மூடுமளவுக்கு தண்ணீர் விட்டு திறந்தபடி (மூடாமல்) சமைப்பது அவசியமாகும்.

**டாக்டர்.சே.சிவசண்முகராஜா**
M.D(s)India, சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# கவிஞர் கம்பதாசனும் சிலோன் விஜயேந்திரனும்

பேராயர் எஸ். ஜெபநேசன்

கவிஞர் கம்பதாசன் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த கவிஞர். இவர் இன்று தமிழ் மக்கள் மத்தியில் மறக்கப்பட்ட கவிஞராக இருக்கிறார். ஒரு சில தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களே இவரின் கவித்திறனை உணர்ந்து தாம் எழுதிய இலக்கிய வரலாற்று நூல்களில் அவரைப்பற்றிக், குறிப்பிட்டுள் னர். கவிஞர் கம்பதாசனின் பெருமையை தமிழ் உலகுக்கு உணர்த்திய பெருமை சிலோன் விஜயேந்திரனுக்கு உரியது. கவிஞர் கம்பதாசனின் பாடல்களின் சிறப்பை உணர்ந்து அவர் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். கம்பதாசன் வாழ்க்கை வரலாறு, கம்பதாசன் கவிதைகள், கம்பதாசன் சிறுகதைகள், கம்பதாசன் காவியங்கள்,கம்பதாசன் திரைப்பாடல்கள் என்ற நூல்களை உருவாக்கி தமிழ்மக்களுக்கு அளித்தார். சிலோன் விஜயேந்திரன் இவ்வாறு கம்பதாசனை அறிமுகம் செய்திருக்காவிட்டால் கம்பதாசனை தமிழ் மக்கள் முற்றாகவே மறந்து போயிருப்பர்.

## சிலோன் விஜயேந்திரன்

சிலோன் விஜயேந்திரன் வயாவிளானைச்சேர்ந்தவர், கல்லடி வேலுப்பிள்ளையின் வம்சத்தில் உதித்தவர். கல்லடி வேலுப்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார். கலையார்வத்தினால் இளவயதிலேயே தமிழ்நாட்டிற்குச்சென்று குடியேறினார். சில தமிழ்ப் படங்களிலும் நடிப்பதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. சினிமா, கவிதை, நாடகம், இலக்கிய ஆராய்ச்சி என்பன அவருக்குத் தெவிட்டாத இன்பங்கள். தொ.மு.சி.ரகுநாதன் இவரைப் பற்றி எழுதிய வரிகள் மனங்கொள்ள வேண்டியவை.

"விஜயேந்திரன் தேனை மட்டுமே நாடியும், தேடியும் சென்று உண்டு மகிழும் வண்டைப்போல் நல்ல இலக்கியத்தையும் கவிதையையும் இனம் கண்டறிந்து போற்றி இன்புற்று மகிழும் நல்ல ரசிகர்."

சிலோன் விஜயேந்திரன் M.A.D.Litt பட்டங்களைப் பெற்றவர். ஆனால், அவருடைய வாழ்க்கை இன்பமாக இருக்கவில்லை.

- *கல்லடி வேலன் நகைச்சுவைக் கதைகள்.*
- *கலைஞர் திரை இசைப்பாடல்கள்.*
- *ஈழத்துக் கவிதைக் கனிகள்.*
- *அறுபதாண்டு காலத் திரைப்பாடல்களும், பாடலாசிரியர்களும்.*
- *இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும், கவிதைகளும்.*
- *மறக்கமுடியாத திரைப் பாடல்களும், பாடலாசிரியர்களும்*

முதலிய சிறந்த நூல்களை எழுதிய விஜயேந்திரனை வறுமை வாட்டியது. நோய் நலிவடையச் செய்தது!! துரதிர்ஷ்டம் துரத்தியது! ராஜீவ் கொலை வழக்கில் கூட சிக்குண்டு பல மாத அவஸ்தையின் பின் விடுதலையானார். 2004ஆம் ஆண்டு அவர் குடியிருந்த வீட்டில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக மரணமடைந்தார். அவர் உயிரோடிருக்கையில் தமிழுலகம் அவரைக் கண்டு கொள்ளவில்லை. இன்னும் சில வருடங்களில் சென்னைப் பல்கலைக்கழக மாணவி ஒருத்தி "நான் சிலோன் விஜயேந்திரனில்" பி.எச்.டி.பண்ணுறேன் மூலகங்கள் தாராளமாக இருக்கின்றன என்பாள். இதுதான் தமிழ் அறிஞர்களுடைய இன்றைய நிலை.

## சிலோன் விஜயேந்திரனைக் கவர்ந்த கம்பதாசன்

கம்பதாசன் ஒரு மஹாகவி, மஹாகவி பாரதி, பட்டுக்கோட்டை கண்ணதாசன் வரிசையில் வைத்துப் போற்றப்படத்தக்கவர்.

*"மின்னல் போலாகுமிந்த வாழ்க்கையே வான்*
*வில் போலுமே இளமையானதே ஆம்*
*துன்பக்கதை உனதே"*

இந்த வரிகளை ஒரு சாதாரண கவிஞன் எழுத முடியுமா? பல்கலைக்கழக புகுமுக வகுப்பில், மாணவர்கள், திரு. வி.செல்வநாயகம் எழுதிய "தமிழ் இலக்கிய வரலாறு" என்ற நூலை எழுத்தெண்ணிப் படிப்பார்கள். இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் பலருக்குக் கண்ணிற்படாத கம்பதாசன் திரு.செல்வநாயகத்திற்கு மகோன்னத கவிஞனாகத் தென்பட்டார். கம்பதாசனைப் பின்வருமாறு:

"கவிஞர் கம்பதாசன் பாரதி வழிவந்த புலவர்களுள் மிகச் சிறந்த புலவன் என்று பாராட்டப்படுகின்றார். அவரது இயற்பெயர் திரு. ராஜப்பா கம்பனிடத்திலே அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தமையினால் அவர் கம்பதாசன் என்று புனைபெயரால் அழைக்கப்படுகின்றார். அவரது கவிதைகள் அருணோதயம், கனவு, முதல் முத்தம் என்னும் தொகுப்புக்களாக வந்துள்ளன."

தொடர்ந்து ஏறத்தாழ இரண்டு பக்கம் கம்பதாசனைப் பற்றி எழுதியுள்ளார். பேராசிரியர் ச.மெய்யப்பன் "மறக்கப்பட்ட கவிஞர்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையிலே...
"கண்ணதாசனுக்கு முன்னோடி கம்பதாசன் தமிழிசைக்கு ஏற்றம் கொடுத்த ஏந்தல். திரை இசைக்கு வளம் சேர்த்த செம்மல். தத்துவக் கருத்துகளை உலகியல் கருத்துகளை அறநெறிகளை அழகிய தமிழில் தேனில் குழைத்துக் கொடுத்தார். அது தெவிட்டாத இசையாயிற்று. இறைவனை இன் தமிழால் பாடும் நெறி. திரை உலகம் மானுடனைப் பாடும் போது நெறியாயிற்று. கம்பதாசன் பாடல் மக்கள் செவி குளிரக்கேட்கும் தேன் இசைய வரவிற்று"

வ.ரா.காய்தல் உவதலற்ற சிறந்த விமர்சகர்; நாட்டுப்பற்றாளர்; சீர்திருத்தவாகி ஒழுக்கசீலர். அவரும் கம்பதாசனின் பாடல்களில் மெய்மறந்து தன் உள்ளக்கிடக்கையைப் பின்வருமாறு புலப்படுத்தியுள்ளார்.

"காளிதாசன் (அசல்), காளிதாசன் (பாரதியார்), பாரதிதாசன் (சுப்புரத்தினம்), கம்பதாசன் (ராஜப்பா). இவர்கள் நம் நாட்டு முதற்தர கவிஞர்கள். இவர்கள் பிறவிக் கவிஞர்கள். பயிற்சிக் கவிஞர்கள் அல்ல. இவர்கள் எல்லோருக்கும் சுதந்திரம்தான் மூச்சுக்காற்று. கட்டுண்டு கைகாட்டி வாழப்பெறாதவர்கள் இவர்கள். தாசர்களாக தங்கள் பெயரளவில் விளங்குவதுதான் ஆச்சரியமாயிருக்கிறது"

## சோகம் மலிந்த வாழ்வு

கம்பதாசன் 1916ஆம் ஆண்டு இந்தியாவில் திண்டிவனம் அருகாமையிலுள்ள கிராமமொன்றில் பிறந்தவர். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு. பின்னர் தமது பெயரை ராஜப்பா என்றும், கம்பதாசன் என்றும் மாற்றிக் கொண்டார். கலையார்வம் உந்தித்தள்ள இளமையிலேயே பள்ளிப்படிப்பை உதறித்தள்ளி விட்டு நாடக நடிகரானார். கவிதை அவருக்கு கைவந்த கலையாயிற்று. அவருடைய 28ஆவது வயதில் திரைப்படம் ஒன்றில் அவர் பாடல் இடம்பெற்றது. வாமனவதாரத், வேணுகானம், ஆராய்ச்சிமணி, பூம்பாவை, உதயணன், ஞானசௌந்தரி, மங்கையர்க்கரசி, இதயகீதம், வனசுந்தரி, ஆன் அவன், தந்தை, வானரதம், பாட்டாளியின்சபதம், அக்பர் முதலிய படங்களுக்கு அவர் பாடல்கள் எழுதிக்கொடுத்தார். இவற்றிலே பல ஹிந்திப்படங்கள் தமிழில் 'டப்' செய்யப்பட்டவை. கதாநாயகனோ, கதாநாயகியோ மூலப்பிரதியில் ஹிந்தியில் பாடுவாள். அவர்களின் வாயிலிருந்து ஹிந்தி மெட்டில் தமிழ்ப் பாடல் வருவதாக அமையவேண்டும். இதனைக் கச்சிதமாக செய்தார் கம்பதாசன். ஹிந்தி நடிக, நடிகையர் கொஞ்சு தமிழில்

*ஏ மாயக்காரா என் மனச் சோரா*
*உன் ஆசையால் துக்கம் போச்சே*
*உடல் எங்கும் பொங்கும் கடலாச்சே*

என்றும்

*வாழ்வின் உன்கோரிக்கை போலே*
*வரம் வாங்கியே வந்தேன்.*

என்றும் பாடுவார்கள். இந்த அற்புதத்திற்குக் காரணம் கம்பதாசன்.

கம்பதாசன் பல கலைஞர்களைப் போலவே செல்வம் வந்துற்றகாலை ஆடம்பரமாக வாழ்ந்தார். நண்பர்களுக்கு இல்லையென்னாது வாரி வாரி வழங்கினார். ஆனால் அவருடைய செல்வமும் சிறப்பும் குறைந்த பொழுது நண்பர்கள் ஓடி ஒளித்தனர். அவருடன் கூடிவாழ்ந்த சித்திரலேகாவும் அவரைவிட்டு விட்டுப்போய்விட்டாள் 1961ஆம் ஆண்டிற்குப் பின்னர் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், ஒளிப்பதிவு செய்பவர்கள் தமக்குள்ளே ஒவ்வொரு வட்டங்களை உருவாக்கி ஒருவருக்கொருவர் கைகொடுத்து வந்தனர். கம்பதாசனினால் எந்தவொரு வட்டத்திலும் சேரமுடியவில்லை. திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதும் சந்தர்ப்பங்கள் குறைந்தன. இவற்றையெல்லாம் மறக்க கம்பதாசன் மதுவை நாடினார். தமது 57 வயதில் அதாவது 1973இல் கயரோகத்தினாலும், ஈரல் அழற்சியினாலும் பீடிக்கப்பட்டு மரணமானார். மஹாகவி பாரதியின் இறுதி ஊர்வலத்தில் இருபதுபேர்தான் கலந்து கொண்டனர். கம்பதாசனின் முடிவு அதனைவிடப் பரிதா பமானதாகவிருந்தது. அவருடைய மகனும், மைத்துனரும் இன்னொரு தூரத்து உறவினரும் சேர்ந்து உடலைத் தூக்கிக்கொண்டுபோய் அடக்கம்செய்து திருப்பினர்.

## ஆண்-பெண் அன்பு

கம்பதாசன் அப்பழுக்கற்ற சமதர்மவாதி தொழிலாளிகள் உரிமை, தெய்வப்பாடல்கள், தத்துவப்பாடல் எனப்பல விடயங்களில் பாடல்களை எழுதியுள்ளார். ஆனால், அவர் பாடல்களில் தனிச்சிறப்புப் பெற்றவை ஆண் பெண் அன்பு பற்றி அவர் இயற்றியவை. இதனாலேதான் கவிமணி கம்பதாசனைப் பற்றிக் குறிப்பிடுகையில்.....

*காதலின் கூத்தையெல்லாம் - உன்தன்*
*கவிதையில் கண்டேன் ஐயா!*

என்று எழுதினார்.
பின்வருவன ஆண்- பெண் அன்பு பற்றி அவர் எழுதிய பாடல்களிற் சில:

*வானுலாவும் தாரை நீ என் இதயகீதமே*
*மாநிலமேல் ஜீவனாகும் இதயகீதம் நீயே*

*அழகாய் அலைமோதும் கடலின்*
*அமுதமாகும் உன் மொழியே*
*ஆடையின் ஜோதி வீசும்*
*அருணோதயம் உன் விழியே*

ஆனந்தமாக நாமே அன்பாகப் பாடுவோமே
கம்பதாசன் தலைவியின் விரகதாபத்தை வடித்தெடுப்பதில் வல்லவர்:

*கனவு கண்ட காதல் கண்ணீராச்சே*
*நிலா வீசும் வானில் மழை சூழலாச்சே*
*முன்னே எண்ணிப்பாராமல் நெஞ்சம் ஈந்திட்டேனே*
*எந்தன் ஆசையே இன்று என்னைக் கொல்லலாச்சே*
*உன்தன் காதலின் கனவெல்லாம் கண்ணீராச்சே*

தலைவன் தன் பிரிவாற்றாமையைப் பின்வருமாறு பாடுகின்றான்:

*இடர் சூழும் காதல் பாதை செல்லாதே*
*சுடர் போன்ற வாழ்வை இழந்தேங்கிடாதே*

தலைவியின் சோகம் பின்வருமாறு வெளிவருகின்றது:

*ஏகாந்தமாம் இவ்வேளையில்*
*எனை வாட்டுது உன் நினைவே*
*காற்றே துளிர் அசைக்கும்*
*என்னாசை கேட்கவும் அஞ்சிடுதே*

தலைவனின் நினைவில் தலைவி ஆனந்தமாகப் பாடுகிறாள்:
ஆற்றின் கரைதனிலே கண்ணன் என்னைக் கேலி செய்தானே

(நன்றி: கலைமுகம்)

## ஒலியின் குரல்

*தீபங்கள்*
*பேசத் தொடங்கின*
*மனிதர்கள்*
*குரல்களற்றுத் திணற*

*ஸ்பரிசங்களற்ற*
*தீபங்களிற்கு குரலிருந்தது*

*மௌனத்தின்*
*வேர்களை அறுத்துக்கொண்டு*
*துயரின் பாடல்*
*தொலையத் தொலைய*
*தீபங்களின் குரல்*
*காற்றில் எழுகிறது*

*அது*
*புனிதங்களின் மொழி*

*மனிதங்கடந்தவரின்*
*மறைமொழி*

*இப்போது*
*உயிரின் நுனிவரைக்கும்*
*இறங்குகிறது*
*தீபங்களின் குரல்*

*நிச்சயிக்கப்படாத*
*ஒரு கணத்தில்*
*தகர்ந்து போகிறது*
*தீபங்களின் குரல்*

*மனிதர் மீண்டும்*
*குரலுற்றார்*

*உயிர் எரியும் பாடல்*
*காற்றில் எழுகிறது*

த.அகிலன்

## கார்த்திகை இருபத்தேழு...

கார்த்திகைப்
பூக்களோடு
கண்ணீர் மல்க
கல்லறைக்
காவியங்களருகே
கார்த்திகை
இருபத்தேழில்...!

நெய்விளக்குகள் ஏற்றி
நெஞ்சுருக...
மெய்த்தெய்வங்களை
கைகூப்பி
வணங்குவோம்
கார்த்திகை
இருபத்தேழில்...!

வந்தவர்கள்
கல்லறைகளை
கட்டியணைத்து
அண்ணா அண்ணா!
அக்கா அக்கா!
தம்பி தம்பி!
தங்கை தங்கை!
அப்பா அப்பா!
அத்தான் அத்தான்! ...
என்று
ஒவ்வொருவரும்
உருகி உருகி
அழைக்கிறார்கள்
உணர்வுகள் உதிர...!

விடுதலை வெற்றிக்கு
வியர்வை சிந்தி
உழைத்த - இந்த
கல்லறைத் தீபங்கள்
"தமிழீழமே - நம்
தணியாத தாகம்"
என்றபடி
தலைசாய்த்து
தூங்குகின்றன...!

கல்லறைக்
கோயிலுக்கு
விண்மீன்கள்
விளங்கேற்றி
விம்முகின்றன
வேதனையில்...!

மேகங்கள் எல்லாம்
சோகங்கள் என்று
அழுகின்றன
மழையாக
விடுதலை விழுதுகள்
மீது...!

கு.பா.தீபச்செல்வன்
யாழ்.பல்கலைக்கழகம்.


TVS
நாடு முழுவதும் விரும்பிய
இடத்திற்குப் போய்வர லீட்டருக்கு
102* kmpl
TVS பெருமையுடன் அறிமுகப்படுத்தும்
starcity
THE SUPERSTAR
அறிமுக விலை
ரூ.77,000/- + VAT
2 வருட உத்தரவாதம்.
5 சேர்விஸ்கள் இலவசம்.
ஜக்கெட்டும் ஹெல்மட்டும்
இலவசமாக வழங்கப்படும்.
விரும்பிய நேரத்தில் நண்பர்களைச் சென்று சந்திக்க. தினந்தோறும் வீட்டுக்கும் வேலைத்தலத்திற்கும் இடையே மைல் கணக்கில் பயணம் செய்ய. இரவில் எந்த நேரமானாலும் பார்டிகளுக்குச் சென்றுவர... உங்கள் பயணத் தேவை எதுவாக இருந்தாலும், TVS ஸ்டார் சிட்டி மோட்டார் சைக்கிள் அருந்துணையாகும். எரிபொருள் பாவனையில் சிக்கனமானது. எத்தகைய கரடுமுரடான பாதைக்கும் உகந்தது. கவர்ச்சியான தோற்றம் கொண்டது. 100cc மோட்டார் சைக்கிள்கள் மத்தியில் TVS ஸ்டார் சிட்டி ஒளிவீசும் நட்சத்திரமாகும்.
RCF தொழில்நுட்பம். லீட்டருக்கு 102* kmpl ஓடும். 16 லீட்டர் கொள்ளத்தக்க பெற்றோல் தாங்கி. நீடித்துழைக்கும் எஞ்ஜின். ஜப்பானின் Keihein காபரேட்டர்
* பரீட்சார்த்த நிலைமைகளில்
கவர்ச்சியான சைலன்சர்
நீலநிற ஸ்பீடோமீற்றர்
விசேட றைட்-சுவிச் ஷொக்ஸ்
அகலமான டயர்
அதிசக்தி வாய்ந்த ஹெட் லைட்
TVS MOTOR CO GENUINE PARTS
நாடெங்கிலும் 200 க்கு மேற்பட்ட உதிரிப்பாக விற்பனை நிலையங்கள்
நாடு முழுவதும் சேவை நிலையங்கள்
TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
757, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.
தொலைபேசி: 011 4 614746 (10 தேடுதல் லைன்கள்)
ஃபெக்ஸ்: 011 4 614906
நகரக் காட்சியறை: 100, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 2.
தொலைபேசி: 4797207, 4797250
நிருவனங்களுக்கான விற்பனை: 011 4 734352

தேசிய ஏற்றுமதி சங்கத்தின்

# ஆண்டின் அதிசிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான விருது

# சிலோன் பிஸ்கட் லிமிடட் 2 தங்கம் 1 வெள்ளியை வென்றெடுத்துள்ளார்கள்



**தங்கம்**
பாரிய விவசாயப்பிரிவு
கௌரவ விருது

**தங்கம்**
அதிசிறந்த ஏற்றுமதியாளர்
விவசாயப்பிரிவு
கௌரவ விருது

**வெள்ளி**
அதிசிறந்த சகல
ஏற்றுமதிப் பிரிவுகள்

சிலோன் பிஸ்கட் லிமிடட் தேசிய ஏற்றுமதி சங்கத்தின் (N.C.E) பாரிய விவசாயப்பிரிவின் மூன்று பிரதான விருதுகளை வென்றெடுத்ததன் மூலம் மீண்டுமொருமுறை வியாபார உலகில் தங்கள் மகத்துவத்தை நிரூபித்துள்ளார்கள். இதன் மூலம் சிலோன் பிஸ்கட் லிமிடட் வெளிநாட்டு செலாவணியைப் பெற்று நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் தங்கள் முக்கிய பங்களிப்பையும் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

Munchee BISCUITS
சுவையுலகின் ராஜ கிரீடம்

Cecil LANKASOY TIARA Ritzbury CHOCOLATES

CBL
Ceylon Biscuits Limited